www.padippakam.com

# புதிய கலாச்சாரம்



ஹாலிவுட்

## பிரம்மாண்டமான பொய்
## கவர்ச்சிகரமான ஆக்கிரமிப்பு

படிப்பகம்

www.padippakam.com



# சோத்துக் கட்சி

அரசியலை அக்குவேறு ஆணிவேராகப் அலசிக் கொண்டிருப்பவரிடம் போய் நீங்க என்ன கட்சி சார்? என்றால், ''அட நீங்க வேற... நான் சோத்துக் கட்சி சார்'', என்று நகைச்சுவையாக நழுவிக் கொள்வதைப் பார்த்திருப்பீர்கள். அதுவெறும் நகைச்சுவை இல்லை. சாப்பிடுவதே ஒரு லட்சியமாக, சாப்பிடுவதற்கென்றே ஒரு கட்சி கட்டியது போல சிலர் 'சோத்துக்கட்சியாகவே' களத்தில் இருக்கிறார்கள்.

உங்கள் ஊர் உயர்தர உணவு விடுதிகளை ஒரு முறை வலம் வந்து பாருங்கள், அங்கு மேசையில் செங்கிஸ்கான் படையெடுப்பால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட பிரதேசம் போல மிச்சம் மீதம் கிடக்கும் உணவுத் துண்டங்களையும் குவிந்து கிடக்கும் தட்டுக்களையும் பார்த்து உங்களாலும் ஒரு முடிவுக்கு வர முடியும்.

பசிக்காகச் சாப்பிடுவது ஒரு வகை, ருசிக்காகச் சாப்பிடுவது இன்னொரு வகை. இந்த இரண்டாவது வகையினரைக் குறி வைத்து உணவுத் தொழில் உற்பத்தியாளர்கள் 'ஆவி' பறக்கப் புதுப்புது அயிட்டங்களை அவிழ்த்து விட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். சும்மாவா, ''பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும், இவை நாலும் கலந்து தருவதாகப் பகவானுக்கே மெனுகார்டு போட்ட மண்ணாயிற்றே.

என்ன, சுவையுணர்வைப் பற்றிய கேலிக்குரலாகப் படுகிறதா? சுவையுணர்வின் மீது மீளாக்காதல் கொண்டிருப்போர் பற்றிய ஒரு மேல் முறையீடு என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

உணவில் சுவை கூடாது என்பதல்ல; காய் கனிகளையும் கீரைகளையும் மேய்ந்து கொள்ளலாம் என்றோ, அவ்வாறு மேய்ந்து கொண்டிருக்கும் பிராணிகள் மீது பாய்ந்து கொள்ளலாம் என்றோ நாம் சொல்ல வரவில்லை.

மனித நாகரீகத்தின் வளர்ச்சியின் ஊடாகச் சுவையுணர்வு வளர்கிறது; ஆனால் இந்தச் சுவையுணர்வு பெரும்பான்மை மக்களின் உணவுப் பழக்கத்துடன் ஒத்துச் செல்லாமல், குடிமக்களில் சிலருக்கு, உடம்பிலிருந்து நாக்கு மட்டும் தனியே நீண்டு வளர்ந்து செல்கிறதே, இந்த விகாரம்தான் கொஞ்சம் கவலையளிக்கிறது.

நாக்கு, மொழியைப் பழகுவதற்க முன்பே சுவையைப் பழகிவிடுகிறது. ஆறு சுவைகளையும் சுவைப்பதற்குரிய சுவை நரம்புகள் நாவில் இருப்பதாய் ஆரம்ப வகுப்புகளிலேயே படம் போட்டுப் பாகங்களை விளக்கியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் இன்று உணவுப் பழக்கத்தில் அறுசுவை ஆயிரம் வகை சுவையாகி 'யாகாவராயினும் நாகாக்க' முடியாமல், மனமே ஒரு நாக்காக மாறி புதிய புதிய சுவைகளைத் தேடி அலைய ஆரம்பித்து விட்டது. ருசி வேட்டைக்காரர்களின் தட்டுத் தடுமாற்றங்களைப் போக்கி 'தட்டு' வரை கொண்டு போய்ச் சேர்க்கும் வேலையை தகவல் தொடர்புச் சாதனங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டன.

''சாப்பிட வாங்க'' என்று அலைவரிசையின் வழியாக, உலை வைத்து செய்து காண்பிக்கிறது சென்னைத் தொலைக்காட்சி. சன் டி.வி.யில் ஸ்டார் சமையல். இப்படி ஒவ்வொரு தனியார் தொலைக்காட்சியும் தனது நிகழ்ச்சி நிரலில் உள்ள கரம் மசாலா போதாதென்று புதிய வகை சமையலுக்கென்றே நேரம் ஒதுக்கி பார்ப்போருக்கு ருசி காட்டி வருகிறார்கள்.

பத்திரிகைகளிலும் விதம் விதமான சமையல் குறிப்புகள். குங்குமத்தில் வி.ஐ.பி. கிச்சன் என்று ஒரு பகுதி ஒதுக்கி பிரபலங்களின் கைப்பக்குவத்திற்குச் செய்முறை விளக்கம் சொல்லி வாசகிகளின் 'படைப்பாற்றலை'' தூண்டி விடுகிறார்கள்.

டி.வி.யில் ஒரு விளம்பரம்; கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பையன் ஒருவன் ஒரு ரன் அடிக்கும் போது ஒரு பிஸ்கெட்டைக் கடிக்கிறான். இரண்டு ரன்னுக்கு இரண்டு பிஸ்கெட், நான்கு ரன்னுக்கு நான்கு எனக் கடிப்பவன் கடைசியில் மொத்த பிஸ்கெட் பாக்கெட்டையுமே வெறி கொண்டு கடிக்கிறான். ''உங்களால் ஒன்றோடு திருப்தியடைய முடியாது'' என்ற வசனத்தோடு விளம்பரம் முடிகிறது.

சின்னப் பிள்ளைகளிடம் வெறும் வாயை மூடிக்கொண்டு ''ஆகா நல்ல இருக்கு'' என்று வாயை மென்று நாம் வேடிக்கை காட்டுவது போல இன்னொரு விளம்பரம்; தக்காளி சூப்பைக் கையில் வைத்துக் கொண்டு இது ஹாட்டா? இல்லை சுவீட்டா? என்று கேள்வி கேட்டு விடையேதும் சொல்லாமல் ''நீங்களே சுவைத்துப் பாருங்களேன்'' என்று உசுப்பிவிடுகிறது. என்ன சுவை என்று சொல்லி பார்ப்பவர்களை ஒரு முடிவுக்கு வரவைப்பதைவிட, வாங்கி அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டும் வியாபார உத்திதான் இது. விதம் விதமான திட திரவ உணவு வகைகள் விளம்பரத்தின் வழியாக நாக்கைப் பிடித்து இழுக்க, செய்து பார்க்க வசதியும், வாய்ப்பும் இல்லாதவர்கள் ''ஒரே ஒரு முறையாவது ருசி பார்த்து விடுவோமே'' என்று உணவு விடுதிகளுக்குச் சென்று மேசையின் முன்பு ஒரு வகைத் திகிலை அனுபவிக்கிற சுவையே தனியானது.

• ° •

ஒரு நடுத்தரமான உணவு விடுதி அது. அந்நிய நாட்டுக்குள் நுழையும் உளவாளி போலத் தயங்கித் தயங்கி வந்தவர் மேசைக்கு முன்பு அமர்ந்தார். அவர் கண்ணை முதலில் கவர்ந்தது பிளாஸ்டிக் பலகையில் தத்ரூபமாகத் தெரியும் உணவு வகைகள். பச்சை நரம்புகள் தெரிய தட்டு வடிவில் செதுக்கப்பட்டிருக்கும் வாழை இலை, அதற்கு

— தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 15
• குரல்: 5-6
• அக் - நவ '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# மீண்டும் பார்ப்பனத் திமிர்
# மீண்டும் தி.மு.க.வின் அரசின் கோழைத்தனம்!

"கோலெடுத்தால் குரங்காடும்" என்பது பழமொழி. இப்படியும் சொல்லலாம்: "பார்ப்பனப் பத்திரிக்கைகள் பேனா எடுத்தால் ஆடுவார் கருணாநிதி." இதற்குச் சமீபத்திய எடுத்துக் காட்டு, கோவில்களில் தமிழில் அர்ச்சனை என்று கூறிவிட்டு, பார்ப்பன ஏடுகள் அதைக் குறை கூறத் தொடங்கியதும் வெடவெடத்துப் போய் கருணாநிதி அரசு பின்வாங்குவதே ஆகும். மாநில சுயாட்சி, ஈழ அதரவு, தமிழ்மொழி, இன நலன் பாதுகாப்பு என்று எந்தப் பிரச்சினையானாலும் கருணாநிதி அரசு, தான் அறிவித்த கொள்கை நிலைப்பாட்டையே கூட தனக்குள்ள அதிகாரவரம்புக்குட்பட்ட வகையில் கூட அமல்படுத்த முடியவில்லை. ஏதாவது காரணத்தை முன்வைத்து ஆட்சியைக் கலைத்து விடவும், அதிகாரத்தை இழந்து விடவும் வாய்ப்புக் கொடுத்து விடக்கூடாது என்கிற பதைபதைப்பிலேயே தவித்துக் கொண்டிருக்கிறார். கருணாநிதி அரசின் இந்த பயத்தைப் பயன்படுத்திக் கொண்டு உருட்டி மிரட்டிக் காரியங்களைச் சாதித்துக் கொள்கின்றது பார்ப்பனக் கூட்டம்.

கடந்த செப். 24-ந் தேதியன்று சென்னை - மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் முதன் முறையாக தமிழில் இலட்ச அர்ச்சனை நடத்திருக்கிறது. அதில், ஆளும் கட்சிக்கும் அதன் தலைவர்களுக்கும் துதிபாடும் வரிகள் இடம் பெற்றிருக்கின்றன. உடனே, "கடவுளைப் போற்றியும் வணங்கியும் ஓத வேண்டிய அர்ச்சனையில் அரசியல் துதியும் அபத்தமும் புகுந்துவிட்டது. தமிழில் அர்ச்சனை செய்யும்படி அரசு ஆணை பிறப்பித்ததன் விபரீதம்தான் இவையெல்லாம்" என்று பக்தர்களின் பெயரால் கொதித்துக் குமுறுகின்றன பார்ப்பன ஏடுகளும், விசுவ இந்து பரிசுத் ஆர்.எஸ்.எஸ். கும்பலும்.

"சட்டப்படி நிதி மற்றும் நிர்வாக விசயங்களில்தான் இந்து சமய அறநிலையத்துறை தலையிட முடியும். பூஜை புனஸ்காரங்களில் தலையிடவோ, உத்திரவிடவோ அதற்கு உரிமை இல்லை" என்று கிராமக் கோவில் பூசாரிகள் பேரவை என்ற அமைப்பை நடத்தும் விசுவ இந்து பரிசத்தின் தமிழ்நாடு - கேரள பொதுச் செயலாளர் மணியன் எகிறுகிறார். அதையே கேள்விக் கணையாக வீசுகிறது ஒரு பார்ப்பன ஏடு. உடனே பதுங்குகிறார் அமைச்சர் தமிழ்க் குடிகமன். "இது உத்திரவில்லை. இதை ஒரு யோசனையாகத்தான் நாங்கள் முன்வைக்கிறோம்" என்று பேட்டி கொடுக்கிறார். சமசுக்கிருதத்திலேயே அர்ச்சனை கோருவோருக்குத் தவிர, தமிழில்தான் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று அரசு சுற்றறிக்கை அனுப்பியதாகவும், அது சட்டத்துக்கு புறம்பான குற்றம் என்றும் ஒரு பார்ப்பன நாளேடு புகார் கூறுகிறது. உடனே "அப்படி எதுவும் நடக்கவில்லை. தமிழிலேயே அர்ச்சனை என்பது அரசின் கொள்கை. பரிசீலினைக் கூட்டத்தில் அரசின் கொள்கைகளை வலியுறுத்தி சுற்றிக்கை அனுப்பினோம். கெடுவும் விதிக்கவில்லை மிரட்டவும் இல்லை. அந்தச் செய்தி தவறு" என்று ஒரு அதிகாரி மழுப்புகிறார்.

இறுதியாக ஆர்வக் கோளாறு காரணமாக அமைச்சரின் விருப்பத்தை மீறி அவரைக் "குஷிப்படுத்துவதற்காக யாரோ தவறு செய்து விட்டதாகக் கூறி பார்ப்பனப் பத்திரிக்கைகளுடன் தி.மு.க. அரசு ஒரு சமரசம் கண்டு விட்டது. "ஆமாம். தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்கிற அரசின் கொள்கையை அமுலாக்குவோம்" என்று அமைச்சரும் அதிகாரிகளும் ஏன் அடித்துக் கூறவில்லை? "சட்டப்படி அதற்கு இடமில்லை. உண்மைதான். இருக்கட்டுமே! அவசியமானதை, சரியானதை, நியாயமானதை அமுலாக்க சட்டத்தில் இடம் இல்லையானால் என்ன? சட்டத்தைத் திருத்துவோம்" என்று ஏன் அவர்கள் வாதாடவில்லை. மாநிலத்தில் பெரும்பான்மையும், மத்தியில் அவர்களின் கூட்டணியும் ஆளும் இந்தச் சமயத்தில் தாய்மொழியில் அர்ச்சனை செய்வதற்கு எந்தக் கட்சிதான் எதிர்ப்புத் தெரிவிக்கிறது பார்ப்போம் என்று ஏன் துணியவில்லை? இங்கே திராவிடக் கட்சிகளின் பிழைப்பு வாதமும் பதவிப் பேராசையும் முன் நிற்பதைக் காண முடிகிறது.

கருவறைக்குள் நுழையவும், அர்ச்சகராகவும் மற்றபிற சாதியினருக்கு உரிமை மறுக்கும் வகையில் தீண்டாமை அதிகாரத்தை பார்ப்பனருக்கு மட்டும் இந்திய அரசியல் சட்டம் வழங்குகிறது. அதேபோல சமசுக்கிருதம் தவிர தமிழ் உட்பட ஏனைய மக்கள் மொழிகள் எல்லாம் "நீசபாஷைகள்" என்று இழிவுபடுத்துகின்றன. அதைத் வெறும் சுற்றிக்கைகளால் ஒன்றும் செய்து விடமுடியாது.

ஆகம விதிகள் என்ற பெயரில் தீண்டாமையை பார்ப்பனர்களின் மத உரிமையாக அங்கீகரிக்கும் அரசியல் சட்டப் பிரிவை ஒழித்துக்கட்டினால்தான் இதற்கு சட்டரீதியாக முடிவு கட்ட முடியும். ஆனால் "புனிதம், தூய்மை, தேவபாஷை" என்ற பெயரில் மக்களையும், மக்கள் மொழியையும் இழிவுபடுத்தும் பார்ப்பனத் திமிரைச் சகித்துக் கொண்டு சட்டத்திற்காக நாம் காத்திருக்க வேண்டியதில்லை. பலாத்காரமாகக் கருவறைக்குள் நுழைவதன் மூலமும், தமிழில் - மக்கள் மொழியில் குரலெழுப்புவதன் மூலமும்தான் தீண்டாமையையும் மொழி இழிவையும் ஒழிக்க முடியும்!

படிப்பகம்

www.padippakam.com

# ஹாலிவுட்: பிரம்மாண்டமான பொய் கவர்ச்சிகரமான ஆக்கிரமிப்பு

"உங்களுக்குத் தேவை திறமையான பொறியியலாளர், யாரும் நினைத்திராத உருவகங்களை வடிக்கும் கணிப்பொறி வல்லுநர், இந்த ஊடகத்தைப் புரிந்து கொண்டு திரைக்கதை வார்க்கும் படைப்பாளி - இருந்தால் போதும், உலகம் வசப்படும்; ஆயிரம் கோடி டாலர் உங்கள் கூரையைத் துளைத்துக் கொண்டு கொட்டும்'' என்கிறார், ஹாலிவுட் படங்களுக்கு 'ஸ்பெஷல் எஃபக்ட்ஸ்' செய்து கொடுக்கும் கணினி மென்பொருள் நிறுவனம் ஒன்றின் அதிபர்.

நீல வானத்தைப் பார்த்து விட்டும், அடர்ந்த கானகத்தின் இருளைப் பயந்த வாறும் - நடித்து விட்டு, நடிகர்கள் போய் விடுவார்கள். வானத்தில் செவ்வாய் கிரகம் வெடிப்பதையும், காட்டிற்குள் டயோனசர் விழிகளை உருட்டுவதையும் கணிப்பொறி மூலம் உருவாக்குகின்ற டிஜிட்டல் - ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் வல்லுநர்கள் தான் இன்றைய ஹாலிவுட்டின் நட்சத்திரங்கள்.

### ஹாலிவுட் ஃபார்முலா

காதல், குடும்பம், கிராமம், பழிக்குப்பழி, சகோதர பாசம், தேசபக்தி போன்ற 9 ஃபார்முலாக் கதைகள் மட்டும் தமிழ்த் திரைப்படங்களில் உலவுவதாகச் சொல்வார்கள். ஹாலிவுட் படங்களும் கிட்டத்தட்ட அப்படித்தான்.

நேருக்கு நேர் துப்பாக்கிச் சண்டையில் வில்லனை வீழ்த்தும் கௌபாய், பெல்ட்டில் தொலைபேசி - பேனாவில் துப்பாக்கி - பார்வையினால் எந்தப் பெண்ணையும் படுக்கையில் வீழ்த்தும் ஜேம்ஸ்பாண்ட், சிலந்தி மனிதன் - வெளவால் மனிதன் - சூப்பர் மேன் போன்ற காமிக்ஸ் நாயகர்கள், மஃபியா அல்லது தீவிரவாதியை வென்று தர்மம் காக்கும் போலீசு - இவையெல்லாம் 'ஆக்ஷன்' படங்கள்.

கல்லறைப் பேய், டி.வி. பிசாசு, உருகும் மனிதன், டிராகுலா, ஈயாக - சிங்கமாக - கழுதையாக மாறும் மனிதன், கொடூரக் கொலையாளிகள் போன்றவை திகில் படங்கள்.

இயந்திர மனிதன், வேற்று கிரக வாசிகளுடன் நட்பு - போர், டயோனசர், ஏலியன்ஸ், எந்த காலத்திற்கும் சென்று வரும் தற்கால மனிதன், விண்வெளி சாகசங்கள் - போன்றவை 'அறிவியல்' படங்கள்!

மீதி குடும்பம், காதல், நகைச்சுவை, பாலுணர்வு போன்ற 'செண்டி மெண்ட்' படங்கள். இறுதியாக மேற்



சுறாமீனிலிருந்து டயனோசருக்கு ஸ்பில்பெர்க்கின் பரிணாம வளர்ச்சி

கண்ட அனைத்திலும் இழையோடியோ அல்லது தனிச்சிறப்பாகவோ எடுக்கப்படும் கம்யூனிச எதிர்ப்புப் படங்கள்.

இடம், பொருள், காலம் அறிந்து தனது மூலதனம், தொழில்நுட்பம், அரசியல் மேலாண்மை மூலம் சர்வதேச சந்தையை குறிவைத்து எடுக்கப்படும் இந்த 'வகை'ப் படங்களை வைத்துத்தான் உலகின் திரைப்பட ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கின்றனர் ஹாலிவுட்டின் பன்னாட்டு முதலாளிகள்.

### தொழில்நுட்பமே கலையாக!

அமெரிக்காவின் 'ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் மாளிகை' என்றழைக்கப்படும் 'இண்டஸ்டரியல் லைட் அண்ட் மேஜிக்' எனும் நிறுவனத்தின் அதிபர் ஜார்ஜ் லூகாஸ். 77-லிருந்து இவரால் வெளியிடப்பட்ட 'ஸ்டார் வார்ஸ்' வரிசைப்படங்கள் ஹாலிவுட்டிற்குப் புதிய திசை வழியைக் காட்டின. இதன் பின்னர் வந்த ஸ்டார் ட்ரெக், யங் ஷெர்லாக் ஹோம்ஸ், திஅபீஸ் போன்ற படங்களில் முதன்முறையாகக் கணிப்பொறி கிராஃபிக்ஸ், முப்பரிமாண டிஜிட்டல் முறை மூலம் காட்சிகளும், பாத்திரங்களும் உருப்பெற்றன. படத்தொகுப்பில் புதுமையையும், ஒலி - ஒளிச் சேர்க்கையில் துல்லியத்தையும் - வேகத்தையும் கொண்டு வந்தது அவிட், லைட் ஒர்க்ஸ் போன்ற நிறுவனங்களின் 'டிஜிட்டல் எடிட்டிங்' என்ற புதிய முறை. இதற்காகவே திரையரங்கில் பொருத்தப்பட்ட புதிய ஒலி உபகரணங்கள் பார்வையாளர்களை மயங்க வைத்தன.

இறுதியில் தொழில்நுட்பமே கலையானது. கலிபோர்னியா மாநிலத்தில் அமைந்துள்ள ஹாலிவுட் திரையுலகமும், கம்ப்யூட்டர் நகரமான சிலிக்கான் வேலியும் இணைந்த கூட்டணியின் 'சாதனை' இதுதான். தற்போது அமெரிக்கத் தமிழில் ஓடிக் கொண்டிருக்கும் ஸ்பில் பெர்க்கின் 'ஜுராஸிக் பார்க்', 'தி லாஸ்ட் வோர்ல்ட்' திரைப்படத்தின் பின்னணியும் இதுதான்.

'ஜாஸ்' வரிசைப் படங்களில் மனிதர்களை வேட்டையாடும் சுறாமீனைப் படைத்தபோது ஸ்பில்பெர்க்கின் வயது இருபத்தேழு. 23 வருடங்கள் கழித்து அவரது படங்களில் வேட்டையாடும் டயோனசர்தான் இடைக்காலத்தில் கலைத்துறையில் அவர் கண்ட பரிணாம வளர்ச்சி.

கற்பனை உருவகங்கள், இயற்கை, கனவுகளுக்குப் பொருத்தமான குழந்தைகள் ஸ்பீல்பெர்க்கின் படங்களில் தவறாமல் இடம் பெறுவர். 'முன்னேறிய மேற்குலக நாகரிகத்தின்' பார்வையில் மூன்றாம் உலகம் காட்டு வாசிகளாய் இருப்பதால் விரக்தியுற்ற தனது அமெரிக்கக் குழந்தைகளுடன் நட்பு கொள்ளும் தகுதியை வேற்று கிரக வாசிகளுக்கு அளிக்கிறார் போலும் ஸ்பில்பெர்க்! டயோனசரையும், வேற்றுக் கிரக வில்லன்களையும் வீழ்த்திக் காட்டும் அமெரிக்காவை உலகின் விடிவெள்ளியாகவும், லட்சிய நாடாகவும் மூன்றாம் உலகிற்குக் காட்டுகின்றனர் ஸ்பில் பெர்க்கும், ஏனைய ஹாலிவுட் இயக்குநர்களும்.

நன்மைக்கும் தீமைக்கும் நடைபெறும் போராட்டத்தில் நல்லது வெல்ல வேண்டும் என்ற அவா, திரையரங்கில் அமெரிக்க ஹீரோக்கள் வில்லனை வீழ்த்தும் போது கைதட்டுகின்றது. இதில் நல்லது எது, கெட்டது எது என்பதை அமெரிக்கர்கள் தீர்மானிப்பார்கள். அமெரிக்க நன்மையின் பிரதிநிதிகளாக ஆர்னால்டு, ஹாரிசன் போர்டு, ப்ரூஸ் வில்லிஸ், ஸ்டால்லான், மெல்கிப்ஸன் போன்ற


padippakam

www.padippakam.com

சூப்பர் ஸ்டார்கள் வருவார்கள்.

ஒரு படத்தில் எத்தனை நபர்களைக் கொல்கிறார்கள் என்பதை வைத்து இவர்களின் நட்சத்திர அந்தஸ்து உருவாகிறது. நாயகனின் போராட்டத்திற்கு நீங்கள் தார்மீக ஆதரவளிக்க கொடூரமாக ஒரு கொலை இருக்கும். கதையின் வேகத்தையும் கூட்ட அதிவிரைவு துரத்தல் காட்சியும் இடம்பெறும். இறுதியில் பெரும் குண்டு வெடித்து, கட்டிடங்கள் தகர்த்து அமெரிக்க நன்மை வெற்றி பெற்றதும் மந்திரத்தில் கட்டுண்ட பார்வையாளர்கள் வெறும் வாழ்க்கைக்குத் திரும்புகிறார்கள்.

**கனவும் நனவும்**

கார்சவாரி கூட கைகூடாதவர்களை விண்கலத்தில் ஏற்றி வெளியை ஊடுருவி வலம் வரும் வண்ணமயமான விண்வெளி அனுபவம் தாலாட்டுகின்றது. படம் முடிந்து வெளியில் வந்து பேருந்து நடத்துநரிடம் காசை நீட்டும் போதுதான் கட்டண உயர்வு நினைவுக்கு வருகிறது. அழகான மாந்தர்கள், எழிலான இருப்பிடம், உல்லாச வாழ்க்கையை நடத்திக்காட்டும் ஹாலிவுட்டின் சராசரி அமெரிக்க வாழ்க்கை மூக்கு வடியும் குழந்தைகள், சமையல் பாத்திரம் கழுவும் பெண்கள், வியர்வையில் நாறும் ஆண்களும் கொண்ட நமது நரக பூமியையை நினைத்து வெட்கப்பட வைக்கிறது; வெறுக்க வைக்கிறது. கணிப்பொறியில் உயிர்பெற்றுவரும் விதவிதமான கொடூர வில்லன்கள் ஏற்கெனவே விதியை நொந்து வாழும் நமது வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தன்னிரக்கம் எனும் புதிய பரிமாணத்தைச் சேர்க்கின்றனர்.

அவர்களுடைய நாகரீகத்தின் சின்னங்களான பெப்சியும், கோக்கும் பெட்டிக்கடை வரை வந்தாயிற்று. இளைய தலைமுறை பாப் கலாச்சாரத்தின் எம்.டி.வியும், அமெரிக்கக் கொள்கை பரப்பும் சி.என்.என் னும் ஓரளவு வீடுகளில் குதித்துவிட்டன. தினசரி 4 காட்சிகள் மூலம் நிகழ்த்தப்படும் திரையரங்க அமெரிக்கக் கனவு, தனது பிரம்மாண்டத்தின் மூலம் மெல்ல மெல்ல மூன்றாம் உலக மூளையில் ஊடுருவுகிறது.

அதற்காகத்தான் தொழில் நுட்பம், ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ், டிஜிட்டல் ஒலி. நம்மிடம் இருக்கும் சமூகத் தன்மையை உறிஞ்சி, எல்லையற்ற நுகரும் இயந்திரமாக மாற்றி, அதையே ரசனையாக, பண்பாக, வெறியாக மாற்றுவதற்குத்தான் அத்தனை முயற்சிகளும். இருப்பினும் குழந்தைகள் கண்டு களிக்கும் டயோனசர் படங்களைப் போய் வலிந்து குற்றம் காணுவதாய் சிலர் எண்ணக் கூடும்.

> ஒரு ஆண்டு முழுவதற்குமான தமிழ்த் திரையுலக வர்த்தகம் 300 கோடி ரூபாய். சராசரி ஹாலிவுட் மசாலாவின் செலவோ 400 கோடி. வெற்றியடையும் படம் சில ஆயிரம் கோடிகளை வசூல் செய்யும். காட் ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு கேளிக்கைத் தொழில் மூலம் பணம் பறிக்க அவர்களுக்குத் தடையே இல்லை.

அதற்கு தகவல் தொடர்பு - சேவைத் துறையின் ஒரு பிரிவான ஹாலிவுட்டையும் - அதன் எண்ணிலடங்கா உப துறைகளான கேளிக்கைத் தொழில்களையும் வைத்து பன்னாட்டு மூலதனம் நம்மைச் சுரண்டுவதைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

**ஆட்டி வைக்கும் மூலதனம்**

ஹாலிவுட் படங்களைத் தயாரிக்கும் எம்.சி.ஏ. நிறுவனத்தின் கேளிக்கைத் தொழில்களின் பட்டியலைப் பாருங்கள். திரைப்படங்கள், டி.வி. நிகழ்ச்சிகள், வீடியோ விளையாட்டு, கணனி பொழுதுபோக்கு மென்பொருள், இசை விற்பனை, கேளிக்கைப் பூங்கா, புத்தக விற்பனை, பரிசுப் பொருள் தொடர் கடைகள், ஆடம்பர நுகர்பொருள், கேசினோ கிளப்புகள், 368 திரையரங்குகள், உலகம் முழுவதும் திரைப்பட விநியோகம்.. என்று நீண்டு கொண்டே போகிறது. இந் நிறுவனத்தைப் போன்று பாரமவுண்ட், யுனைட்டட் ஆர்டிஸ்ட், வார்னர் பிரதர்ஸ், டுவெண்டியத் செஞ்சுரி ஃபாக்ஸ், கொலம்பியா பிச்சர்ஸ், நியூ லைன் சினிமா உட்பட அனைத்து ஹாலிவுட் நிறுவனங்களும் பன்னாட்டு முதலாளிகளின் கையில். ஒரு படம் வெற்றியடைந்தால் முன்னர் கண்ட அனைத்து வகைத் தொழில்களிலும் சரக்காக்கிக் காசாக்குவார்கள்.

ஒரு வருடம் முழுவதும் தமிழ்த்திரைப்படங்களின் வர்த்தகம் 300 கோடி என்றால் ஒரு சராசரி ஹாலிவுட் மசாலாவின் செலவு 400 கோடி. வெற்றியடையும் படங்கள் சில ஆயிரம் கோடிகளை வசூல் செய்யும். அற்பத் தடைகளையும் அழித்து, மிரட்டல் மூலம் காட் ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, உலக வணிகச் சந்தையில் கேளிக்கைத் தொழில்களின் மூலம் பணம் பறிப்பதற்கு அவர்களுக்கு எந்தத் தடையுமில்லை.

எனவேதான் உலகப் பங்குச் சந்தையில் ஆதிக்கம் வகிக்கும் அமெரிக்காவின் 'வால் ஸ்ட்ரீட்' என்பப்படும் வங்கிகள், நிதி நிறுவனங்கள், பங்குச் சந்தை தரகர்கள் அடங்கிய மூலதனத் தெரு ஹாலிவுட்டின் கடிவாளத்தையும் கையில் வைத்திருக்கிறது. ஹாலிவுட்டின் வர்த்தக சூதாட்டங்களுக்குத் தரகு வேலை செய்பவர் ஹாலிவுட்டின் பிரபலத் தரகர் மிச்சல் ஓவிட்ஸ்.

இவரைப் போன்று பல தரகர்கள் ஹாலிவுட்டில் அலைகின்றனர். பங்குச் சந்தையின் ஒழுக்கங்களான சூது, வஞ்சகம், கழுத்தறுப்பு, கால் வாறுதல் அனைத்தும் அடங்கியதுதான் ஹாலிவுட்டின் பிரம்மாண்டம். பட நிறுவனங்கள், நடிகர்கள், இயக்குநர்கள் அனைவரும் இந்த ஒழுக்கத்தின் மூலம் பிறந்து வளர்ந்தவர்கள்தான். ஹாலிவுட்டும், சிலிக்கான் வேலியும், வால் ஸ்ட்ரீட்டும் வெள்ளை மாளிகையின் பாதுகாப்போடு அமைத்துள்ள இந்த உலகளாவிய சுரண்டல் கூட்டணியில் புதிய வரவு ஸ்பில் பெர்க் ஆரம்பித்திருக்கும் 'ட்ரீம் வொர்க்ஸ்' நிறுவனம்.

பிரம்மாண்டமான டிஜிட்டல் ஸ்டுடியோ கட்டுவது உட்பட அனைத்து கேளிக்கைத் தொழில்களையும் விதம் விதமாக தயாரிக்க இருக்கும் ஸ்பில்பெர்க்கின் நிறுவனத்தில் முதலீடைக் கொட்டுவதற்கு ஓடி வருகிறார்கள் முதலாளிகள். "ஸ்பில்பெர்க்கின் நிறுவனத்தைக் கேள்விப்பட்டவுடனே 2 பில்லியன் டாலரோடு (7000 கோடி ரூபாய்) அவரைச் சந்திக்க விரைந்தேன். இன்று வெள்ளிக்கிழமை, மசூதிக்குப் போய் தொழ வேண்டும் என்பதால் விமானப் பயணத்தை தடுத்து விட்டார் என்தந்தை" என்கிறார் அரபு ஷேக் ஒருவர்.

மசூதி - தொழுகை என்று ஆச்சாரம் பார்க்கும் ஒரு அரபு ஷேக்கிற்கு அவ்வளவு ஆசை என்றால் சுரண்டலுக்கேற்ப மதிப்பீடுகளை



முன் அட்டை வடிவமைப்பு: சரவணன்

www.padippakam.com

உருவாக்கியோ ஒழித்தோ வரும் பன்னாட்டு முதலாளிகளுக்கு எவ்வளவு வெறி இருக்கும்.

வானொலிப் பெட்டி கூட வாங்க முடியாத மக்கள் வாழும் நாடுகளுக்கு மத்தியில்தான் 'ஜுராசிக் பார்க்' அனுபவத்தைத் தரும் கேளிக்கைப் பூங்காக்களை உருவாக்குகிறார் ஸ்பில் பெர்க். தலை பெருத்து, வயிறு வீங்கி, கால் சூம்பி நிற்கும் உயிருள்ள ஆப்ரிக்க குழந்தைகள் வாழும் உலகில்தான் விண்கலம் அனுப்புவதைவிடச் செலவு பிடிக்கும் மனித ரோபோ இயந்திரங்களுக்கு உயிர் கொடுக்கிறார்கள் ஸ்பெஷல் - எஃபெக்ட்ஸ் கலைஞர்கள். முதலாளித்துவம் உருவாக்கியிருக்கும் முன்னேறிய நாகரீகத்தின் இலக்கணம் இதுதான்.

### ஆக்கிரமிப்புக்கு துதிபாடி

''அமெரிக்காவின் பேரரசுக் கொள்கை என்பது அதன் வரலாற்றில் செல்விந்தியர்களை ஒழித்தும், கறுப்பர்களை அடிமைப்படுத்துவதிலும் இருந்து தொடங்குகிறது''. தன் தோற்றத்திலேயே ஆக்கிரமிப்புக் குணத்தைக் கொண்டிருக்கும் அமெரிக்க அரசின் வெளியுறவுக் கொள்கையைத் தான் தனது தோற்றத்திலிருந்தே பிரச்சாரம் செய்கிறது ஹாலிவுட். இதனால் தான் அமெரிக்க அரசு ஆண்டுதோறும் பல மில்லியன் டாலர்களை மானியமாக ஹாலிவுட் திரையுலகிற்கு வழங்குகிறது. பதிலுக்கு கடந்த 80 ஆண்டுகளில் ஹாலிவுட் செய்திருக்கும் நன்றிக் கடன், திரைமறைவுச் சதிவேலைகள் நடத்தும் ஏவல் நாயான சி.ஐ.ஏ.வின் பணிக்கு ஈடானது.

ரசியப்புரட்சி முடிந்து இளம் சோவியத் அரசு தன் எதிரிகளிடம் போராடிய காலம்; பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் வீரியத்தில் உலகெங்கும் கம்யூனிஸ்ட் கட்சிகள் உதித்தெழுந்த காலம். 'ஜனநாயகக் காவலனான' அமெரிக்க அரசு, ''போல்ஷ்விசத்திற்கு எதிராகவும், புலம் பெயர்ந்தோரையும் - ஏழைகளையும் நாம் எப்படி பணக்காரர்களாக மாற்றுகிறோம் என்பதையும் படமெடுங்கள்'' என்று ஹாலிவுட்டிற்கு 1921-இல் உத்தரவிட்டது.

அந்த உத்தரவுக்கு முன்பேயே கம்யூனிச எதிர்ப்புப் படங்களைத் தயாரித்து வந்த ஹாலிவுட் உலகில், தனது 'மாடர்ன் டைம்ஸ்' திரைப்படத்தின் மூலம் முதலாளித்துவ வாழ்க்கையின் குரூரத்தையும் அற்பத்தனங்களையும் தோலுரித்து அமெரிக்காவை உறுத்தத் தொடங்கினார் சார்லி சாப்ளின். பின்னர் 2-ம் உலகப் போரில் ரசியாவை ஆதரித்து அவர் செய்த பிரச்சாரத்தையும் வைத்து 'கம்யூனிஸ்ட் ஆதரவாளன்' எனக் குற்றம் சாட்டப்பட்டு சாப்ளின் மேல் 10 ஆண்டுகள் வழக்கு நடந்தது. இறுதியில் அமெரிக்காவை விட்டு வெளியேறினார்.

வெள்ளை மாளிகையின் முன் மண்டியிட்டவன்தான் அமெரிக்காவில் கலைஞனாக முடியும். சுதந்திர தேவி சிலையை நியூயார்க்க நகரில் பிரம்மாண்டமாக வைத்திருக்கும் அமெரிக்காவில் கலைஞர்களுக்கு வழங்கப்படும் சுதந்திரத்தின் அளவு இதுதான்.

2-ம் உலகப் போரில் 2 கோடி மக்களையும், அளவிலாப் பொருளையும் இழந்து ஹிட்லரை ஒழித்து மனித குலத்தைக் காப்பாற்றியது சோவியத் ரசியாவின் செஞ்சேனை. முதல் உலகப் போரில் தோற்றவர்களுக்கும் வென்றவர்களுக்கும் வட்டிக்குக் கடன் கொடுத்தே சம்பாதித்த அமெரிக்கா 2-ம் உலகப் போர் முடியும் தருவாயில்தான் கலந்து கொண்டது. ஹிரோஷிமா - நாகசாகியில் சோதனைக்காக அணுகுண்டு போட்டு சில லட்சம் மக்களைக் கொன்றதைத் தவிர அதன் பங்கு அதிகமில்லை. ஆனால் மேலை நாடுகள்தான் ஹிட்லரை வீழ்த்தியதைப் போன்று ஏராளமான சண்டைப் படங்களை பெரும் பொருட் செலவில் எடுத்து வெளியிட்டது ஹாலிவுட். 1950-களில் சோவியத் ஆதரவுடன் காலனிய நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெடித்த போதும் சிவப்பின் மீது காழ்ப்பினைக் கக்கி, 'அயர்ன் கர்ட்டையன், ரெட்டானுபில், மைசன்லூசன்' போன்ற படங்கள் வெளிவந்தன.

1960-களின் அமெரிக்க அதிபர்கள் கென்னடி முதல் நிக்சன் காலம் வரை நடைபெற்றது வியட்நாம் போர். பல லட்சம் துருப்புக்களை இறக்கியும், வியட்நாம் முழுவதும் நாபாம் தீக்குண்டுகளை வீசியும் மாபெரும் மனிதப் படுகொலை' நடத்திய அமெரிக்க இராணுவம் இறுதியில் தோல்வியுற்று நாடு திரும்பியது. தனது 23-வது வயதில் போரில் கலந்து கொண்ட ஆலீவர் ஸ்டோன் போரைப் பற்றி தயாரித்த திரைப்படமான 'பிளாட்டூன்' 1975-ல் வெளியானது. வியட்நாமில் போரிட்டு மடியும் அமெரிக்க இளைஞனின் உளவியல் துன்பத்தைப் பற்றிய படமது. வியத்நாமியர்களைச் சுட்டுப் பழிவாங்கும் அமெரிக்க இராணுவத்தை ஓரளவு சித்தரித்தாலும், ஸ்டோன் இந்தப் படத்தில் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்துப் பிரகடனம் ஒன்றும் செய்துவிடவில்லை. இருந்தும், இந்த படத்தைக் கூடத் தயாரிக்க ஹாலிவுட் மறுத்து விட்டதால் பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் வெளியிட்டார் ஸ்டோன். தேச பக்தியுடன் போராடிய அமெரிக்க இளைஞர்களைக் கொச்சைப்படுத்தியாக செய்தி நிறுவனங்கள் ஸ்டோனைக் கண்டித்தன.




கம்யூனிஸ்டுகள் கலைஞர்களை ஒடுக்குவதாக கோரஸ் பாடுகின்ற அமெரிக்க தாசர்களும், பேச்சுரிமை - எழுத்துரிமை - பெண்ணுரிமை - கருப்பின உரிமை - சுற்றுப்புறச் சூழல் போன்றவற்றில் அமெரிக்கா சாதித்திருப்பதாக ஆங்கிலப் பத்திரிகைகளின் நடுப் பக்கத்தில் கட்டுரை தீட்டும் ஆய்வாளர்களும்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

1980-களில் அமெரிக்கா எங்கெல்லாம் ஆக்கிரமிப்பு செய்ததோ, அதையெல்லாம் ஆதரித்த சண்டைப் படங்கள் சரமாரியாக வெளிவர ஆரம்பித்தன. 85-இல் சக் நாரிஸ், லீமார்வின் நடித்து வெளிவந்த 'டெல்டா ஃபோர்ஸ்' அதில் ஒரு திருப்புமுனை. கதை : லெபனான் தீவிரவாதிகள் ஒரு அமெரிக்க விமானத்தைக் கடத்தி பிரயாணிகளைப் பணயக் கைதிகளாக்குகின்றனர். அமெரிக்க இராணுவத்தின் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவான 'டெல்டா ஃபோர்ஸ்' ஹாலிவுட் பாணி சாகசங்கள் புரிந்து 600 அரேபிய வீரர்களைக் கொன்று, ஒரு வீரரை மட்டும் இழந்து பணயக் கைதிகளை மீட்கிறது. படத்தைத் தயாரித்த 'கெனான் பிலிம்ஸ்' நிறுவனத்திற்கு இஸ்ரேல் அரசு 3.6 மில்லியன் டாலரை மானியமாக அளித்து, ஜெருசலேத்தில் ஒரு ஸ்டுடியோவையும் கட்டிக் கொடுத்தது. உலக தாதாவின் பேட்டை ரௌடியான இஸ்

www.padippakam.com

ரேல் தனது இஸ்லாமிய எதிர்ப்புக் கொள்கைக்காக ஹாலிவுட்டைக் குளிப்பாட்டுவது இன்றும் தொடர்கிறது.

இதே காலகட்டத்தில் 'ராக்கி' என்ற குத்துச் சண்டை வீரராக சில்வெஸ்டர் ஸ்டல்லான் நடித்த படங்களில், ரத்தக் காயங்களோடு முகம் வீங்கிய நிலையிலும் - எதிராளிகளை கருப்பின, ரசிய வீரர்களை போராடி வெல்கிறார். இறுதிக் காட்சிகளில் அமெரிக்கக் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது. இவர் நடித்து வெளிவந்த 'ராம்போ' வரிசைப் படங்களில் ரசியர்களையும், வியத்நாமியர்களையும் பந்தாடி, அவர்களின் கொடூரங்களையும் முட்டாள்தனத்தையும், அமெரிக்க வீரனின் வெல்ல முடியாத சக்தியையும் உலகிற்கு எடுத்துக் காட்டுகிறார் ஸ்டல்லான்.

ஸ்டல்லான் அமெரிக்க இளைஞர்களின் மாடலானார். ஜீன்ஸ் போட்டு, ஜிம் முக்குப் போகும் ஆறடி அமெரிக்க இளைஞர்களெல்லாம் தம்மை ராம்போவாக நினைத்துக் கொண்டனர்.

இவ்வாறு அமெரிக்க ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு ஹாலிவுட்டின் கவர்ச்சியான தேசபக்தி நியாயம் சேர்த்தது. கம்யூனிஸ்டுகளையும், வியத்நாமியர்களையும், அரேபியர்களையும் அற்பப் புழுக்களைப் போலக் கொன்று பார்ப்பதில் தங்கள் வக்கிரங்களை ஒளிவு மறைவின்றிக் காட்டினார்கள். ஆனால் இந்தப் பிணம் தின்னிக் கழுகுகளின் உண்மைக் குணம் நாம் அறியாததல்ல. நிக்கராகுவாவின் துறைமுகங்களில் கண்ணி வெடிவைத்தும், லெபனான் - ஈராக் கிராமங்களில் டன் கணக்கில் குண்டுகள் வீசியும், பொருளாதாரத் தடையின் மூலம் மருந்தின்றி ஆயிரக் கணக்கான குழந்தைகளைக் கொன்றும், கிரானடா, மெக்சிகோ, ஹைட்டி, குவாட்டிமாலா, டொமினிக்கன், ஹோண்டூராஸ் போன்ற நாடுகளில் தனக்கு ஒத்துவராத ஆட்சிகளை முரட்டுப் பலத்தால் கவிழ்த்தும், இன்றுவரை கியூபாவை அச்சுறுத்தியும் வரும் இந்தக் கயவாளிகள்தான் நியாயவான்களாக, அமைதி விரும்பிகளாக, மாபெரும் வீரர்களாக ஹாலிவுட்டின் படங்களில் வலம் வருகின்றனர்.

**ஆக்ஷன் ஹீரோ யார்?**

ஹாலிவுட்டின் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் ஒவ்வொரு வியாழனன்றும் தனது புதிய படங்களின் தொகுப்பை அமெரிக்க அதிபரின் பார்வைக்கு அனுப்புகிறதாம். கோவில் திருவிழாவின் முதல் கௌரவம் பண்ணையாருக்குத்தான் என்பது போல. தேர்தல் பிரச்சாரத்திலிருந்து, பதவிகாலம் முடியும் வரை அமெரிக்க அதிபரின் ஒவ்வொரு அசைவும் விளம்பர நிறுவனங்களால் தயாரிக்கப்படுகிறது. ஆனால் தற்போது வரும் ஹாலிவுட் படங்களில் அதிபரே ஆக்ஷன் ஹீரோவாக வருகிறார். இந்தக் கொடுமையை யாரிடம் சொல்லி அழுவது?

'இன்டிபென்டன்ஸ் டே' படத்தில் பூவுலகை ஆக்கிரமிக்கும் வேற்றுக் கிரக வில்லன்களை, அதிபரின் தலைமையில் முறியடித்து ஜூலை 4-ல் (அமெரிக்க சுதந்திரதினம்) உலகத்துக்கே விடுதலை வாங்கித் தருகிறார்கள். இவ்வாண்டு வெளியான 'ஏர் போர்ஸ் ஒன்' படத்தில் ஜெட் விமானத்தைக் கடத்தும் அரேபிய தீவிரவாதிகளை ஜேம்ஸ்பாண்ட் பாணி சாகசம் புரிந்து அதிபர் வெல்லுகிறாராம். 6 மாதத்திற்கு முன்பு குதிரையிலிருந்தோ - குளியலறையிலோ விழுந்து நொண்டிக் கொண்டிருந்த பில்கிளிண்டன் இந்தப் படங்களை நிச்சயம் ரசித்திருப்பார்.

பொருளாதாரத்தில் அமெரிக்கவிடம் சரணடைந்த போலி கம்யூனிச நாடான சீனாவைக் கூட ஹாலிவுட் விடவில்லை. தாலாய்லாமாவின் வரலாறு, சீனாவை எதிர்த்துப் போராடும் திபெத் போன்ற கதைகளைக் கொண்டு தற்போது 5 சீன எதிர்ப்புப் படங்கள் தயாராகிறதாம்.

> ஹாலிவுட் தயாரிப்பாளர் சங்கம் ஒவ்வொரு வியாழன்றும் தனது புதிய படங்களை அமெரிக்க அதிபரின் பார்வைக்கு அனுப்புகிறதாம். தற்போது வரும் படங்களில் அதிபரே ஆக்ஷன் ஹீரோவாக வருகிறார். இந்தக் கொடுமையை யாரிடம் சொல்லி அழுவது?

மாபெரும் சமுத்திரங்களையும், பலவீனமான அண்டை நாடுகளையும் கொண்ட அமெரிக்காவிற்கு தற்போது எதிரி என்று சொல்லிக் கொள்ள யாருமில்லை. எனவே எதிரியை வென்று காட்டியே தேசபக்தியை வளர்த்த ஹாலிவுட், இப்போது தனது வில்லன்களை விண்வெளியில் தேடுகிறது. போராடுகின்ற விண்கல ஆயுதங்களைத் தருவதற்கு ஸ்பில்பெர்க், காமரூன், லூகாஸ் போன்ற ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் வல்லுனர்கள் தயாராக இருக்கின்றனர்.

**காலடியில் உலகச் சந்தை**

உலக வர்த்தக நிறுவனத்தைத் தோற்றுவித்த பிறகு, மேல் நிலை வல்லரசுகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் உலக மய ஆக்கிரமிப்புக்கு தடையேதுமில்லை. கடந்த பத்தாண்டுகளில் ஹாலிவுட்டும் உலகச் சந்தையை தன் காலடியில் கொண்டு வந்திருக்கிறது என்றால் அது படைப்புத் தரத்தினால் அல்ல; மூலதன - அரசியல் ஆக்கிரமிப்பினால் மட்டுமே.

இந்தியாவில் 8 ஹாலிவுட் நிறுவனங்கள் கிளைகளைத் திறந்திருக்கின்றனர். 'பெரு நகரங்கள் மட்டுமல்ல, போடிநாயக்கனூர் கூட முக்கியமான ஏரியா தான்' என்கின்றார் இந்நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி. 'லாஸ்ட் வோர்ல்ட்' தென்னிந்திய மொழிகளில் ஓடுகிறது. ஸ்பீடு திரைப்படம் கேரளாவில் 120 திரையரங்குகளில் ஓடியது. இனி வருடத்திற்கு 40 படங்கள் வர இருக்கின்றது.

பாரீஸ் நகரில் 'யூரோ டிஸ்னி லேண்ட்' திறக்கப்பட்டபோது அமெரிக்கக் கலாச்சாரத்தை அனுமதியோம் என்று பிரெஞ்சு மக்கள் எதிர்த்தார்கள். இன்று தங்கள் படங்களுக்கு திரையரங்குகள் கிடைக்காமல் ஐரோப்பிய திரைப்படத் தயாரிப்பாளர்கள் திண்டாடுகின்றனர். ஹாலிவுட்டிற்கு அடுத்தபடியாக திரைப் படங்களை ஏற்றுமதி செய்யும் ஹாங்காங்கும் இனி தேறாது என்கிறார் ஆசியாவின் சூப்பர் ஸ்டார் ஜாக்கிசான்.

உலகை வளைத்துவிட்ட ஹாலிவுட் தனது ஃபார்முலாப் படங்களுக்கு ஏற்ற திறமையாளர்களை மட்டும் உலகெங்கிலிருந்தும் கொண்டு வந்து விடுகிறது. கம்யூட்டர் நகரமான சிலிக்கான் வாலியிலும், விண்வெளி மையமான நாசாவிலும் இந்தியா உட்பட உலகின் வல்லுநர்கள் இருப்பது போலத்தான் ஹாலிவுட்டிலும். மூளை உழைப்பிற்கும், சந்தை விற்பனைக்கும் உலகமே அவர்களுக்குக் கடன்பட்டவர்கள் போலும்.

• • •

என்ன இருந்தாலும் ஹாலிவுட் படங்களைப் போல் யார் எடுக்க முடியும் என்கிறார்கள் சிலர். குருசேத்திரத்தில் பல்வேறு கதைகள் கேட்டும் அசையாத அருச்சுனன் சங்கு சக்கர கதாயுதங்களுடன் கிருஷ்ணன் பிரம்மாண்டமாக விசுவரூபமெடுத்துத் தரிசனம் காட்டிய பின் தான் பணிகிறான்; போருக்குச் செல்கிறான்.

''நான் வெல்லற்கரியவன்; பிரம்மாண்டமானவன்; வல்லவனுக்கே வாழ்வு'' என்று ஏகாதிபத்தியமும் அதைத்தான் சொல்கிறது. ரத, கஜ, துரக, பதாதிகளுடன் அவர்கள் வருகிறார்கள். இராணுவ ஆக்ரமிப்புக்கு முப்படை; சதிக்கு சி.ஐ.ஏ; துரோகத்திற்கு தன்னார்வக் குழுக்கள்; பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு ஆறாவது படையாக - ஹாலிவுட்.

● இளநம்பி

www.padippakam.com

# சுதாக்கா கிராமம்:
# இஸ்லாத்தின் மனுதர்மம்

சன்னரக கோதுமை, பாசுமதி அரிசி என்ற ஹரியானாவின் சிறப்பு விவரங்களைக் கடந்து கரடு முரடான பாதைகளைத் தாண்டி, கொஞ்சம் உள்ளே வந்தால் இந்தியாவின் உண்மை விவரத்தைக் காட்டும் அந்தக் கிராமத்தின் பெயர் சுதாக்கா.

புழுதி படிந்த அந்தக் கிராமம் இப்போது தான் கட்டிக்காத்த 'அமைதியை' இழந்து விட்டது. ஆணாதிக்கத்தையும், சாதி கட்டுக்கோப்பையும் ''காருள்ள அளவும், கடல் நீருள்ள அளவும்'' காப்பாற்ற முடியும் என்றிருந்தவர்களின் கனவில் இப்போது மண் விழுந்து விட்டது.

கல்லடிபட்டு சொல்லடிபட்டு காட்டுமிராண்டி கால சமுதாயத்தைக் கடைத்தேற்ற வந்தவர் என்று சொல்லப்படும் நபிகள் நாயகத்தின் போதனைகளை, இசுலாம் மதத்தை தழுவிக் கொண்ட அந்த முஸ்லீம் கிராமமே கம்போடும், கத்தியோடும் போர்க்கோலம் பூண்டு நிற்கிறது இப்போது, ஏன்?

நடப்பதற்கும் அருகதையற்ற தமது கிராமத்துப் பாதையைச் சீரமைத்து, சாலை வசதி கேட்டா, இல்லை. சாதி மாறித் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்ற அந்த கிராமத்தின் 'நடத்தையைக் கெடுத்து விட்ட' ஒரு பெண்ணை வேட்டையாட ஊரே திரண்டு ஒலிக்கிறது ''எங்கே அந்த நடத்தை கெட்டவள்?''

தமது பெண்கள் அரபு சேக்குகளுக்கும், பண முதலைகளுக்கும் காசுக்காகக் காணிக்கையாக்கப் பட்ட போது துள்ளி எழாத சுதாக்கா வாசிகள், இப்போது கம்பைச் சுழற்றுவதற்கு காரணம் மெய்மூன் என்ற கீழ்சாதிப் பெண், இத்ரிஸ் என்ற மேல்சாதி ஆணைத் திருமணம் செய்து கொண்டதுதான். இத்ரிஸ் விவசாய வேலை செய்யக்கூடிய மியோ எனும் மேல் சாதிப்பிரிவைச் சார்ந்தவர். மெய்மூன் கறிவெட்டும் தொழில் செய்யக் கூடிய குரேஷி எனும் கீழ்ச் சாதி. ஆச்சாரமான முஸ்லிம் கிராமம் அனுமதிக்குமா? இத்ரிஸூம், மெய்மூனும் வெளியூர் சென்று சட்டப்படி திருமணம் செய்தனர். பக்கத்து ஊரில் உள்ள உறவினர் வீட்டில் அடைக்கலம் புகுந்து எதிர்கால வாழ்க்கை பற்றிய குழப்பத்தில் ஓடியது இரண்டு நாட்கள்.

இந்தத் திருமணத்திற்கு இத்ரிஸின் முதல் மனைவி எதிர்ப்புக் கூற வில்லை. ஆம்! இத்ரிஸ் ஏற்கனவே திருமணமானவர். மெய்மூன் அவருக்கு இரண்டாவது மனைவிதான். ஆனால் அதற்காக சுதாக்கா கிராமத்து ஆண்கள் கோபப்படவில்லை. ஏனெனில் அவர்களெல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளைக் கொண்டவர்கள் தான். அவர்களது ஒரே பிரச்சினை - சாதி.

மேய்ப்பர்களின் கட்டுப்பாட்டை மீறி வழி மாறிய கறுப்பு ஆடான மெய்மூனைப் பழிதீர்க்க, அவள் இருக்கும் இடம் தேடி படை எடுத்து வந்தது சுதாக்காவின் நாட்டாண்மை தலைமையிலான ஒரு கும்பல்.

ஒழுக்கம் கெட்ட ஷேக்குகளையும், கனவான்களையும் மன்னிக்க மார்க்கத்தின் மனசு இளகும். ஆனால் 'சாதியின் ஒழுக்கத்தை'ச் சட்டமே வந்தாலும் விடமாட்டோம் என்று அவர்கள் தமது புனிதக் கடமையை மெய்மூனை இழுத்து வந்து நிறைவேற்றினார்கள். கும்பலாக வீட்டை உடைத்து கையைப் பிடித்து இழுத்த போது மதத்தின் கருணையை எதிர்பார்த்து ஏங்கின மெய்மூனின் விழிகள்; அங்கே கருணை கற்பழிப்பாய் வடிவெடுத்தது.

''என்னை ஒரு ஜீப்பில் தூக்கிப் போட்டார்கள். சுதாக்கா கிராமத்தின் நாட்டாமை உட்பட 12 பேர் கற்பழித்தார்கள். கற்பழிப்பு தொடர்ந்து நடந்தது. நபர்கள்தான் மாறினர். மயக்கம் தெளிந்த நிலையில் கண் விழித்த போது என் மேல் இன்னொரு ஆண் உடல் கிடந்தது... அனைவருமே எனது கிராமத்தைச் சேர்ந்தவர்கள்'' மெய்மூன் விவரித்த கொடூரத்தை எழுதிக்காட்ட வார்த்தைகளால் முடியாது என்கிறார் தேசிய மகளிர் கமிசன் ஊழியர்.

பாலியல் வெறித்தாக்குதல் மட்டுமல்ல, உடம்பு முழுக்க கத்தியால் கீறியும், மறைவிடங்களை வெட்டியும் தாக்கியிருக்கின்றனர். மெய்மூனின் பின் கழுத்தில் கறி வெட்டும் கத்தியால் வெட்டியதில் அவளுக்கு பார்வைக் கோளாறு ஏற்பட்டுள்ளது. கறி வெட்டும் சாதியிலிருந்து கொண்டு 'வழிமாறிய' மெய்மூனுக்கு சாதிப் புனிதர்கள் வழங்கிய தண்டனையும் கறிவெட்டும் கத்தியாலேயே அரங்கேறியது. இதைக் கண்டு எந்த இறைத் தூதரும் இறங்கி வரவில்லை, குதறி எறியப்பட்ட மெய்மூனை வயலில் கண்டு காப்பாற்றியது பக்கத்து ஊர் பெண்கள் தான்.

திருமணமாகி இரண்டு மாதங்கள் கடந்த பின்னும், மெய்மூனும் இத்ரீசும் சுதாக்கா கிராமத்தை விட்டே ஓடிவந்து விட்ட பின்னும், அவர்கள் நிம்மதியாக எங்கும் வாழ முடியவில்லை; நடமாட முடியவில்லை. மெய்மூன் டில்லியிலுள்ள தேசிய மகளிர் கமிசனுக்குப் புகார் செய்தான்.

உயர்மட்ட அமைப்பான தேசிய மகளிர் கமிசன் வழக்கமாக இத்தகைய புகார்கள் வரும்போது அவற்றை சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கக் கோருமேயன்றி நேரடியாகக் களத்தில் இறங்காது. ஆனால் மெய்மூனின் துயரக் கதை அவர்களையும் அசைத்துவிட்டது.

இதற்கிடையில் ''மெய்மூனை தேடிப் பிடித்து எங்களிடம் ஒப்படை'' என்று அவர்களிருவருடைய பெற்றோரும் சுதாக்கா கிராமத்தில் கட்டிவைத்து அடிக்கப்படுவதாக தேசிய மகளிர் கமிசனுக்குத் தகவல் வந்தது. 'அவர்களைக் காப்பாற்றுங்கள்' என்று கதறினாள் மெய்மூன்.

என்னதான் செய்வார்கள் பார்த்து விடுவோம் என்று இத்ரிசையும், மெய்மூனையும் அழைத்துக் கொண்டு போலீஸ் பாதுகாப்புடன் ஒரு காரில் சுதாக்கா கிராமத்திற்கே புறப்பட்டார் தேசிய மகளிர் கமிசன் உறுப்பினர் சையதா சையுதீன் ஹமீது. கோபமும் ஆற்றாமையும் பொங்க அங்கே நடந்த நிகழ்ச்சிகளை விவரிக்கிறார் ஹமீது.

''இத்ரீசின் வீட்டு வாசலில் எங்கள் கார் நின்ற மறுகணமே நூற்றுக்கணக்கானோர் எங்களைச் சூழ்ந்து கொண்டனர்.

''எங்கே அவள்? அவளை எங்களிடம் ஒப்படையுங்கள்.''

''எதற்காக ஒப்படைக்க வேண்டும்? அவர்களுடைய பெற்றோர்களை ஏன் துன்புறுத்துகிறீர்கள்? இதென்ன நியாயம்? அவள் வயது வந்தவள். அவளுக்கு விருப்பமானவனைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறாள். இதிலென்ன தவறு?''

''கோத்திரம் சரியில்லை.''

''இசுலாத்தில் ஏது கோத்திரம்?''

''அவள் குரேஷி சாதி; அவன் மியோ சாதி. இந்தத் திருமணத்தை அனுமதிக்க முடியாது.''

''மார்க்கத்தில் நம்பிக்கை வைப்ப



படிப்பகம்

www.padippakam.com

வர்கள் எல்லோரும் சமமானவர்கள் என்று தனது தூதர் மூலம் அல்லா ஆணையிடவில்லையா? நீங்களெல்லாம் முஸ்லீம்களில்லையா?''

''ஆமாம். அதற்கென்ன இப்போ?''

பேசிக் கொண்டிருக்கும் போதே ஊர்ப் பெண்கள் கூட்டம் கூட்டமாக வெட்டுக் கிளிகள் போல வந்து எங்கள் மீது கவிந்து விட்டனர். கதறத் தொடங்கினர்.

''அவளைக் கொடுத்துவிடுங்கள். எங்கள் ஊர்ப் பெண்களுக்கு நிச்சயமான திருமணங்களெல்லாம் நின்றுவிட்டன. இந்த ஊரே நடத்தை கெட்ட ஊர் என்கிறார்கள். கல்யாணமான பெண்களைக் கைக் குழந்தையோடு வாழாவெட்டியாகத் துரத்தி விடுகிறார்கள். அவளைக் கொடுத்து விடுங்கள்'' - எங்கள் கால்களையும் கைகளையும், கழுத்தையும் நூற்றுக்கணக்கான கைகள் மொய்த்துக் கொண்டன. எங்களுக்கு மூச்சுத் திணறியது.

இன்னும் வெட்டுக் காயங்கள் கூட ஆறாத நிலையில் தனது பெற்றோரையும், மாமனாரையும் காப்பாற்றுவதற்காக எங்களுடன் வந்த மெய்மூன் நடுங்கியபடியே காரின் ஒரு மூலையில் ஒடுங்கிக் கொண்டாள். போலீஸ்காரர்களோ செய்வதறியாமல் நின்றார்கள்.

''உலகமே குறுக்கே வந்தாலும் எங்கள் ஊர் பிரச்சினையை விட்டுக் கொடுக்க மாட்டோம்'' என்று சத்தம் போட்டார் ஒரு ஹாஜி. ''மரியாதையாக எங்கள் பெண்ணை ஒப்படைத்து விடு; இல்லையேல் இது இன்னொரு காஷ்மீராகும்'' என்று யாரோ கத்தினார்கள்.

நாங்கள் காருக்குள் ஏறினோம். உடனே அந்தக் கும்பல் காரை அப்படியே தூக்கி உலுக்கியது. கதவை உடைத்துத் திறந்து எங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, ஒரு கறித்துண்டைப் போல மெய்மூனை இழுத்துச் சென்றது.

எங்களைச் சூழ்ந்திருந்த அந்த நூற்றுக்கணக்கான உடல்களெல்லாம் காற்றில் கரைந்தது போலக் காணாமல் போய்விட்டன. திடீரென்று இப்போது மயான அமைதி. நாங்களும், எங்கள் வக்கீலும், டிரைவர் சாதிக்கும், நடுக்கத்திலிருந்த போலீஸ்காரர்களும் தனியே நின்று கொண்டிருந்தோம். இத்ரிஸ் காரின் டிக்கியில் ஒளிந்து கொண்டிருந்தார்.

எங்கள் கார் டில்லிக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. வெட்கம் கெட்ட கண்ணீர்த் துளிகள் எங்கள் கன்னங்களில் வழிந்து கொண்டிருந்த போது, அலங்கார விளக்குகள் மின்னும் தலைநகரத்திற்குள் எங்கள் கார் நுழைந்து கொண்டிருந்தது.

ஆம்! அன்று சுதந்திரத்தின் பொன் விழா. டில்லி விஜய் சதுக்கத்தில் பொன் விழாக் கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடந்து கொண்டிருந்தன. ஆனால் இந்த ஐம்பது ஆண்டுகள் சுதாக்காவில் என்ன மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளன?

இறைத் தூதரின் வருகைக்கு முந்தைய அராபிய தீபகற்பத்தை, காட்டுமிராண்டித்தனமும், இருளும், பயங்கரமும் நிறைந்த அந்தச் சமூகத்தைத்தான்



**கசாப்புக் கத்தியின் வெட்டுக் காயத்துடன் மெய்மூன்**

'சுதாக்கா' எங்களுக்கு நினைவூட்டியது. அந்த இருட்டின் இதயத்திற்கு எந்த இறைத்தூதரும் இதுவரை விஜயம் செய்ததில்லை போலும்!''

— என்று கண்ணீருடன் முடிக்கிறார் சையதா சையுதீன் ஹமீது.

ஆணாதிக்க வெறியும், சாதியக் கட்டுக்கோப்பும் கோலோச்சும் சுதாக்கா போன்ற கிராமங்களில் இறைத்தூதரேயானாலும் துப்பாக்கி இல்லாமல் நுழைய முடியாது என்பதுதான் நிலைமை.

இச்சம்பவம் குறித்து உள்துறை அமைச்சருக்குப் புகார் செய்து காவல் துறை நடவடிக்கை மூலமாக மெய்மூனை மகளிர் கமிசன் மீட்டுவிட்டதாகப் பின்னர் வந்த பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

ஆனால் எத்தனை மெய்மூன்களை இவ்வாறு மீட்பது? மெய்மூனின் காயங்களுக்கு யார் பதில் சொல்வது?

இசுலாம் வெறும் மதமல்ல, ஒரு மார்க்கம், நல்வழிகாட்டும் பாதை என்றெல்லாம் பொழிப்புரை போடுபவர்கள், மெய்மூனின் காயங்களுக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும். எந்த தவறைச் சுட்டிக் காட்டினாலும் ''இப்படியெல்லாம் குரானில் இல்லை - ஹதீஸில் இல்லை'' என்று புத்தகத்தைக் காட்டி பொறுப்பாய் மதத்திற்கு வக்காலத்து வாங்குகின்றவர்கள், இப்படிக் குற்றமிழைத்தவர்களை மதத்தை விட்டே விலக்க முன் வருவார்களா? குற்றமிழைத்தவர்களை எல்லாம் நீக்க ஜமாத்தைக் கூட்டி விசாரணை போட்டால் கடைசியில் மதமே இருக்காது என்பதுதானே உண்மை.

''மதம் சரியாகத்தானிருக்கிறது. அதை அமல்படுத்தும் மனிதன்தான் சரியில்லை'' என்ற பித்தலாட்டமான பதிலை இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்குச் சொல்லப் போகிறார்கள்? இந்தப் பதிலால் மெய்மூன்களுக்குக் கிடைக்கும் நியாயம்தான் என்ன?

'ஆண்களின் உணர்ச்சிகள் குண்டுகள் நிரப்பப்பட்ட துப்பாக்கிகள் போல (Loaded Gun). அதைத் தூண்டும்படி உடல் தெரிய பெண்கள் உடை அணிந்தால் அபாயம் நேரிடும். அதற்காகத்தான் கட்டுப்பாடுகள்' - என்கின்றனர் ஆப்கானிஸ்தானத்து த்லிபான்கள். இங்கே அரக்கோணத்திலிருக்கும் மதப்புனிதர்களின் கருத்தும் இதுதான்.

மெய்மூன் தனது உடலை முழுக்க பர்தாவால் மூடித்தான் இருந்தாள். மூடப்பட்டிருந்த, உடலைத் திறந்து பார்த்து வேட்டையாடியது வேற்று மதத்தவர்கள் அல்ல; முஸ்லீம்கள் தான். இசுலாத்தால் ஏன் கட்டுப்படுத்த இயலவில்லை?

இது ஏதோ புனிதப்பயணத்தில் தவறுதலாக ஏற்பட்டுவிட்ட விபத்தல்ல. ஷரியத் ஷபானு வழக்கு, அமீனாவை அரபு சேக்குக்கு விற்பது, 'கீழ் சாதி' மெய்மூனை தோலை உரிப்பது வரை, தனது மத உரிமையாகக் கொக்கரித்துக் குரல் எழுப்பும் ஆணாதிக்க, சாதிவெறியர்களின் திட்டமிட்ட தாக்குதல். இதனை எதிர்கொள்ள பெண்களும் தமது உணர்ச்சிகளைத் துப்பாக்கிகளில் நிரப்பிக் கொள்வதைத் தவிர வேறு 'மார்க்கமில்லை' ■ சுடர்விழி



படிப்பகம்

www.padippakam.com

**நூல் அறிமுகம்:**

தனது சொந்த வாழ்க்கையின் சொகுசுகளை ஒரு துளிகூட காய்ந்துவிடாமல் ருசிப்பவர்களும், தனது எதிர்காலத்திற்கும் தனது பெண்டு பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும் கான்கிரீட் அடித்தளம் அமைத்து உறுதி செய்து கொண்டவர்களும் "என்ன செய்தார்கள் இந்த கம்யூனிஸ்டுகள்?" என்ற கேள்வியை ரொம்பவும் ஆக்ரோசமாகக் கேட்கிறார்கள்.

ஆனால் தாங்கள் கொண்டிருந்த லட்சியத்திற்காக, மக்கள் விடுதலைக்காகத் தனது சொந்த வாழ்வையும், உயிரையும் இழக்கத் தயாராகவிருந்த தொண்டர்கள் எந்த இயக்கத்தில் நிறைந்திருந்தார்கள் என்ற கேள்வியுடன் நவீன கால வரலாற்றைப் புரட்டினால், உலகெங்கும் அது கம்யூனிஸ்டுகளின் தியாக வரலாறாக, போராட்ட வரலாறாகவே இருக்கக் காணலாம். இந்தியாவிலும் இது அப்படித்தான்.

ஆரம்பகால இந்தியப் பொதுவுடைமை இயக்கம் பின்னாளில் நாடாளுமன்ற இயக்கமாகச் சீரழிந்து விட்டாலும், துவக்க காலப் பொதுவுடைமை இயக்கப் போராளிகளின் வரலாறு, தியாகத்திற்கும் போர்க்குணத்திற்கும் சான்று பகர்கிறது.

தோழர் அமீர் ஐதர் கானின் "தென்னிந்தியாவைக் கண்டேன்" எனும் தன் வரலாற்று நூல் அத்தகையதோர் வரலாற்றுச் சான்று.

எளிய பஞ்சாபி முஸ்லீம் குடும்பத்தில் பிறந்தவரான கான், சர்வதேச கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரதிநிதியாக ரசியாவில் சிலகாலம் செயல்பட்டபின் இந்தியா திரும்பினார். தென்னிந்தியாவில் கட்சியை உருவாக்கும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. சென்னைக்குக் கிளம்பினார் கான்.

மீரட் சதி வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டிருந்ததால் தமிழகத்திலும் தலைமறைவாகத்தான் இவர் வாழ வேண்டியிருந்தது. புனை பெயரோ சங்கர். தமிழோ அறவே தெரியாது.

பஞ்சாபி முஸ்லீமாகப் பிறந்து புனைபெயரை இந்துப் பெயராக வைத்துக் கொண்டு, தமிழகத்தில் இந்து சாதிய சம்பிரதாயங்களைப் பற்றி ஏதும் தெரியாமல், மொழியும் தெரியாமல் சென்னையில் வந்து இறங்கினார். அறிமுகத்திற்காக சொல்லப்பட்ட ஒரேயொரு நபரும் எதுவும் செய்ய இயலாதெனக் கைவிரித்து விட்டார். சென்னை இப்படித்தான் அவரை வரவேற்றது.

அறிமுகத்துக்கு நண்பர்கள், கைச் செலவுக்கு போதிய பணம், அவசரத் தொடர்புக்குத் தொலைபேசி வசதி, இன்னும் பல முன்னேற்பாடுகளுடன் வெளியூர்ப் பயணம் மேற்கொள்பவர்களின் கணக்கின்படி அடுத்த நாளே கான் பஞ்சாபிற்கு மீண்டும் ரயிலேறியிருக்க வேண்டும்.

ஆனால் தன்னந்தனியனாய் விடப்பட்ட போதும், இந்த முகம் தெரியாத ஊரில், மாத்யூஸ் என்ற ரயில்வேத் தொழிலாளியிடம் நட்பை ஏற்படுத்திக் கொண்டு தனது பணியைத் தொடங்குகிறார் கான்.




இத்தகையதோர் நிலைமையில், தான் பட்ட துன்பங்கள் சந்தித்த இடர்ப்பாடுகள் ஆகியவை குறித்தும், தான் வாழ நேர்ந்த சூழல் குறித்தும் விலாவரியாக சுவைபட எழுதுவார் என்று நாம் எதிர்பார்த்தால் ஏமாறத்தான் செய்வோம். வாழ்ந்தபோது மட்டுமல்ல, பின்னாளில் வரலாறு எழுதும்போதும் தனது சொந்த சூழ்நிலைகளைக் காட்டிலும், அன்று நிலவிய அரசியல் சூழ்நிலைகளே அவருக்கு முக்கியத்துவம் நிறைந்ததாகத் தோன்றுகின்றது. எனவே அதை விவரிக்கிறார்.

"காந்தி - இர்வின் ஒப்பந்த காலம் அது. ஒப்பந்தம் என்னுள்ளத்தில் கசப்புணர்ச்சியை ஏற்படுத்திற்று. காந்திஜியை விமரிசிப்பதில் நான் தயவு தாட்சண்யம் காட்டவில்லை. காந்திஜி உப்பு சத்தியாகிரகத்தைத் தொடங்கினார். கடல் நீரைக் காய்ச்சிய மக்கள் நாளடைவில் சலிப்படைந்தார்கள். சிலர் கள் இறக்கும் பனை, தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்கள். சிலர் சட்டத்தை மீறி நடக்கலானானர்கள். பல இடங்களில் வன்முறை நிகழ்ந்தது. ஷோலாப்பூரில் மக்கள் நகரை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். காந்தி - இர்வின் ஒப்பந்தம் செய்ய வேண்டிய நிர்பந்தத்தை மக்கள் இயக்கம் ஏற்படுத்தியது."

"கல்லூரிகளையும், பள்ளிகளையும் விட்டு வெளியேறிய மாணவ - மாணவியரும் போராட்டக் காலத்தில் கைது செய்யப்பட்டு ஒப்பந்தத்துக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டனர். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களில் சிலருக்கு இனி என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. இந்த ஒப்பந்தம் தேசீய விடுதலைப் போராட்டத்துக்குத் துரோகம் செய்வதாகும் என்று பேசியவர், எழுதியவர் சிலரைச் சந்திக்க ஏற்பாடு செய்தார்கள் நம் தோழர்கள்...

ஒப்பந்தத்தின் சாரத்துக்கு நான் தந்த விளக்கமும், விளக்கமுறையும் அரசியல் அறிந்த தென்னிந்தியர் பலருக்குப் புதியவையாகத் தோன்றின. நம் இளம் தோழர்களை ஊக்குவித்தன.

1930 - 32 மாணவர்களிடம் கம்யூனிச அரசியல் தீப்போல பற்றிக் கொண்ட காலம். கான் இதற்கு முக்கியக் காரண கர்த்தா. அவர்களை நகருக்கு வெளியே இருந்த பி அண்டு சி பஞ்சாலைக்கு அழைத்துப் போனார் கான். தொழிலாளர்களுடன் அவர்கள் மொழியில் அவர்கள் பிரச்சனைகளைப் பற்றி உரையாடுவது எவ்வாறு என்று சொல்லிக் கொடுத்தேன். இத்தகைய செயல்முறைப் பயிற்சியால் அவர்கள் மார்க்சியக் கொள்கையை அறியலானார்கள்..

மத்திய தர வர்க்கத்துக்குள் கீழ்த் தட்டைச் சார்ந்த மாணவர்களுக்கு அந்நாள்களில் நாள்தோறும் சிற்றுண்டிக்காக ஆறணா தரப்படுவது வழக்கம். இளம் தொழிலாளர் சங்கத்துக்கு அத்தொகையை வழங்கி விடுவார்கள். இந்த உதவியினால் சிறு வெளியீடுகளையும் பத்திரிக்கையும் கொண்டு வர முடிந்தது..."


படிப்பகம்

www.padippakam.com

சென்னை தீவுத்திடல் மைதானத்தில் தற்செயலாக ராஜவடிவேலு (முதலியார்)வைச் சந்தித்தார் கான். ''அவர் நீதிக்கட்சியின் பத்திரிக்கை ஆசிரியராக இருந்தவர். நீதிக் கட்சி சென்னை மாகாண அமைச்சரவை அமைந்த பிறகு அவர் எதிர் பார்த்தது போல் சாதி அமைப்பு, ஏற்றத் தாழ்வுகள், சமூகத் தீமை இழிவுகள் அறவே ஒழியவில்லை; மாறாக, பிரிட்டிஷாரோடு சேர்ந்து கொண்டு அவர்கள் சுரண்டல் வர்க்க நலன்களுக்கு ஆதரவாக மாறிவிட்டார்கள்.

இதனால் அவர் நீதிக் கட்சி நபர்களுக்கு எதிராக எழுதத் துவங்கினார்; நீதிக்கட்சி ஆசிரியர் பதவியிலிருந்து அவரை விலக்கியது. அவரும் 'ஜனமித்திரன்' என்றொரு ஏடு தொடங்கி தானே அச்சிட்டு பறையர், துப்புரவு செய்வோர் சேரிக்கு எடுத்துச் சென்று விற்றார்.''

''ராஜ வடிவேலுவை மூன்று நாட்களாகப் பல மணி நேரம் வாழ்க்கை, நாட்டு அரசியல் நிலைமை ஆகியவை பற்றிக் கேள்விகள் கேட்டுக் குடைந்தெடுத்தேன். தென்னிந்தியச் சாதி அமைப்பு, குறிப்பாகப் பார்ப்பன ஆதிக்கம் உள்ளிட்ட எல்லா அநீதிகளையும் எதிர்த்து எழும் அஞ்சாநெஞ்சம் படைத்த போராளி - ஆனால் ஒரு நிலைமையை அறிவதிலோ, ஒரு பிரச்சனையைப் பற்றியோ, அல்லது அநீதி என்று அவருக்குத் தோன்றியதை எதிர்த்துப் போராடும் வழிமுறை பற்றியோ காரண காரணிகளைக் கண்டறிந்து செயல்படுவது என்பது அவருடைய இயல்பில்லை என்பதைக் கண்டேன்.

கடைசியாக, 'ஜனமித்திரன்' என்று பெயர் வைத்திருக்கிறீர்களே, எந்த ஜனங்களுக்கு மித்திரன் என்று கேட்டேன் - பதிலில்லை, பிறகு, சமூக அமைப்பு, அதில் உள்ள பல்வேறு வர்க்கங்கள் பற்றி விளக்கம் தரத் தொடங்கினேன்.

தம் திறமையை பற்றிய உணர்வு இல்லாது அமைப்பில் திரளாமல் இருக்கும் சுரண்டப்பட்டு ஒடுக்கப்பட்டு வாடும் மக்களே நம் நண்பர்கள். உழைக்கும் மக்களை அமைப்பு முறையில் திரட்டுவது வர்க்க உணர்வு பெற்றோர் அனைவரது கடமை...''

ராஜவடிவேலு கானின் தர்க்கத்தை ஒப்புக் கொண்ட கணத்திலேயே 'ஜனமித்திரன்' 'முன்னேற்றம்' என்ற பெயரோடு இரு வார ஏடாகப் புதிய வடிவெடுத்தது. அவரே ஆசிரியர், அச்சிடுபவர், வெளியீட்டாளர் எல்லாம். கானோடு ராஜவடிவேலு, கம்மம்பாடி சத்திய நாராயணா இருவர் முழுநேர ஊழியர்களாக இருந்து 30 பேர் கொண்ட 'இளைய தொழிலாளர் சங்கம்' அமைத்தார்கள். இது கம்யூனிஸ்ட் கட்சி சட்ட விரோதமாக்கப்பட்டதால் செய்து கொள்ளப்பட்ட புது ஏற்பாடு. 'முன்னேற்றம்' பத்திரிக்கை கைகளால் 500 படிகள் அச்சிடப்பட்டது. பண வசதி இல்லை; அனைத்துமே தொழிலாளர் - மாணவர் உழைப்பில் தான் நிறைவேறியது.

''நரம்புகளைக் கொடுமையான சோதனைக்குள்ளாக்கும் இக்கடும் பணியில் எப்பொழுதாவது நான் தோழர் இராஜவடிவேலுக்கு உதவி செய்வேன்! வேலை முடிந்து இருவரும் சேர்ந்து சாப்பிடுவோம். இன்முகத்துடன் அவர் மனைவி உணவு பரிமாறுவார்.

இவ்வாறு கடும் உழைப்பின் பின் வெளிவரும் இதழ்களை விநியோகிக்க 'இளைய தொழிலாளர் சங்க' உறுப்பினர் ஒவ்வொருவரும் முயன்று உழைக்க வேண்டி இருந்தது. ஒவ்வொருவரும் விற்பனைக்காகப் பங்கு பிரித்துக் கொள்வோம். தொழிலாளர்களை அவரவர் இல்லங்களில் சந்திப்போம்; ஒவ்வொரு கட்டுரையும் சொல்வதென்ன, கொண்ட கருத்தென்ன என்பது பற்றித் தெளிவாக விளக்குவோம். விவாதிப்போம். சுருக்கமாக '31-32 ஆம் ஆண்டுகளில் போர்க்குணம் மிக்க தொழிலாளி வர்க்கத்துக்குள் பிரச்சார ஏடாக 'முன்னேற்றம்' செயல்பட்டது'' என்று கம்மம்பாடி சத்தியநாராயணா கூறும் குறிப்பு அவர்களது கடுமையான உழைப்பை விளக்குகிறது.

**பஞ்சாபி முஸ்லிமாகப் பிறந்து, புனை பெயரை இந்துப் பெயராக வைத்துக் கொண்டு, தமிழகத்தின் இந்து சாதிய சம்பிரதாயங்கள் பற்றி ஏதும் தெரியாமல், தமிழும் தெரியாமல், அறிமுகத்துக்கு ஆளும் இல்லாமல் சென்னையில் இறங்கினார் கான்.**

அமீர்கான் சென்னை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட சம்பவம் அவரது அளவற்ற துணிச்சலைக் காட்டுகிறது. ''சென்னை மாகாண மேஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் மாஜிஸ்டிரேட்டுக்கு மட்டும் இருபுறமும் மின்விசிறிகள்.. அது கோடை. உள்ளே புழுங்கிற்று. நாங்கள் இருந்த பக்கம் விசிறிகள் ஓடவில்லை. எங்களைத் துன்புறுத்திப் பொருளாதாரச் சிக்கனம் செய்வது தவறு, விசிறி வேண்டும் என்று உரக்கக் கத்தினேன்.

அச்சமயத்தில் அரசு தரப்பில் எவரோ ஒருவர் 'உமது வழக்குரைஞர் தான் உமக்கு விசிறி வைக்க வேண்டும்' என்றார். உடனே கோபாவேசத்தில் அவர்கள் மேல் எறிய நாற்காலியைத் தூக்கினேன்... அரசுக் குற்றச்சாட்டைக் கண்டு நான் அஞ்சவும் இல்லை, நீதி மன்றத்தின் கண்ணியம் பற்றிக் கவலைப்படவுமில்லை என்று காட்டவே இவ்வாறு செய்தேன்...''

சிறைவாசம் 2 ஆண்டுகள். சென்னை, சேலம், கோவை, ராஜமகேந்திரபுரம் என்று 4 இடங்களில் மாற்றி மாற்றி அடைக்கப்பட்டார் கான். சிறையிலும் அவரது போராட்டம் நிற்கவில்லை.

இராஜமகேந்திரபுரம் சிறை மேலாளர் இச்சென் (HITCHEN) கானைப் பணியவைக்க தந்திரம் ஒன்று தீட்டினார். இயக்கத்துக்குத் தலை முழுகி விட்டுச் சென்னை மாகாணத்தை விட்டு வெளியேறி விடுவதாக உறுதிமொழி அளித்தால் விடுதலை செய்து விடுவதாக ஆசை காட்டினார்.

''வாழ்க்கை வெளியில் வாழ்வதற்காகவே. சிறையிலன்று. சிறை வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா?'' என்றார். நான் அவரை வெளியே போய்விடச் சொன்னேன். ஒரு நாளில் இவ்வாறு எழுதினேன் : ''பல்லாயிரம் மைல்கள் கடந்து இங்கு வந்து ஆளுவதற்குப் பிரிட்டிஷ்காரர்களுக்கு உரிமை உள்ளதென்றால் எனக்கு இந்த நாட்டில் வாழ்வதற்காகவாவது உரிமை உண்டு... ஆகவே, என் உயிருள்ள வரை சிறையில் வைத்திருக்கலாம். எந்த நிபந்தனையையும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்...''

47-க்குப்பின் அவரது சொந்த ஊரான ராவல்பிண்டி (பாகிஸ்தான்) சென்றார் கான்; தொழிற்சங்க வேலைகளில் ஈடுபட்ட கானுக்கு 'சுதந்திர' பாகிஸ்தான் கொடுத்த பரிசு 14 ஆண்டு சிறைவாசம்.

கட்சி கட்டுவதைப்பற்றி கான் சொன்ன வார்த்தைகள். ஆழமான பொருள் உள்ளவை :

''இதயங்களைக் கனிவித்தலும் கனிவித்த இதயங்களைக் காத்தலும் மனிதத் திறமையில் பயன் மிகுந்தவை''.

■ புதூர். இராசவேல்

**'தென்னிந்தியாவைக் கண்டேன்'**
**- அமீர் ஹைதர் கான், விலை ரூ. 20.00**
**கிடைக்குமிடம்:**
*கீழைக்காற்று, சென்னை - 2.*



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை:

# பொய்த்தூக்கம்

★ துரை.சண்முகம்

"தம்பி ஒக்காருங்க, யாரும் இல்ல" இருக்கையிலிருந்த சூட்கேஸை எடுத்துக் கொண்டு இடம் விட்டார். பைய மேல தள்ளிவுட்டுட்டு நல்லா ஒக்காருங்க" அவருடைய அனுசரணையான குரல் கதிரேசனை ஈர்த்தது.

"இன்னைக்கு நின்னுகிட்டுதான் போகப் போறோமுன்னு நெனச்சேன் உங்களால முன்னாடி வேற சீட் கெடச்சிருச்சி, ரொம்ப நன்றி சார்".

"எல்லாம் காரணத்தோடதான். என்னாட்டாம் கனபாடியா ஒக்காந்தா எறங்குற வரைக்கும் அவஸ்தை பாருங்க, அதான் மீடியமான ஆளா இருக்குற இடம் பாத்து சீட்ட போட்டு வச்சேன்" உள்நோக்கத்தை இயல்பாக சிரித்துக் கொண்டே அவர் வெளிப்படுத்தியது அவன் மனதைக் கவர்ந்தது.

பெரும்பாலும் பகல்நேரப் பயணத்தில் பக்கத்திலிருப்பவர் தூங்கி, தூங்கி மேலே விழுவதும், உம்மணாமூஞ்சியாக வாயைத் திறக்காத நபருமாக இருந்து விட்டால் பயணக் களைப்பு அதிகமாகிவிடும். பக்கத்திலிருப்பவரின் கலகலப்பால், கையில் வைத்திருந்த வார பத்திரிகையைப் புரட்டுவதற்கு அவசியமில்லாமல் அவர் பேச்சில் லயித்தான் கதிரேசன்.

"உங்களுக்கு நேட்டிவ்வே கும்பகோணந்தானா?"

"ஆமாம், ஆனா இப்ப இருக்கறது மெட்ராஸ்தான். எம்.ஆர்.எல்ல ஒர்க் பண்றேன்".

"ஓ நல்ல எடமாச்சே, ஏதும் சம்திங் அடிச்சு சேர்ந்தீங்களா?"

"இல்ல சார் அப்ரண்ட்டீசா இருந்து, அப்படியே அப்பாய்ண்ட் ஆனேன், நீங்க சார்?"

"நான் கும்பகோணந்தான். எல்.ஐ.சி. டவுன் பிராஞ்ச்ல இருக்கேன் ஆபீஸ் வேலையா வந்துட்டு போறேன்".

வயதுக்கு மூத்தவராக தென்பட்டாலும் அவரது கலகலப்பான அணுகுமுறை பேசுவதற்கு ஆர்வத்தைக் கொடுத்தது கதிரேசனுக்கு.

"இந்தாங்க தம்பி கடலை எடுத்துக்குங்க"

"பரவாயில்ல சார்" கூச்சத்துடன் தயங்கினான்.

"சும்மா எடுத்துக்குங்க, உங்கள பாக்கவச்சி சாப்பிட்டா எனக்கு வயத்த வலிக்கும்" அவரது பேச்சில் சிரிப்புக்குள்ளான கதிரேசன் எடுத்துக் கொண்டான்.

"என்ன சார் இது, செங்கல்பட்டுக்குள்ள போகுது, பைபாஸ் ரைடர்ன்னு போட்டுருந்திச்சு"

"நீங்க வேற தம்பி, எல்லாம் ஏர்ற வரைக்கும் சொல்றதோட சரி, பைபாஸ் ரைடர்னு போட்டுகிட்டு எவன் எழுதுன மாதிரி நேர்மையான நடந்துக்குறான். கலெக்சன் வேணும்னு பெரும்பாலும் டிரைவர், கண்டக்டர் சுத்தி வளைச்சுத்தான் போறாங்க, நீங்க எத்தன பைபாஸ் போடுங்க சுத்தி வளைச்சி போயே பழக்கப்பட்டவன் நேர்ல போக மாட்டான், எப்படியோ ஒழுங்கா கொண்டு போயி சேர்த்தா சரி".

"ஆமாம் சார் இப்பவெல்லாம் ஆக்ஸிடெண்ட் அதிகமா இருக்கு."

"ஆக்ஸிடெண்ட் கூட பரவாயில்ல, எப்ப ஊர்வலம், மறியல்லு எது நடக்குமோன்னே தெரியல, எவன எடுத்துக்கிட்டாலும் பஸ்ஸதான் மறிக்கிறான். ஊர் போயி சேர்ந்தாதான் நிச்சயம்னு ஆகி போச்சு."

அவரது பேச்சின் ஏற்ற இறக்கங்களை, சிந்தனை வயப்பட்டவன்போல கவனித்துக் கொண்டிருந்தான் கதிரேசன். அவனது பதிலை எதிர்பார்த்தது போல் இருந்தது அவரது முகம்.

"ஏன் தம்பி தொண தொணன்னு பேசறது போரடிக்குதா? எனக்கு பகல்ல தூக்கம் வராது. அதுவும் பஸ்ல போனா சுத்தமா கண்ண கூட மூடமாட்டேன். பேச ஆளு இருந்தா போதும். நீங்க எப்படி? பேசிகிட்டே வர்றது டிஸ்டர்பன்சா இருக்கா?"

**"ஆமா... நீங்க எந்தத் தெரு?"**

**அது வந்து சார், கீழத் தெரு தாண்டி வந்தா அம்பேத்கார் நகர்னு இருக்கும். அங்க வந்து மாரிமுத்துன்னு கேட்டா சொல்வாங்க.**

**ஓ.. அந்..த தெருவுங்களா, தெரியும், தெரியும்."**

அவசரமாய் அவன் மறுத்தான், "அப்படியெல்லாம் இல்ல சார். உங்க அளவுக்கு எனக்கு எக்ஸ்பீரியன்ஸ் கிடையாது. அதான் பேசாம கேட்டுகிட்டே வந்தேன்".

பேருந்தின் ஜன்னலுக்கு வெளியே மரம், செடிகள் எதிர் திசையில் ஓடுவதுபோல, கண்ணில் படுவதைப் பற்றியெல்லாம் எதிரும் புதிருமாக அவர் பேசிய விதம் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தது. கையிலிருந்த வாரப் பத்திரிகையின் மேலட்டையை நோட்டமிட்டவர்.

"அட்டைல யாரு நக்கீரன் கோபாலா, வீரப்பன் பத்தின மேட்டர வச்சே பத்திரிக்க பறக்குதுப்பா. நல்ல வியாபாரம் நக்கீரனுக்கு".

"என்ன இருந்தாலும் காட்டுக்குள்ள போயிட்டு வர்றது, ரிஸ்க்கான விசயம் சார். இன்சூரன்ஸ் பண்ணிட்டுல்ல போனாராம்".

"நம்பள மாதிரியா, அந்தாளு எக்னாமிக்கலா என்னா சவுண்டான பார்ட்டி சும்மா போவாரா, நீங்க ஏதும் பாலிசி எடுத்திருக்கீங்களா?"

"இல்ல சார் வேலைல சேர்ந்தே ஆறு மாசந்தான் ஆகுது".

"என்ன, உடனே எல்.ஐ.சி. வேலைய ஆரம்பிச்சிட்டேனு நெனைக்கிறீங்களா? பேமிலி கமிட்மெண்ட் அதிகமோ"

ஒரு நிமிடம் குடும்ப சூழ்நிலைகளில் மனதை வலம்விட்டு நினைவுக்குத் திரும்பியவன், "ஆமாம் சார். ரண்டு தங்கச்சி - விவசாய குடும்பம்" அவசரமாக முடித்துக் கொண்டான்.

"பேசிகிட்டே வந்ததிலே நேரம் போனதே தெரியல, வடலூர் வந்திருச்சி சார். பேப்பர் வாங்கிட்டு வந்துர்றேன்"

ஆழ்ந்த யோசனையில் இருந்தார் அவர்.

"என்ன சார் தூக்கம் வருதா. டீ சாப்பிடறீங்களா?"

"என்னது தூக்கமா? டிரைவரே தூங்கினாலும் வண்டியிலே ஏறுனா எனக்குத் தூக்கம் வராது. என்னா பேப்பர்ல இன்னைக்கு சேதி ராஜபாளையத்தில மீண்டும் வன்முறை" சற்று உரக்க படித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

''சாதிக் கலவரம் ஓயாது போல இருக்கு. தெக்க போகவே பயமா இருக்குப்பா''.

''எத்தனை வருசம் ஆனாலும், இந்த சாதி மட்டும் மாறாது போலிருக்கு சார்'' கதிரேசனின் வார்த்தையில் ஏக்கம் பிறந்தது.

''இருக்கட்டும்பா அதுக்காக இப்படியா வெட்டிக்கறது. எவ்ளோ எடத்துல தாயா புள்ளையா பழகலே''.

''எங்க சார் இன்னைக்கும் கிராமத்துல சாதி சொல்லிதான் திட்றாங்க'' விரக்தியாய் வந்தது வார்த்தை. அவன் இயல்பாகப் பேசியது அவருக்கு மாறுபட்டது போல மனசில் பட்டது. ஒரு நிமிடம் மவுனமாகி மறுத்துப் பேச முயலாமல் ''மத்த ஊருக்கு நம்ப எடம் எவ்வளவோ தேவல, போற போக்க பாத்தா எல்லா எடத்துலயும் வெட்டு குத்துன்னு நடக்கும் போல, ஜன்னல் கதவைச் சற்று இழுத்து மூடியபடி அவனைத் தீவிரமாகக் கவனித்தார் - குழப்பத்துடன். ''பிரச்சனைன்னு தொடங்குனா ஒரு ஊர்லேர்ந்து இன்னொரு ஊரு பரவும் சார்'' என்றான்.

அவனது கருத்தை ஆழ்ந்து கவனித்து மனசுக்குள் குறித்துக் கொண்டது போல அவர் முகம் அசைவற்று இருந்தது. வெடுக்கென ''பாரு, என்னனென்னமோ பேசிட்டு வந்தோம், ஒரே ஊரா இருந்தும் ஒங்கள விசாரிக்க மறந்துட்டேன். கும்பகோணத்துல எங்க இருக்குறீங்க?''

''கும்பகோணம்னா டவுன்ல இல்ல சார். பக்கத்துல கருப்பூர்''.

'ஓ! சத்திரம் கருப்பூரா அடிக்கடி போற வர்ற எடமாச்சே, அங்க மொத தெருவுல சங்கர சுப்ரமணின்னு நம்ப ஏஜன்ட் ஒருத்தர் இருக்கார், உங்களுக்கு தெரியுமா?''

மோவாயை வருடியபடி சற்று யோசித்தான். 'தெரியாது சார்', என்று பேச்சிலிருந்து திசை விலகுவது போல ''ஜன்னலைக் கொஞ்சம் தெறங்க சார், போதும்'' என்று காற்றுக்கு முகம் திருப்பினான்.

''இந்த ரோட்டு மேலயே ஒரு பட்டாமணியார் வீடு இருக்கும். ரொம்ப வருசமாக இருக்காரு. அவரைத் தெரியுமா?''

''தெரியும் சார்'' என்றான் அவசரமாக. அவர் நிதானமாக ''தெரியும்னா ரிலேட்டிவா இல்ல ஜஸ்ட் பிரண்டா'' பேச்சில் புன்னகையைக் குழைத்தார்.


''அப்படியெல்லாம் இல்ல, ஒரே ஊருங்குற வகையில தெரியும். பதிலைச் சுருக்கமாக முடித்துக் கொள்வதில் குறியாய் இருப்பது போலிருந்தது அவனது பேச்சு.

ஜன்னலுக்கு வெளியே வேடிக்கை பார்க்க ஆர்வமில்லாதவராய் மீண்டும் விட்ட இடத்திலேயே தொடர்ந்தார்.

''ஒங்க அப்பா பேரு என்ன சொன்னீங்க?''

சிறிது நேர இடைவெளி விட்டு ''மாரிமுத்து'' என்றான்.

முகத்தில் வெளிப்பட்ட குழப்பத்தை, சட்டென மாற்ற எத்தனித்து புன்னகைத்தபடி ''ஏன்னா, நமக்கு அந்த ஏரியாவுல பெரும்பாலும் எல்லாரையும் தெரியும். ஏஜென்ட் பார்க்க வேற அடிக்கடி வருவேன். அதான்



தெரிஞ்ச ஆளா, தெரியாத ஆளான்னு நெனவுபடுத்தி பாக்கலாம்னு கேட்டேன்''

ஏதோ சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளும் முனைப்புடன் அவர் ஆர்வம் காட்டினார். ''விவசாயம்னா, சொந்தச் சாகுபடியா?''

''இல்ல சார் குத்தகைதான்''

''கீழத்தெரு இல்ல அங்க பாலு செட்டின்னு. டிராக்டர் எல்லாம் வாடகைக்கு வுடுறாரு ஒருத்தர். அவரு கூட பெரிய பண்ணையாச்சே''.

''ஊம்..ம்ம்'' ஆமோதித்து தலையசைத்தான்.

''இதுக்கு முன்னாலேயே உங்களைப் பார்த்த முகம் மாதிரியே இருக்குன்னு யோசிச்சுகிட்டே வந்தேன். கும்பகோணத்துக்கு வருவீங்களோ''.

''காலேஜ் படிக்குறப்ப தெனம் வருவேன் சார்''.

காலேஜிகிட்ட இல்லப்பா, நம்ப பேட்டை வன்னியைத் தெரு இல்லை அங்க அடிக்கடி பாத்த மாதிரி தோணுது, அங்க யாரும் ரிலேட்டிவ் இருக்காங்களா!?''

''இல்ல சார் கும்பகோணத்துல யாரும் இல்லை''.

''உங்கள மாதிரி வேற யாரையாவது பாத்திருக்கலாம். வயது ஆக, ஆக ஞாபகசக்தி கம்மியாவுது'' தானாகவே சிரித்துக் கொண்டார்.

''கருப்பூர்ல எனக்கு எல்லா தெருவும் அத்துபடி, என்னமோ ஒங்க வீடு தான் புதுசாப் படுது. ஆமாம் நீங்க எந்த தெரு?''

சற்று நேரம் தயங்கி யோசனைக்குள்ளானான்.

''அது வந்து சார், அந்த கீழத்தெரு தாண்டிவந்தா அம்பேத்கார் நகர்னு இருக்கும், அங்க வந்து மாரிமுத்துன்னு கேட்டா தெரியும்''.

''ஓ! அந்த தெருவுங்களா, தெரியும், தெரியும்'' என்றவர் புதிதாக அவனைப் பார்வையில் அளப்பது போல நோட்டமிட்டார்.

''முந்தியெல்லாம் கருப்பூர் சேரின்னு சொல்வாங்க, அம்பேத்கார் நகர் என்ன புரியாத ஏரியாவா இருக்கேன்னு கொழம்பிட்டேன். ''ஊக்கும்.. ஊகும்'' தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச சிரமப்பட்டவர் போல ''வழியில கண்ட தண்ணியையும் குடிச்சனா உடனே இன்பெக்ஷன் ஆயிடுச்சுன்னு நெனைக்கிறேன்..'' ஜன்னலைத் திறந்துவிட்டு கவனத்தை வெளியே விட்டவர் பின்னர் இருக்கையில் தலையைச் சாய்த்து ''இவன் ஊரெல்லாம் சுத்திவிட்டு வந்ததுல ரொம்ப அசதியா யிடுச்சு தம்பி'' என்றவர் தூங்குவதற்கான அடையாளமாய் இமைகளை மூடிக் கொண்டார்.

''என்ன சார் பஸ்ல டிரைவரே தூங்கினாலும், தூங்க மாட்டேன்னு சொன்னீங்க, நீங்களே அசந்துட்டீங்க'' இயல்பாக கதிரேசன் வெளிப்படுத்தியதற்கு அவரிடமிருந்து எந்த விதமான பதில் அறிகுறியும் இல்லை. இமைகள் இறுகி இருந்தன.

இதயத்திலிருந்து எதையும் வெளியே விட்டு விடாதபடிக்கு இறுகப் பற்றியது போல சட்டைப் பையை இறுக்கமாகப் பிடித்தபடி அசைவற்றுக் கிடந்தார் அவர்.

■



படிப்பகம்

www.padippakam.com

# உலகைக் குலுக்கிய நவம்பர் புரட்சி

**இது நவம்பர் சோசலிசப் புரட்சியின் 81-வது ஆண்டு. உலகின் முதல் தொழிலாளர் அரசை நிறுவுவதற்காகத் தோழர் லெனின் தலைமையில் ரசியத் தொழிலாளிகள் ஆயுதமேந்திப் போராடிய அந்த நாட்களில், களத்தில் இருந்து அந்தப் புரட்சிக்கு நேர்முக வர்ணனை எழுதினார் அமெரிக்கப் பத்திரிகையாளர் ஜான் ரீடு. மாஸ்கோ நகரில் புரட்சியில் உயிர்நீத்த தியாகிகளின் இறுதி ஊர்வலக் காட்சியை ''உலகைக் குலுக்கிய பத்து நாட்கள்'' என்னும் அவருடைய நூலிலிருந்து தொகுத்துத் தருகிறோம்.**

இரவு நெடு நேரம் கழித்து நாங்கள் காலியான சாலைகளில் நடந்தோம், இவேர்ஸ்கி வளைவுக்குள் நுழைந்து கிரெம்ளினுக்கு முன்னால் மாபெரும் செஞ்சதுக்கத்துக்கு வந்து சேர்ந்தோம். வசீலி பிளழேன்னவா தேவாலயத்தின் நெடிதுயர்ந்த விசித்திர உருவம் தெரிந்தது...

சதுக்கத்தின் ஒரு பக்கத்தில் கிரெம்ளினின் கரியகோபுரங்களும் சுவர்களும் தெரிந்தன. மறைந்திருந்த கணப்புத் தீக்கொழுந்துகளின் செவ்வொளி அந்த உயரமான சுவர்களில் படபடத்து ஆடிற்று. சுவரின் ஓரத்திலிருந்து பேச்சுக் குரல்களும் மண்வெட்டிகள், குத்துக்கோடாரிகளின் ஓசையும் அந்தப் பெரும் பரப்பைக் கடந்து வந்து எங்கள் காதில் விழுந்தன. நாங்கள் அவற்றை நோக்கிச் சதுக்கத்தின் குறுக்கே நடந்தோம்.

சுவரடிக்கு அருகே மலை மலையாய் மண்ணும் கற்களும் குவிந்திருந்தன. இவற்றின் மீது ஏறி கீழே இரு பெரும் குழிகளுக்குள் பார்த்தோம். பத்து, பதினைந்து அடி ஆழமும் ஐம்பது கஜம் நீளமுமுள்ள இந்தக் குழிகளுக்குள் பெரிய சொக்கப்பனைகளை எரிய விட்டு அவற்றின் வெளிச்சத்தில் நூற்றுக் கணக்கான படையாட்களும் தொழிலாளர்களும் நின்று தோண்டிக் கொண்டிருந்தார்கள்...

இளம் மாணவர் ஒருவர் ஜெர்மன் மொழியில் எங்களுடன் பேசினார். ''சகோதரத்துவச் சமாதி இது'' என்று அவர் விளக்கிக் கூறினார். ''புரட்சிக்காக உயிரைத் தியாகம் புரிந்த ஐந்நூறு பாட்டாளிகளை நாளைக்கு இங்கே அடக்கம் செய்யப் போகிறோம்'' என்றார்.

எங்களைக் குழிக்குள் அழைத்துச் சென்றார் அவர். குத்துக்கோடரிகளும் மண்வெட்டிகளும் வேகம் வேகமாய் வேலை செய்தன, மண் மலைகள் உயர்ந்து சென்றன. யாரும் பேசவில்லை. தலைக்கு மேலே இரவு வானத்தில் விண்மீன்கள் அடர்ந்திருந்தன, பழம் பெரும் கிரெம்ளின் சுவர் வானைத் தொடும்படி உயர்ந்து சென்றது...

நாங்கள் அவ்விடத்தை விட்டு நகர்கையில், குழியிலிருந்த தொழிலாளர்கள் அந்தக் குளிரிலும் வியர்த்து வழிய ஓய்ந்து போய் மேலே ஏறத் தொடங்கினர். செஞ்சதுக்கத்தின் குறுக்கே கரிய வரிசையில் ஆட்கள் வேகமாக நடந்து வந்தார்கள். அவர்கள் மளமளவென்று குழிக்குள் இறங்கி மண்வெட்டிகளையும், குத்துக் கோடரிகளையும் எடுத்துக் கொண்டு வாய் பேசாமல் தோண்ட ஆரம்பித்தார்கள்...

விடியும் முன்பே நாங்கள் விழித்தெழுந்து இருண்ட சாலைகளின் வழியே ஸ்கோபெலெவ் சதுக்கத்துக்கு விரைந்தோம். மாபெரும் நகரில் யாரும் கண்ணில் படவில்லை. கடுங்காற்று மூண்டெழப் போவது போல தொலைவிலும் அருகாமையிலும் ஒரு வித சலசலப்பு கேட்டது...

மங்கலான வெளிச்சத்தில் சோவியத்தின் தலைமையகத்துக்கு எதிரே ஆடவரும் பெண்டிருமான ஒரு சிறு திரள் பொன்னிற எழுத்துகள் பொறிக்கப்பட்ட செம்பதாகைகளை வைத்துக் கொண்டு நின்றது தெரிந்தது - மாஸ்கோ சோவியத்துகளின் மத்தியச் செயற் கமிட்டியின் பதாகைகள் அவை. வெளிச்சம் அதிகமாயிற்று. தொலைவிலே சலசலப்பு சப்தம் ஆழமாகி, இடையறாத பேரிரைச்சலாகப் பெருகிற்று...

நாங்கள் சென்ற வழியில் தெருக்களிலிருந்த சிறிய திருக்கோயில்கள் யாவும் இழுத்து மூடப்பட்டு இருட்டாய் இருந்தன. இவேர்ஸ்கி தேவ அன்னையின் கோயிலுங்கூட மூடப்பட்டிருந்தது.

ஒவ்வொரு புதிய ஜாரும் கிரெம்ளினுக்குச் சென்று முடி சூட்டிக் கொள்ளும் முன்பு இந்தக் கோயிலுக்கு வந்து செல்வது வழக்கம். இரவும் பகலுமாய் எந்நேரமும் இது திறந்தே இருக்கும்; எப்போதும் கூட்டமாகவே இருக்கும்; பக்தர்கள் ஏற்றி வைக்கும் மெழுகுத் திரிகளின் ஒளி தேவ உருவங்களின் தங்கத்திலும் வெள்ளியிலும் மணிக் கற்களிலும் பளிச்சிட்டுத் தகதகத்துக் கொண்டிருக்கும்...

நெப்போலியன் முன்பு மாஸ்கோ வந்த போது அணைக்கப்பட்டதற்குப் பிற்பாடு, இப்போதுதான் இந்த மெழுகுத் திரிகள் முதன் முதலாக அணைக்கப்பட்டிருந்ததாய்க் கூறினார்கள்.

புனித சத்திய சமயச் சபை தனது கடாட்சத்தின் ஒளி மாஸ்கோவுக்குக் கிட்டாதபடிச் செய்தது. பீரங்கிக் குண்டுகள் கொண்டு கிரெம்ளினைத் தாக்கியவர்களின், பக்தி நெறி அறியாத இந்த விரியன் பாம்புகளின் உறைவிடமாகி விட்ட மாஸ்கோவுக்குக் கிட்டாதபடிச் செய்தது...

திருக்கோயில்கள் இருண்டு, நிசப்தமும் குளிரும் குடி கொண்டனவாகி விட்டன; பாதிரிமார்கள் மறைந்து விட்டார்கள். செஞ்சவ அடக்கத்தின் போது சமயச் சபைப் பெரியவர்கள் பிரார்த்தனை நடத்தவில்லை; நீத்தாருக்குச் சமயச் சடங்கு ஏதும் இல்லை; தேவ நிந்தனையாளர்களது சமாதியின் முன்னால் பிரார்த்தனைகள் வேண்டியதில்லை. மாஸ்கோவின் தலைமை மேற்றிராணியார் தீஹன் விரைவில் சோவியத்துகளைச் சமய விலக்கம் செய்யவிருந்தார்...

1919
மான்
செஞ்
கத்தி
தின




படிப்பகம்


www.padippakam.com

கடைகளும் மூடப்பட்டுதான் இருந்தன சொத்துடைத்த வர்க்கத்தார் வீட்டிலே இருந்தார்கள் - ஆனால் இதற்குக் காரணம் வேறொன்று. மக்களது தினமாகும் இது, மக்கள் எல்லாரும் தெருக்களிலே பிரவாகமெடுக்கப் போகிறார்கள் என்னும் செய்தி கடல் அலையென எழுந்து இடி முழக்கமிட்டது...

இவேர்ஸ்கி வளைவு வழியே மக்கள் வெள்ளம் ஏற்கெனவே கரைபுரண்டு ஓட ஆரம்பித்துவிட்டது. ஆயிரம் ஆயிரமாய் மக்கள் திரள் செஞ்சதுக்கத்தின் பெரும் பரப்பெங்கும் குழுமி வந்தது...

முன்பெல்லாம் இவேர்ஸ்கித் திருக்கோயிலின் எதிரே செல்லும் போது எல்லாரும் சிலுவைக் குறியிட்டுக் கொள்வது வழக்கம். ஆனால் இப்போது கூட்டத்தினர் அதைக் கடந்து சென்ற போது அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை...

நகரின் தொலைப் பகுதிகளிலிருந்து பற்பல ஆலைகளிலிருந்தும் தொழிலாளர்கள் தமது வீரத் தியாகிகளைச் சுமந்து கொண்டு வந்தார்கள். வளைவின் வழியே அவர்கள் வந்து கொண்டிருந்ததையும், அவர்களது பதாகைகள் பளிச்சிட்டதையும், அவர்கள் சுமந்து வந்த சவப் பெட்டிகளின் இரத்தச் சிவப்பையும் பார்க்க முடிந்தது...



இந்தப் பெட்டிகள் மட்ட ரகமானவை, இழைக்கப்படாத பலகை கொண்டு செய்யப்பட்டுக் கருஞ் சிவப்பு வர்ணம் பூசப்பட்டவை. முரட்டு ஆட்கள் அவற்றை தம் தோள் மீது உயரத் தூக்கி வந்தனர். முகத்தில் கண்ணீர் வழிந்தோட அவர்கள் நடை போட்டனர்.

அவர்களுக்குப் பின்னால் வந்த பெண்கள் விம்மியழுது கொண்டும் அலறிக் கொண்டுமிருந்தார்கள், அல்லது உயிரற்று வெள்ளையாய் வெளுத்துப் போன முகங்களுடன் விரைப்பாய் நடந்தார்கள்...



சவப்பெட்டிகளைச் சுமந்து கொண்டு ஊர்வலத்தினர் மெதுவாக நகர்ந்து சமாதியின் ஓரத்தை வந்தடைந்தனர். பெட்டிகளைத் தூக்கி வந்தவர்கள் தமது சுமையுடன் மேட்டின் மீது ஏறிக் குழிக்குள் இறங்கினார்கள்...

தூக்கி வந்தவர்களில் பலரும் பெண்கள் - கட்டை குட்டையான, வலுமிக்க பாட்டாளி வர்க்கப் பெண்கள். மாண்டோரின் பின்னால் ஏனைய பெண்கள் வந்தார்கள் - உள்ளம் ஒடிந்து போன இளம் பெண்கள், அல்லது வயது முதிர்ந்து சுருக்கங்கள் விழுந்த தாய்மார்கள் இவர்கள்...

அடிபட்ட விலங்குகளைப் போல் இந்தத் தாய்மார்கள் முனகிச் சப்தம் எழுப்பியவாறு தமது புதல்வர்களையும் கண்வன்மார்களையும் பின்தொடர்ந்து சோதரத்துவச் சமாதிக்குள் இறங்கினார்கள். இரக்கங் கொண்ட கரங்கள் அவர்களை அணைத்துத் தடுத்த போது கதறிக் கூச்சலிட்டு அழுதார்கள். ஏழைகள் ஒருவரையொருவர் அப்படி உளமார நேசித்தவர்கள்!

ஆற்று வெள்ளம் போல் செம்பதாகைகள் சென்று கொண்டிருந்தன. ஐம்பது ஆயிரம் மக்கள் சதுக்கத்திலே குழுமி நிற்க அவை நம்பிக்கையையும் சோதரத்துவத்தையும் மகத்தான தொலைநோக்குடைத்த வாக்குகளையும் வலியுறுத்தும் சொற்களைத் தாங்கிச் சென்றன - உலகின் தொழிலாளர்களும் இனி வருங்காலத்தில் தோன்றப் போகும் அவர்களது சந்ததியினர் எல்லோரும் கண் கொண்டு இக்காட்சியைப் பார்த்திருக்க, சென்றது இந்த் ஊர்வலம்...

ஒவ்வொன்றாக ஐந்நூறு சவப் பெட்டிகள் குழிகளினுள் வைக்கப்பட்டன. இருட்டாகி வந்தது. அப்போதும் தொடர்ந்து கொடிகளும் பதாகைகளும் தணிந்து தொங்கியும், படபடத்துப் புடைத்தெழுந்தும் வந்து கொண்டிருந்தன.

வாத்தியக் குழு சவ அடக்க ஊர்வலம் கீதமிசைத்தது. அம்மாபெரும் கூட்டம் அனைத்தும் சேர்ந்து இசைத்தது. சமாதிக்கு மேல் இருந்த இலைகளில்லா மரக் கிளைகளில் விசித்திரமான பல் வண்ண மலர்க் கொத்துகள் போல் மலர் வளையங்கள் தொங்கவிடப்பட்டன...

இருநூறு ஆடவர்கள் மண்வெட்டியால் மண்ணைக் குழிகளுக்குள் தள்ள ஆரம்பித்தார்கள். சவப் பெட்டிகள் மீது விழுந்து அது எழுப்பிய ஆழமான தடதடப்பு கூட்டத்தினர் இசைத்த கீதத்துடன் சேர்ந்து தனிவாய் ஒலித்தது...

விளக்குகள் ஏற்றப்பட்டன. கடைசிப் பதாகைகளும் கொடிகளும் கடந்து சென்றன. அழுது புலம்பிய கடைசிப் பெண்களும் மெள்ள விலகிச் சென்றார்கள், நெஞ்சு பொறுக்காத சோகத்துடன் திரும்பிப் பார்த்தவாறு நடந்தார்கள். பாட்டாளி வர்க்கப் பெருவெள்ளம் அந்தப் பெரிய சதுக்கத்திலிருந்து சிறிது சிறிதாக வடிந்து அடங்கிற்று...

பக்தி உணர்ச்சி வாய்ந்த ருஷ்ய மக்கள் விண்ணுலகை அடைய இனி பாதிரிமார்கள் வந்திருந்து பிரார்த்தனை நடத்தத் தேவையில்லை என்பதை நான் திடுமென உணர்ந்தேன். விண்ணுலகம் வழங்கக் கூடியதைக் காட்டிலும் ஒளி படைத்ததான ஓர் அரசாட்சியை இதற்காக இன்னுயிரை அளிப்பது தனிப்பெறும் சிறப்பாகும் என்பது தெரிந்து இங்கே, இம்மண்ணுலகின் அமைத்திருகிறார்கள் இவர்கள். ■


படிப்பகம்

www.padippakam.com

# வர்க்கத் தீட்டுக்கு ஒரு வக்காலத்து!

நான்கு மாதங்களாகத் தொடர்கிறது தமிழ்த் திரையுலகத் தொழிலாளர்களின் போராட்டம். பாரதிராஜா, பாலச்சந்தர் ஆகியோர் கனவு கண்டது போல பெப்சி தொழிற்சங்கத்தை அவர்களால் அழித்துவிட முடியவில்லை. இழுபறி நிலை தான் தொடர்கிறது.

அராஜகமாகப் பெருத்துப் போன தயாரிப்புச் செலவுகள், அரைத்த மாவையே அரைக்கும் கதைகள் போன்ற பல காரணங்களால் நூற்றுக்கு என்பது சதவீதத் திரைப்படங்கள் பொருளாதார ரீதியாகத் தோல்வியடைகின்றன என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளும் உண்மை. இந்தச் சீர்குலைவுக்கு இயக்குநர்களும் தயாரிப்பாளர்களுமே பிரதானமாகப் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் யாரும் மறைக்க முடியாது.

"இரண்டு ரூபாய்ப் பேனாவைக் கூட எழுதிப் பார்த்துத்தான் வாங்குகிறோம். 50 லட்சம், 60 லட்சம் ரூபாயைக் கண்ணை மூடிக் கொண்டு உங்களுக்குப் படைக்க முடியாது. படைப்பாளிகளே, உங்கள் சொந்தக் காசைப் போட்டு 'படைப்பை' உருவாக்கிக் காட்டுங்கள்; அதைப் பார்த்துவிட்டு விலை சொல்கிறோம்" என்கிறார்கள் விநியோகஸ்தர்கள்.

தமிழ்நாட்டில், தமிழ்ப் படைப்பாளிகள் உருவாக்கும் தமிழ்ப் படங்களுக்கு முன் பணம் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்று முதல்வரால் தமிழ் விநியோகஸ்தர்களை நிர்ப்பந்திக்க முடியவில்லை - தமிழ்த் தொழிலாளிகளை நிர்ப்பந்தித்ததைப் போல! ஏனென்றால் பணத்திற்குத் தமிழுணர்வு கிடையாது என்பது மற்றெல்லோரையும் காட்டிலும் முரசொலி மாறன் அவர்களின் மாமாவுக்குத் தெளிவாகத் தெரியும்.

விநியோகஸ்தர்களின் மடியிலுள்ள பணத்தைப் பறிக்க முடியாத தமிழுணர்வும் படைப்புரிமையும் தொழிலாளியின் வயிற்றை நோக்கி ஏவப்பட்டிருக்கிறது.

எனவேதான் நம் தயாரிப்பாளர் மீது படைப்பாக்க உணர்வும், தமிழ் உணர்வும் இடியும் மின்னலும் போல ஒரே நேரத்தில் வந்து இறங்கிவிட்டன. ஆனால் இந்தத் தாக்குதலில் நிலைகுலைந்து போனவர்களோ வேறு இரண்டு பேர். 1. உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் ஏடான நந்தன், 2. உலகத் தொழிலாளர்களை ஒன்றிணைக்கும் தீக்கதிர்.

தமிழ்ப் படைப்பாளி என்ற சொல்லின் தலைப்பகுதிக்கு நந்தன் வக்காலத்து; வால் பகுதிக்கு தீக்கதிர் வக்காலத்து. நடுவில் உள்ள ஒற்றெழுத்து தான் இவர்கள் இரண்டு பேரையும் இணைக்கும் வர்க்கக் கண்ணோட்டம்!

நாம் தலையிலிருந்து தொடங்குவோம்.

"படைப்பாளி - பெப்சி இருதரப்பிலும் முதலாளிகள், தொழிலாளிகள் உள்ளனர்; தமிழர், தமிழரல்லாதார் உள்ளனர்; பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் உள்ளனர். எனவே இப்போராட்டத்தில் தத்துவார்த்தப் பின்னணி கிடையாது. ஊதிய உயர்வு, வேலை நேரப் பிரச்சினை ஏதும் இல்லாததால் இது முதலாளி - தொழிலாளி மோதலும் அல்ல."

"தொழிற்சங்கம் வரம்பு மீறுவதால் தோன்றும் பிரச்சினை; திரைப்படத்துறையிலும் அரும்பத் தொடங்கியிருக்கும் தமிழுணர்வு" - இவைதான் திரையுலகப் பிரச்சினையில் நந்தன் கண்ட உண்மைகள்.




இரண்டு தரப்பிலும் தொழிலாளிகள் இருந்தால் அதை முதலாளி - தொழிலாளி மோதல் என்று கூறமுடியாது என நந்தன் கூறுவதை ஒரு இலக்கணமாக எடுத்துக்கொண்டால், உலகத்தில் இதுவரை முதலாளி - தொழிலாளி போராட்டமே நடந்ததில்லை என்றும் சமீப எதிர்காலத்தில் நடக்கப் போவதுமில்லை என்றும் நாம் துணிந்து முடிவு கட்டிவிடலாம். ஏனென்றால் கருங்காலிகள் இல்லாத போராட்டமில்லை. தாங்களும் கதாநாயகனாகிவிடலாம், கதாசிரியராகலாம், இயக்குநராகலாம், தயாரிப்பாளராகலாம் என்று கனவு காணும் தொழிலாளிகள் நிறைந்த கனவுத் தொழிற்சாலையில் கருங்காலிகள் தோன்றுவது அதிசயமல்ல.

அதேபோல கமலஹாசன், குஞ்சுமோன் போன்றவர்கள் பெப்சியின் தரப்பில் நிற்பதற்குக் காரணம் தொழிலாளி வர்க்கப் பாசமல்ல - இலாபம் அல்லது அவர்களின் தொழில் நிர்ப்பந்தம்.

ஊதிய உயர்வு, வேலை நேரம் போன்ற பிரச்சினைகள் இருந்தால்தான் முதலாளி - தொழிலாளி பிரச்சினை என்கிறது நந்தன். ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் தமிழ்த் தயாரிப்பாளர்கள் கையெழுத்திடவில்லை என்ற பெப்சியின் புகாருக்கு நந்தனிடம் பதில் இல்லை.

போகட்டும். ஊதிய உயர்வு பிரச்சினை இல்லை என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் செய்த வேலைக்கே சங்கம்தான் கூலியை வசூல் செய்து தரவேண்டும் என்ற அளவுக்கு யோக்கியர்களான முதலாளிகளைக் கொண்ட தொழிலில், இருக்கின்ற சங்கத்தையே ஒழிக்கும் முயற்சியல்லவா நடந்து கொண்டிருக்கிறது. இது முதலாளி - தொழிலாளி பிரச்சினையில்லையா?

ஆனால் தொழிற்சங்கத்தை அழிக்கும் முயற்சியாக நந்தன் இதைக் கருதவில்லை. "மாற்றுச் சங்கம் உருவாக்குவது ஜனநாயக உரிமை இல்லையா?" என்று கேட்கிறது.

அடடா... இல்லையா பின்னே! தன்னுடைய கூலிக்காரர்கள் எந்த சங்கத்தில் உறுப்பினராக


படிப்பகம்

www.padippakam.com

இருக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் 'ஜனநாயக' உரிமை டி.வி. எஸ். முதலாளிக்கு இருக்கும் போது அதே உரிமையைப் படைப்பாளிகள் கேட்கக் கூடாதா என்ன? ஆனால் இந்த 'மாற்று' சங்கத்தினர் தங்களுக்குப் பெயர் சூட்டிக் கொண்ட கதை இருக்கிறதே, அதுதான் ''எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' என்பதுபோல சந்தி சிரித்துவிட்டது.

படைப்பாளியும் படைப்புத் தொழிலுக்குச் சம்பந்தமில்லாத தொழிலாளியும் ஒரே சங்கத்தில் இருக்க முடியாது; நாங்கள் தனி சாதி - ''படைப்பாளிகள் சங்கம்'' என்று தான் முதலில் பாரதிராஜா சொன்னார்.

பிறகு முதல்வருடன் பேச்சு வார்த்தைக்குப் போகும் போது முன்பக்கம் தமிழையும் பின்பக்கம் தொழிலாளிகளையும் ஒட்ட வைத்துக் கொண்டார்கள் படைப்பாளிகள். அப்போது அவர்கள் பெயர் ''தமிழ்ப் படைப்பாளிகள் - தொழிலாளிகள் கூட்டமைப்பு.''

பிறகு, நாம் யாரை ஒழிக்க நினைக்கிறோமோ அவர்கள் பெயரிலேயே சங்கம் வைப்பதுதான் புத்திசாலித்தனம் என்ற தெளிவு ஏற்பட்டவுடன் நாங்களும் தொழிலாளிகள் சங்கம் தான் என்று இப்போது அறிவித்துவிட்டார்கள்.

இதுதான் முதலாளிகள் சங்கம் தொழிற்சங்கமாக உருமாறிய கதை. இந்த மாற்றுச் சங்கம் முதலாளிகளின் கைக்கூலி சங்கம்தான் என்பதற்கு வாக்குமூலம் இதோ:

பெப்சியைப் போல இங்கேயும் பிரச்சினை வராமலிருப்பதற்காக ஆட்களைப் பார்த்துத்தான் தெரிவு செய்கிறோம் என்றும், சங்கத்திற்கான விதிமுறைகளையும் சட்டதிட்டங்களையும் மாற்றியிருக்கிறோம் என்றும் சொல்கிறார் பாரதிராஜா. (இ.டுடே பேட்டி).

முதலாளிகள் தொழிலாளிகளை வேலைக்குத் தேர்வு செய்வதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். தொழிற்சங்கத்திற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் சங்கத் தலைவரை கேள்விப்பட்டதுண்டா? ஜமுக்காளத்தில் வடிகட்டி கருங்காலிகளை மட்டுமே தொழிலாளிகளாகத் 'தெரிவு' செய்கிறார்களாம்.

ஒருவேளை அவர்களுக்கே எதிர்காலத்தில் சொரணை வந்து விட்டாலும் வேலை நிறுத்தமே செய்ய முடியாத அளவுக்கு தங்கள் தொழிற்சங்கத்தின் விதிமுறைகளையும் வகுத்து வைத்திருக்கிறார்களாம். ''எங்கள் சங்கம் வேலை நிறுத்தமே செய்யாது'' என்று பிரகடனம் செய்த முதல் தொழிற்சங்கத் தலைவர் உலகிலேயே பாரதிராஜாவாகத்தான் இருப்பார். இந்த 'மாற்று' சங்கத்திற்குத்தான் ஜனநாயக உரிமை கேட்கிறது நந்தன்!

படைப்பாளிகள் துவங்கியிருக்கும் மாற்று சங்கத்தில், பல லட்சம் சம்பளம் வாங்கும் இயக்குநர், நடிகர்கள் போன்ற 'தொழிலாளிகள்' எல்லாம் உறுப்பினராகலாம். ஆனால் 50, 100, சம்பளம் வாங்கும் தயாரிப்பு உதவியாளர்கள் (படைப்பாளிகளின் மொழியில் எடுபிடிகள்), டிரைவர்கள், பாத்திரம் கழுவுபவர்கள், துணை நடிகர்கள், நடிகைகள் ஆகியோர் உறுப்பினராக முடியாது.

ஏனென்றால் ''ஓட்டு மெஜாரிட்டியில் இவர்களெல்லாம் சங்கத்தின் பெரிய ஆளாகி விடுகிறார்கள்'' என்று குமுறுகிறார் பாரதிராஜா.

ஒரு முதலாளி என்ற வகையில் பாரதிராஜாவின் 'உள்ளக் குமுறலையும்', படைப்பாளி என்ற முறையில் அவர் படும் 'வேதனையையும்' பகிர்ந்து கொள்கிறது நந்தன்.

> தொழிற்சங்கம் வரம்பு மீறுவதாகப் பேசுவதற்குப் பெயர் நந்தன் வழியா, ஐயர் வழியா? மூளை உழைப்புக்குக் கீழ்ப்பட்டதுதான் உடலுழைப்பு என்று நிறுவும் ஆரியப் பார்ப்பனியத்திலிருந்து இந்தத் தமிழ்ப் படைப்பாளியம் எந்த வகையில் வேறுபட்டது? இதன் 'தத்துவார்த்தப் பின்னணி'தான் என்ன?

''பாத்திரம் கழுவுகிறவனுக்கும், காப்பி ஆற்றுகிறவனுக்கும் படைப்பைப் பற்றி என்ன தெரியும்?'' என்று பாலசந்தர் வகையறாக்கள் பேசும் போது, ''மாடு தின்னும் புலையா உனக்கு மார்கழி மாதம் ஏதடா... தேர் ஏதடா உனக்குத் திருநாள் ஏதடா'' என்று நந்தனார் நாடகத்தில் பார்ப்பன ஆண்டை பாடும் பாடலும், 'வரம்பு மீறாதே' என்று நந்தனை ஆண்டை எச்சரிக்கும் காட்சியும் நமக்கு நினைவுக்கு வருகிறது.

தொழிற்சங்கம் வரம்பு மீறுவதாகப் பேசுவதற்குப் பெயர் நந்தன் வழியா, ஐயர் வழியா? மூளையுழைப்புக்குக் கீழ்ப்பட்டதுதான் உடலுழைப்பு என்று நிறுவும் ஆரியப் பார்ப்பனியத்திலிருந்து இந்தப் 'தமிழ்ப் படைப்பாளியம்' எந்த வகையில் வேறுபட்டது? இதன் 'தத்துவார்த்தப் பின்னணி'தான் என்ன?

தொழிலாளிகள் வரம்பு மீறாத வரை அவர்கள் அடிமைகள்தான். வரம்பு மீறும் புள்ளியில் தான் புரட்சி துவங்குகிறது.

ஆனால் இப்படிப்பட்ட வரம்பு மீறல் எதையும் பெப்சி செய்யவில்லை என்பதுடன், அவர்கள் இதற்கெல்லாம் தயாராகவும் இல்லை என்பதே உண்மை. தங்கள் வேலைக்கும், கூலிக்கும் பாதுகாப்பு என்ற வரம்பிற்குள் தான் அவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களை 'வரம்பு மீறி' வரச் சொல்லி படைப்பாளிகள் தான் வம்புக்கு இழுக்கிறார்கள்.

தங்களது எல்லாப் பித்தலாட்டங்களையும் மறைக்கவும், தொழிலாளிகள் மீது ஏவிவிடவும் படைப்பாளிகள் வசமிருக்கும் மூன்றெழுத்து மந்திரம் - தமிழ். நந்தனின் மொழியில் சொல்வதானால் திரைப்படத் துறையிலும் மெல்ல அரும்பத் தொடங்கியிருக்கும் தமிழுணர்வு!

என்ன சந்தர்ப்பத்தில் அரும்பத் தொடங்கியிருக்கிறது இந்தத் 'தமிழ் உணர்வு'? ஹாலிவுட் திரைப்படங்களின் ஆக்கிரமிப்புக்கெதிராக பிரெஞ்சுத் திரையுலகம் போராடுகிறதே அப்படியா? அல்லது இந்திப் பட ஆக்கிரமிப்புக்கு எதிராகவா? இல்லை.

செயற்கைக்கோள் தொலைக்காட்சி மூலம் வரும் ஹாலிவுட் ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ்த் திரையுலகைக் 'காப்பாற்ற' தங்களுக்கு பெண்களின் சேலையை உருவும் உரிமை வேண்டும் என்று கேட்ட தமிழ் படைப்பாளிகள், இப்போது தமிழ்த் திரையுலகைக் 'காப்பாற்ற' தொழிலாளிகளைச் சூறையாடும் உரிமை கேட்கிறார்கள்.

நீண்டநாள் பேசாத பிள்ளை ''எப்பம்மா தாலியறுப்பே'' என்று திருவாய் மலர்ந்ததைப் போல தொழிலாளிகளுக்கெதிராகத்தான் அரும்புகிறது இவர்களின் தமிழ் உணர்வு.

பிற மொழிப் படங்களை கன்னடத்தில் மொழி மாற்றம் (டப்பிங்) செய்து வெளியிடக்கூடாது என்று கர்நாடகத்தில் தடை இருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழ் படைப்பாளிகள் தங்கள் படங்களை பல மொழிகளில் டப்பிங் செய்து வெளியிடுவதால் தமிழ்நாட்டில் அத்தகைய தடையைக் கோரமாட்டார்கள். சொல்லப் போனால் அவ்

www.padippakam.com

வாறு டப்பிங் செய்ய ஏதுவாக வேரும் விழுதும் பண்பாட்டு அடையாளமும் இல்லாத பாத்திரங்களைத் திட்டமிட்டே உருவாக்குவார்கள்.

பிறமொழிப் படங்களைத் தயாரிக்க மாட்டோம், இயக்க மாட்டோம் என்று உறுதி வழங்க மாட்டார்கள். பிறமொழி நடிகர்கள் நடிகைகளைப் பயன்படுத்த மாட்டோம் என்று ஒரு பேச்சுக்குக் கூட சொல்ல மாட்டார்கள்.

இவர்களுக்கு அகில இந்தியச் சந்தை வேண்டும், அதற்கு மேல் உலகச் சந்தையும் வேண்டும். ஆனால் தொழிலாளி மட்டும் 'தென்னிந்திய சங்கம்' வைத்துக் கொள்ளக் கூடாது. அனைத்திந்திய திரைப்படத் தொழிலாளர்கள் ஒற்றுமை கூடாது.

பட்டினியால் செத்த தொழிலாளர்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் கூடச் சிந்தமுடியாத 'நந்தன்', அகத்தியன், மணிரத்தினம் போன்ற இயக்குநர்களின் இந்திப் படங்களை அனைத்திந்தியத் தொழிலாளர் மாமன்றம் பாதியில் நிறுத்திவிட்டதற்காகக் கண்ணீர் விட்டுக் கதறுகிறது. எத்தகைய தூய தமிழுணர்வு!

நந்தனின் கணக்குப்படி தமிழன் இந்திப்படம் எடுப்பதும் தமிழுணர்வு, இந்திக்காரர்கள் தமிழ்ப் படம் எடுப்பதும் தமிழுணர்வு!

"தமிழரல்லாதவர்களாக இருந்தாலும் அவர்கள் தமிழ்ப்படங்களை உற்பத்தி செய்கிறார்கள் என்ற அளவில் அவர்கள் தமிழ்ப் படைப்பாளிகள் தான். எதிர்காலத்தில் திரைஉலகில் தமிழ்த் தேசிய உணர்வு வளர வழிவகுக்கும்" என்று பூரித்துப் போகிறது நந்தன்.

தங்களுக்கும் 'தமிழ்க் குடியுரிமை' வழங்கப்படவிருப்பதை எண்ணி மார்வாடிகளும், சேட்டுக்களும், போர்டு, டூபாண்ட், ஹூண்டாய், என்ரான் முதலாளிகளும் கூட பூரித்துத்தான் போவார்கள்.

தமிழ்ப்பட உற்பத்தி! இதென்ன அரசன் சோப், கோபால் பல்பொடி, அம்பிகா அப்பள உற்பத்தியைப் போன்றதா தமிழ்ப்பட உற்பத்தி? தமிழில் உற்பத்தியாவதெல்லாம் எதிர்காலத்தில் தமிழ்த் தேசியத்தை 'உற்பத்தி' செய்யும் என்றால் பத்திரிகை 'உற்பத்தியின்' மூத்த குடிகளான தினமணி, கல்கி, ஆனந்த விகடன்கள் தமிழகத்தில் வளர்த்து வருவதன் பெயர் தமிழ்த் தேசியமோ?

தமிழர் படமெடுத்த பெருமையின் மீது பாரதிதாசன் காறி உமிழ்ந்து பல பத்தாண்டுகள் ஆகின்றன. அதன் பின் தமிழ் மக்களின் பண்பாட்டைக் கொடிகட்டிப் பறக்கச் செய்திருக்கிறதோ தமிழத் திரையுலகம்?

"இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த தமிழர்களைச் சுட்டுப் பொசுக்கிய பக்தவச்சலத்திற்கு மணிமண்டபமா?" என்று தலையங்கத்தில் கொதிக்கிறது நந்தன். தமிழ் உணர்வையும், பண்பாட்டையும் சுட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கிய படைப்பாளிகள் சங்கம் வைத்தால் தமிழ் வளர்ப்பார்கள் என்றால் பக்தவச்சலத்தின் மணிமண்டபத்தில் மட்டும் தமிழ் வளராதா என்ன?

பெப்சி தொழிலாளிக்கெதிராக வீர முழக்கம் செய்யும் படைப்பாளிகள் "பெப்சியை ஏ.வி.எம். திரைமறைவில் ஆதரிக்கிறது தெரியுமா" என்று ரகசியமாக நம் காதில் கிசுகிசுக்கிறார்கள். "பெரிய முதலாளிகளுக்கும் சிறிய முதலாளிகளுக்கும் முரண்பாடு வரும்போது நீங்கள் சிறிய முதலாளிகளைத்தானே ஆதரிக்க வேண்டும்" என்று நமக்கு 'கொள்கைத் தெளிவு' ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

**"எங்கள் சங்கம் வேலை நிறுத்தமே செய்யாது", என்று பிரகடனம் செய்த முதல் 'தொழிற் சங்கத் தலைவர்' உலகிலேயே பாரதிராஜாவாகத் தான் இருப்பார். இந்த 'மாற்று' சங்கத்திற்குத் தான் உரிமை கேட்கிறது நந்தன்.**



ஏ.வி.எம். தமிழனின் எதிரி என்று படைப்பாளிகள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டியது தானே! தடுப்பதென்ன தமிழுணர்வா?

"தமிழ், தமிழன் என்ற அடிப்படையில் தமிழகத்தில் எந்தவொரு சக்தி எழுந்தாலும் அதை எப்படியாவது தடுத்துவிட வேண்டும் என்று துடிக்கும் இந்திய தேசியவாதிகளின் தொங்கு சதையாக ரஜனி செயல்படுகிறார்; பெப்சியை மறைமுகமாக ஆதரிக்கிறார்" என்று குற்றம் சாட்டுகிறது நந்தன்.

இந்திய தேசியவாதி மட்டுமல்ல, இந்து தேசியவாதிதான் ரஜனி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த தொங்கு சதையை சூப்பர் ஸ்டாராக எப்படித் திட்டமிட்டே உருவாக்கினோம் என்று இரண்டு தேசியவாதிகள் ராஜ் தொலைக்காட்சியில் பேட்டி கொடுத்தார்கள்.

ஏவி.எம். சரவணன், எஸ்.பி. முத்துராமன் என்ற அந்த இரு 'தமிழின விரோதி'களை அடையாளம் காட்டி அட்டைப் படக் கட்டுரை வெளியிடுமா நந்தன்? அல்லது "என்ன இருந்தாலும் தமிழன்" என்று மன்னித்து விட்டுவிடுமா?

சுயமரியாதையுணர்வற்ற கருங்காலிகளாக உள்ள தொழிலாளர்களை மட்டுமே தெரிவு செய்து தன் சங்கத்தில் உறுப்பினராக்குவதாகச் சூசகமாகத் தெரிவித்துள்ள பாரதிராஜா படைப்பாளிகளை எப்படித் தெரிவு செய்கிறார்? சுயமரியாதை உணர்வும் தமிழ்ப் பற்றும் கொண்ட போராளிகளாகப் பார்த்து தெரிவு செய்கிறாரா?

"எங்கள் சங்கம் வேலைநிறுத்தம் செய்யாது" என்று தங்கள் கொள்கையைத் தெளிவான சொற்களில் பிரகடனம் செய்த பாரதிராஜா, "எங்கள் படைப்பாளிகள் இந்திய தேசிய பஜனைகளைப் படமாக்க மாட்டார்கள்" என்று சூசகமாகவாவது அறிவித்திருக்கிறாரா?

"நியாயத்தின் பக்கம் தமிழ்ப் படைப்பாளிகள்" என்று தன் கட்டுரைக்குத் தலைப்பிட்டிருக்கிறது நந்தன். அதாவது அநியாயத்தின் பக்கம் தமிழ்த் தொழிலாளிகள்!

வர்க்கம் என்ற அந்த 'கெட்ட வார்த்தை'யை அகாராதியிலிருந்தே ஒழித்துக் கட்ட பல அறிஞர்கள் முயற்சிக்கிறார்கள். அதுவோ நந்தன் இதழின் அட்டையில் கொட்டை எழுத்தில் பாரதிராஜாவின் காலடியில் அமர்ந்து சிரிக்கிறது!

வர்க்க அரசியலை விடுங்கள். கலைத் துறையில் தமிழுணர்வின் 'வளர்ச்சி'தான் நம்மை பிரமிக்கச் செய்கிறது. எம்.ஆர். ராதா, அண்ணா, கருணாநிதி போன்றோரின் படைப்புகளில் பார்ப்பன எதிர்ப்பு, சுயமரியாதை, தமி



படிப்பகம்

www.padippakam.com

முணர்வு போன்ற கொள்கைகள் இருந்ததால் அவர்கள் தமிழ்ப் படைப்பாளிகள் என அறியப்பட்டார்கள். கம்பன் தமிழினத் துரோகி என அறியப்பட்டான்.

பிறகு பாண்ட் சட்டை, வேட்டிக் கரை, சாட்டைக் குச்சி, மாட்டுக் கொம்பு போன்ற சடப் பொருள்களில் கறுப்பு - சிவப்பு வண்ணம் பூசப்பட்டிருந்தாலே அத்தகைய திரைப்படங்களின் படைப்பாளிகள் தமிழ்ப் படைப்பாளிகளாக அங்கீகரிக்கப்பட்டார்கள்.

ஆனால் இப்போது புதிதாக முகிழ்த்து வரும் உலகத் தமிழ்த் தேசியத்திற்கு அதுவும் வேண்டாம், எதுவும் வேண்டாம். மணிரத்தினம், ஷங்கர், விசு அனைவரும் தமிழ்ப் படைப்பாளிகளே!

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் பிறக்கத் தவறிய துரதிருஷ்டத்தை எண்ணி எட்டப்பன் தான் - பாவம் பெரிதும் வருந்துவான்.

• • •

திரைப்படத் தொழிலாளர் போராட்டம் குறித்து வாய் திறக்காமல் மவுனமாகத்தான் இருந்தார்கள் மார்க்சிஸ்டுகள். பாரதிராஜாவின் கார் உடைந்த போதுதான் அவர்களின் மவுனமும் உடைந்தது. முதலில் பாரதிராஜாவின் காரை உடைத்ததைக் கண்டித்தார்கள். ம.க.இ.க. தனது வெளியீட்டில் மார்க்சிஸ்டுகளின் குட்டை உடைத்தது.

உடனே பெப்சி சங்கத்தை உடைப்பதற்காக பாரதிராஜாவை லேசாகக் கண்டித்தார் சங்கரய்யா. "நீங்கள் சி.பி.ஐ. (C.P.I.) கட்சியை உடைத்ததை 'நான் கேட்டேனா, என்னைக் கேட்க நீ யார்" என்கிற ரீதியில் சங்கரய்யாவின் மூக்கை உடைத்தார் பாரதிராஜா.

எல்லாம் உடைந்து சிதறுவதற்குள் தெளிவான கொள்கை முடிவெடுத்து விடுவது அவசியமாகிவிட்டது. கலை இரவின் புரவலர்களாகவும், நட்சத்திரங்களாகவும் இருந்து செங்கொடியின் கீழே ஆயிரக்கணக்கான மக்களை இருட்டில் திரட்டிக் கொடுக்கும் படைப்பாளிகள் ஒருபுறம்; கொடியின் நிறத்தை சிவப்பாக வைத்திருக்கும் பாவத்திற்காக ஆதரித்தே தீரவேண்டிய தொழிலாளிகள் மறுபுறம்.

நன்கொடையா - சந்தாவா, எந்தப் பக்கம் என்ற கேள்விக்கு 'இரண்டு பக்கமும்தான்' என்று விடை கண்டுவிட்டார்கள் மார்க்சிஸ்டுகள். ஐக்கிய முன்னணி அரசில் மார்க்சிஸ்டு கட்சி இருக்கிறதா எதிர்க்கிறதா என்ற கேள்விக்கு விடை தெரிந்தவர்களால் இதையும் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் "எங்களை ஆதரிப்பதாக இருந்தால் அதை ஸ்டாம்பு பேப்பரில் எழுதிக் கொடு" என்று படைப்பாளிகள் மிரட்டியிருப்பார்கள் போலும்! ஸ்டாம்பு பேப்பர் வேண்டாம், கட்சிப் பேப்பரில் எழுதுகிறோம் என்று ம.க.இ.க.வை வசைபாடும் சாக்கில் 'நைசாக' தங்கள் விசுவாசத்தை படைப்பாளிகளுக்குத் தெரியப்படுத்தி விட்டார்கள்.

படைப்பாளிகள் என்று கூறிக்கொள்வோரின் யோக்கியதையைக் கேள்விக்குள்ளாக்கிய எமது 16 பக்க வெளியீட்டின் கடைசிப் பக்கத்திலிருந்து ஒரு வரியை எடுத்துக் கொண்டு வியாக்கியானம் எழுதித் தள்ளிவிட்டார்கள்.

"தமிழகத்தின் சீரழிவுக்கே இந்த இயக்குநர்கள் - தான் காரணம் என்றால் இவர்கள் மேற்கொண்டு படமெடுக்காமல் இருந்து விட்டால் தமிழகம் சீர்பட்டு விடுமா?" என்று நம்மை மடக்குகிறார்கள்.

நந்தனின் கணக்குப்படி தமிழன் இந்திப்படம் எடுப்பதும் தமிழுணர்வு, இந்திக்காரர்கள் தமிழ்ப்படம் எடுப்பதும் தமிழுணர்வு! தங்களுக்கும் 'தமிழ்க் குடியுரிமை' வழங்கப்பட விருப்பதை எண்ணி மார்வாடிகளும், சேட்டுகளும், போர்டு, டூபாண்ட், ஹுண்டாய், என்ரான் முதலாளிகளும் கூடப் பூரித்துத்தான் போவார்கள்!

எழுப்பிய கேள்விக்கு நேரடியாக பதில் சொல்லாமல் அந்தக் கேள்விக்கு தானே ஒரு வியாக்கியானம் எழுதி, பிறகு தன் சொந்த வியாக்கியானத்துக்குப் பதில் எழுதுவதென்பது திருவாளர் ஈ.எம். சங்கரன் நம்பூதிரி மற்றும் அவரது சிஷ்ய கோடிகளின் பாணி.

ஏன் திருடுகிறாய் என்று கேட்டால், நான் நிறுத்தினால் திருட்டே ஒழிந்து விடுமா என்று எதிர்க்கேள்வி கேட்கிறது தீக்கதிர்.

அப்புறம் "இவர்கள் பாரதிராஜாவை மட்டும் சொல்லவில்லை, மணிரத்தினம், விசு, பாலசந்தர்.... எல்லோரையும் சேர்த்தே சொல்கிறார்கள்" என்று இயக்குநர்களின் பட்டியலொன்றை வெளியிடுகிறது. அது நன்கொடையாளர் பட்டியல் போலும்!

தீக்கதிர் குறிப்பிட்டுள்ள இயக்குனர்கள் பலரின் படங்களுக்கு 'புதிய கலாச்சாரம்' விரிவாக விமர்சனம் எழுதியிருக்கிறது. நாம் தடை செய்யக் கோரிய 'பம்பாய்' போன்ற திரைப்படங்களுக்கு 'மார்க்சிஸ்டுகள்' விருது வழங்கி கவுரவித்துள்ளனர். எனவே இவர்களுக்கு விளக்கம் எழுதிப் பயனில்லை.

ஆனால் மக்களின் யதார்த்த வாழ்வை சரியாக சித்தரித்த படம் என்று பாலசந்தரின் 'கல்கி'யைக் குறிப்பிடுகிறது தீக்கதிர். 'கல்கி' கதாநாயகியின் ஆணாதிக்க எதிர்ப்பு போராட்ட வடிவத்தைத் தனது ஜனநாயக மாதர் சங்க உறுப்பினர்களுக்கு தீக்கதிர் சிபாரிசு செய்யட்டும். தீக்கதிர் குறிப்பிடும் இன்னொரு நல்ல படம் விசுவின் 'சம்சாரம் அது மின்சாரம்'! கணவனே கண் கண்ட தெய்வம், மணாளனே மங்கையின் பாக்கியம் போன்ற படங்களையும் சேர்த்திருக்கலாம். அச்சிட இடமில்லை போலும்!

படைப்புரிமை, கலை, தவம் என்பதெல்லாம் சும்மா 'உடான்ஸ்' என்று மேற்படி படைப்பாளிகளே தங்களுக்குள் பேசிச் சிரித்துக் கொள்கிறார்கள். ஆனால் ரோசமென்னவோ மார்க்சிஸ்டுகளுக்குத்தான் வருகிறது.

அரசியலிலும் இப்படித்தான்! 'பாராளுமன்றம் பன்றித் தொழுவம்' என்று நாம் சொன்னால் காங்கிரசு, அ.தி.மு.க., தி.மு.க.வினருக்கெல்லாம் கோபம் வருவதில்லை. "கிட்டத்தட்ட அப்படித்தானே இருக்கிறோம்" என்று கருதி அமைதியாக இருந்து விடுகிறார்கள்.

ஆனால் மார்க்சிஸ்டுகளுக்குத் தான் மூக்கு சிவக்கிறது. "நாங்கள் பசும்புல்லை மட்டுமே மேயும் கன்றுக்குட்டிகள். எங்களையும் பன்றிகள் என்று எப்படிச் சொல்லலாம்?" என்று உருமுகிறார்கள். அதோடு நிற்பதில்லை; "நம்மையெல்லாம் பன்றிகள் என்று சொல்கிறானே உங்களுக்குச் சொரணையில்லையா?" என மற்ற பன்றிகளையும் உசுப்பி விடுகிறார்கள்.

அரசனை விஞ்சிய ராஜ விசுவாசிகள்! விசுவாசத்திற்குரிய அரச சன்மானம் கிடைக்குமா? அடுத்த கலை இரவில் காண்க.

■ மருத்துவன்


படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் சட்டமல்ல விநாயகர் அகவல்!

விநாயகர் ஊர்வலம் என்ற பெயரில் ஆண்டு தோறும் சென்னையிலும் தமிழகத்தின் பல பகுதிகளிலும் இந்து முன்னணி நடத்திவரும் கலவரமும் காலித்தனமும் அனைவரும் அறிந்ததுதான்.

மதவெறியைத் தூண்டும் நோக்கத்துடனும் முஸ்லீம் மக்களுக்கெதிராகக் கலவரம் நடத்தும் நோக்கத்துடனும்தான் இந்த விநாயகர் ஊர்வலம் தமிழகத்தின் புகுத்தப்பட்டுள்ளது என்பதை அரசு உள்ளிட்ட அனைவரும் அறிந்திருந்த போதும், இதைத் தடை செய்ய வேண்டுமெனத் தொடர்ந்து பலர் கோரிக்கை வைத்த போதும் இந்த ஊர்வலம் அரசால் தடை செய்யப்படுவதில்லை.

மாறாக, தி.மு.க. அரசு, பெரியார் திராவிடர் கழகத்தினரின் பெரியார் கைத்தடி ஊர்வலத்தைத்தான் தடை செய்திருக்கிறது.

இது தி.மு.க. அரசின் சந்தர்ப்பவாதம், அனால், ''அந்த இடத்தில் இருந்து கொண்டு கலைஞர் இதைத்தான் செய்ய முடியும்'' என்று சமாதானப் பட்டுக் கொள்கின்றவர்களும் இருக்கிறார்கள். பார்ப்பனக் காவடிக்குத் தோள் கொடுப்பதைத் தவிர 'அந்த' இடத்திற்குப் போனால் வேறெதுவும் செய்ய முடியாததென்றால் என்ன வெங்காயத்திற்கு 'அந்த' இடத்திற்குப் போக வேண்டும் என்ற கேள்வியை சற்று ஒத்தி வைப்போம். 'அந்த' இடத்தில் அமர்ந்து கொண்டு செய்யக் கூடியது இது மட்டும்தானா என்ற கேள்வியைப் பரிசீலிப்போம்.

சென்ற ஆண்டு விநாயகர் ஊர்வலம் தொடர்பாக சென்னை நகரக் காவல்துறைக்கு (தமிழக அரசுக்கு) எதிராக இந்து முன்னணி சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கு, இவ்விசயத்தைப் புரிந்து கொள்ள நமக்கு உதவும்.

கடந்த ஆண்டுகளில் அந்தப் பாதை வழியே சென்றபோது நடந்த கலவரங்கள், துப்பாக்கிச்சூடு ஆகியவை காரணமாக மேற்கூறிய பாதையில் ஊர்வலமாகச் செல்ல அனுமதி மறுத்த காவல் துறை, வேறு பாதை வழியாகச் செல்ல ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கியது.

ஊர்வலப்பாதை 'மதச் சம்பிரதாயம் சம்பந்தப்பட்ட விசயம்' என்றும் அதைத் தன் விருப்பம்போல் மாற்றியமைக்கக் காவல்துறைக்கு அதிகாரமில்லை என்றும் கூறி சென்னை உயர்நீதி மன்றத்தில் இந்து முன்னணி 'விநாயகர் சதுர்த்தி மத்தியக் குழு' என்ற பெயரில் வழக்கு தொடர்ந்தது.

தனது வாதங்களைக் கீழ்கண்டவாறு முன்வைத்தது :

### இந்து முன்னணியின் வாதங்கள்

கடந்த 13 ஆண்டுகளாக, விநாயகர் சதுர்த்தி பண்டிகையை சென்னை நகரைச் சேர்ந்த இந்துக்கள் தமது வீட்டளவில் நடத்தும் விழாவாக மட்டும் நடத்தவில்லை; பொதுச் சாலைகளில் அலங்காரப் பந்தல் அமைத்து சிலைகளை வைத்து வழிபாடுகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றனர்.

பிரிட்டிஷாரை எதிர்த்து சுயராச்சியம் அடைவதற்கு இந்தியர்களை ஒன்றுபடுத்தும் நோக்கத்துடன் விநாயகர் ஊர்வலம் எனும் சம்பிரதாயத்தை திலகர்தான் முதன்முதலில் துவங்கினார். காந்தி கண்ட ராமராச்சியத்தைத் தோற்றுவிப்பதற்காகப் பலதரப்பு மக்களிடமும் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துவதற்கு மேற்கூறிய விநாயகர் ஊர்வலம் தேவையாக உள்ளது.



இது ஒரு மத சம்பிரதாயம் என்பதால் இந்த ஊர்வலத்தை நடத்த காவல்துறையிடம் முன் அனுமதி பெறத் தேவையில்லை; ஊர்வலப் பாதையைத் தீர்மானிக்கவோ, திருத்தவோ காவல்துறைக்கு அதிகாரம் கிடையாது என்பது இந்து முன்னணியின் வாதம்.

### காவல்துறையின் வாதங்கள்

காவல்துறை (தமிழக அரசு) தனது எதிர் மனுவில் கீழ்க்கண்டவாறு பதிலளித்தது :

கடந்த ஆண்டுகளில் பல சந்தர்ப்பங்களில் இந்து - முஸ்லீம் மோதல், கலவரம், துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. இந்த ஆண்டும் அவ்வாறு சட்டம் ஒழுங்கு பிரச்சினை தோன்ற வாய்ப்புள்ளது.

விநாயகர் சிலைகளை ஊர்வலமாகக் கொண்டு சென்று கரைப்பது என்பது சென்னையில் சமீபகாலத்தில் ஏற்பட்டதுதானேயொழிய மரபு அல்ல; எனினும் இப்பழக்கம் பற்றி ஏதும் கருத்துக் கூற அரசு விரும்பவில்லை.

திலகர் இம்மரபைத் துவக்கியதிலும் அரசியல் நோக்கம்தான் மேலோங்கியிருக்கிறது. தற்போது இந்து முன்னணி ஞாயிற்றுக்கிழமையன்று ஊர்வலம் வைத்திருப்பதும் ஆகம விதிகள் அல்லது சாத்திரங்களின் அடிப்படையில் அல்ல; மயிலைக் கோயில் சார்பாக நடத்தப்படும் அறுபத்து மூவர் விழா போன்றவைகளைத்தான் 'மத ஊர்வலம்' என்ற அடிப்படையில் காவல்துறை முன் அனுமதியில்லாமல் நடத்த முடியும். விநாயகர் ஊர்வலம் அத்தகையது அல்ல. எனவே காவல் துறை முன் அனுமதி பெற்றுத்தான் தீர வேண்டும் என்பது அரசுத்தரப்பு வாதத்தின் சாரம்.

### உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அணுகுமுறை!

இரு தரப்பு வாதங்களையும் கேட்டபின் தனது தீர்ப்பில் உயர்நீதி மன்றம் கீழ்க்கண்ட விசயங்களை குறிப்பிட்டது.

விநாயகர் சதுர்த்தியன்று விநாயகர் சிலைகளை நிறுவி, குறிப்பிட்ட காலத்திற்கு வழிபட்டு, பின்னர் அதனை ஊர்வலமாக எடுத்துச் சென்று கரைப்பது மத சம்பிரதாயத்தின் பிரிக்கவொண்ணாத அம்சம்தான் என்பதை ஏற்கலாம்... ஆனால் அந்தக் குறிப்பிட்ட பாதை வழியாக ஊர்வலம் செல்



படிப்பகம்

www.padippakam.com

வதுதான் வெகு நீண்ட காலம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சம்பிரதாயம் என்று நிரூபிக்க ஆதாரம் ஏதும் (இந்து முன்னணியினரால்) தரப்படவில்லை.

விநாயகரை இந்த இடத்தில்தான் வைத்து வழிபடவேண்டும். இன்ன இடத்தில்தான் கரைக்க வேண்டும் என்பதற்கும் ஆதாரம் ஏதும் தரப்படவில்லை...

மேலும் சுதந்திரப் போராட்ட காலத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்கான அரசியல் கருவியாக இவ்விழா பயன்படுத்தப்பட்டதைப் போலவே, இன்றும் சில இடங்களில், சில சந்தர்ப்பங்களில் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள இது பயன்படுத்தப்படுகிறது என்ற உண்மையையும் நாம் மறந்து விட முடியாது. எனினும் இவ்வாறு அரசியல் நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதனாலேயே இந்த ஊர்வலம் தனது மதத்தன்மையை இழந்து விடுவதில்லை.

அடுத்ததாக, அரசியல் சட்டப்பிரிவு 25, 26 மற்றும் 19 (1) (b) ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் முற்றுரிமைகள் அல்ல; குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நிலவும் எதார்த்தமான நிலைமைகள், ஊர்வலத்தின் போது கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு அவற்றை முறைப்படுத்த (அரசுக்கு) அதிகாரம் உண்டு.

எனவே விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று கரைப்பதென்பது மதச் சம்பிரதாயம் தான் என்ற போதிலும், அது முற்றுரிமை அல்ல என்றும் அதனை முறைப்படுத்தவும், கட்டுப்பாடுகள் விதிக்கவும் காவல்துறைக்கு அதிகாரம் உண்டு என்றும் கருதுகிறோம்.''

இவ்வாறு உயர்நீதி மன்ற பெஞ்சு சென்ற ஆண்டு தீர்ப்புக் கூறியது.

**எது மத உரிமை?**

மேற்கூறிய உயர் நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாக இப்பிரச்சினை தீர்ந்து விட்டதா? நாளையே இந்த அரசோ அல்லது வேறெந்த அரசோ - பழைய படி மசூதி வழியாகவே ஊர்வலம் செல்ல அனுமதியளிக்கலாம்.

எனவே, ஊர்வலப் பாதையல்ல பிரச்சினை - விநாயகர் சதுர்த்தி என்ற பெயரில் பார்ப்பன இந்துமத வெறி அரசியலை நடத்துவது இந்து முன்னணியின் மத உரிமையா என்பதுதான் பிரச்சினை.

இந்த ஆண்டு மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் சார்பில் சென்னை மேயர், மாநகராட்சி ஆணையர், காவல்துறை ஆணையர், மாநிலக் காவல்துறை இயக்குநர் மற்றும் உள்துறைச் செயலர் ஆகியோருக்கு ஒரு தாக்கீது அனுப்பப்பட்டது. ''சென்னையிலும் மற்றும் பிற நகரங்களிலும் கடை வீதிகள், முச்சந்திகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் நகராட்சிக்குச் சொந்தமான இடங்களை ஆக்கிரமித்து விநாயகர் சிலை வைக்க அனுமதிக்கக் கூடாது'' என அதில் கூறப்பட்டிருந்தது. ஆனால் இதற்குப் பதில் இல்லை.



ஆனால் சிலை வைக்க இடம் பிடிப்பது தொடர்பாக இந்து முன்னணிக்கும் இந்து மக்கள் கட்சிக்குமிடையே தகராறு ஏற்பட்டதால், இரு அமைப்பினரும் எந்தெந்த இடங்களில் சிலை வைக்கலாம் என்பதை ஆர்.டி.ஓ. ஒதுக்கித் தருவாரென அரசு அறிவித்தது. அதாவது பொது இடங்களை ஆக்கிரமிக்க ஆர்.டி.ஓ. ஏற்பாடு செய்து தருவார் என்பதுதான் இதன் பொருள்.

> *பாபர் மசூதி வழியாகச் செல்வதுதான் மதச் சம்பிரதாயம் என்பதை நீதிமன்றம் நிராகரித்து விட்டது. அதேபோல பொது இடங்களை ஆக்கிரமித்து விநாயகர் சிலை வைப்பதுதான் இந்து சம்பிரதாயம் என ராம. கோபாலன் வாதாட முடியாது. அப்படியொரு 'மத உரிமை' இருந்தால் ஆக்கிரமித்த இடங்களிலெல்லாம் ஜெ - சசி கும்பல், விநாயகர் கோயில் கட்டியிருக்கும்.*

இந்து முன்னணி நடத்தும் விநாயகர் வழிபாடும், ஊர்வலமும் மத உரிமைகள் அல்ல என்றும், பொது இடங்களை ஆக்கிரமித்து விநாயகர் சிலைகளை வைக்க அரசே அனுமதிப்பது சட்டவிரோதம் என்றும் பொதுநலன் கோரும் வழக்கு ஒன்று சென்னை உயர் நீதி மன்றத்தில் ம.க.இ.க. சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விநாயகர் சதுர்த்தி என்பது அனைத்து சாதியினரும் கொண்டாடும் பண்டிகை அல்ல; சிறுபான்மையான பார்ப்பன, 'உயர்' சாதி இந்துக்கள் மட்டுமே கொண்டாடும் பண்டிகை. களிமண் உருவப் பொம்மையை வைத்து வழிபடுவதும் பிறகு அதை கிணறு, குளம், ஆற்றில் கரைப்பதும் அவர்களது மரபு.

**அரசின் கோழைத்தனம்!**

பெரிய விநாயகர் சிலைகளைப் பொது இடங்களில் நிறுவி, பிறகு அவற்றை ஊர்வலமாக எடுத்துச் சென்று கடலில் கரைப்பதென்பது கடந்த 14 ஆண்டுகளாக இந்து முன்னணி உருவாக்கி வரும் 'மரபு'. 'திலகர் செய்தார்', 'காந்தியின் ராமராச்சியம்' என்று இந்து முன்னணி எதைச் சொன்னாலும் அவையெல்லாம் அரசியல் நோக்கத்திற்கானவையே. இதைத் தனது எதிர் மனுவில் அரசு தரப்பும் குறிப்பிட்டுள்ளது; எனினும் இதை வலியுறுத்தாமல் கோழைத்தனமாகப் பின்வாங்கிவிட்டது.

வெகு நீண்ட காலமாக நிலவி வரும் பழக்கம் மட்டும்தான் 'மத சம்பிரதாயம்' என நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒரு சம்பிரதாயம் இந்து மதத்தினர் அனைவராலுமோ, ஒரு உட்பிரிவினராலோ, ஒரு சாதியாலோ, ஒரு வட்டாரத்தினராலோ பின்பற்றப்பட்டால் மட்டுமே அது சம்பிரதாயமாக ஏற்கப்பட வேண்டும். மதச் சம்பிரதாயம் என்பதற்கு உச்சநீதி மன்றம் இதுவரை அளித்துள்ள விளக்கங்கள் இவ்வாறுதான் கூறுகின்றன.

எனவே இந்து முன்னணி உருவாக்கியிருக்கும் இந்த விநாயகர் வழிபாடு ஒரு மத சம்பிரதாயம் அல்ல; அரசியல் சட்டப் பிரிவுடன் 25, 26 இன் கீழ் வழங்கப்படும் மத உரிமை எனும் அடிப்படை உரிமையைப் பெறத் தகுதியானதல்ல.

மேலும், ஒரு சம்பிரதாயத்தை உருவாக்குவதற்கு இந்து முன்னணி



படிப்பகம்

www.padippakam.com

என்பது ஒரு மடமோ, ஆதினமோ, சாதியோ, உட்பிரிவோ அல்ல; சட்ட மொழியில் சொன்னால் அது ஒரு அரசியல் பண்பாட்டு அமைப்பு - அவ்வளவுதான்! மத மரபைத் தோற்றுவிக்கும் அதிகாரம் அதற்குக் கிடையாது. யார் வேண்டுமானாலும் மத சம்பிரதாயத்தைப் புதிதாகத் தோற்றுவிக்கலாம் என்றால் நாமும் துடைப்பக்கட்டை வழிபாடு ஒன்றைத் துவக்கி மத உரிமை கோரலாம்; அல்லது ஊர்வலமாக விநாயகரை எடுத்துச் சென்று கரைப்பதற்குப் பதிலாக 'உடைப்பதுதான் எங்கள் சம்பிரதாயம்' என்றும் நாம் கூறலாம்.

**ஆக்கிரமிப்பது இந்து சம்பிரதாயமா?**

''ஐஸ் ஹவுஸ் மசூதி வழியாகச் செல்வதுதான் மதச் சம்பிரதாயம்'' என்பதை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. அதே போல பொது இடங்களை ஆக்கிரமிப்பதுதான் ''இந்து சம்பிரதாயம்'' என்றும் ராம கோபாலன் வாதாட முடியாது. அப்படியொரு 'மத உரிமை' இருந்திருந்தால் ஆக்கிரமித்த இடங்களையெல்லாம், ஜெ - சசி கும்பல் ஒரு பிள்ளையார் கோயிலைக் கட்டியிருக்கும்.

சென்னையிலும், பிற நகரங்களிலும் பேருந்து நிறுத்தங்கள், முச்சந்திகள், கடைவீதிகள், நடைபாதைகள், நகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் - ஆகியவற்றில்தான் இந்து முன்னணியின் விநாயகர்கள் எழுந்தருளுகின்றனர். மேற்கூறிய இடங்கள் 'அங்கீகரிக்கப்பட்ட வழிபாட்டுத் தலங்கள்' அல்ல; அதாவது கோயில்கள் அல்ல. எனவே எந்தப் பொது இடத்திலும் விநாயகர் சிலை வைக்கக்கூடாது என அரசு கறாராக உத்தரவு பிறப்பிக்க முடியும். ஆனால் அரசோ ஆக்கிரமிப்பாளர்களுக்கு இடத்தைப் பகிர்ந்தளிக்க ஆர்.டி.ஓ.வை நியமிக்கிறது.

இவ்வழக்கில் அரசு மற்றும் நீதிமன்றத்தின் அணுகுமுறையைக் கூர்ந்து கவனியுங்கள். ''அரசியல் நோக்கம் கொண்டதுதான் - எனினும் அதுபற்றி நாங்கள் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை'' என்கிறது அரசு. ''அரசியல் நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படுவது உண்மைதான் எனினும் ஊர்வலம் தனது மதத்தன்மையை இழந்து விடுவதில்லை'' - என்கிறது நீதிமன்றம்.

இந்து முன்னணியின் விநாயகர் (வழிபாடு) ஊர்வலம், அரசியல் நடவடிக்கையா, மதச்சடங்கா இரண்டில் எது என்பதே நம் கேள்வி. பொது இடங்களை ஆக்கிரமித்து விநாயகர் சிலைகளை வைப்பது மத நடவடிக்கை என்றால், பாபர் மசூதியை ஆக்கிரமித்து

> இந்து முன்னணியின் விநாயகர் (வழிபாடு) ஊர்வலம், அரசியல் நடவடிக்கையா மதச் சடங்கா இரண்டில் எது என்பதே நமது கேள்வி. இவ்வாறு இனம் பிரித்து சொல்லவேண்டிய நெருக்கடி வரும்போது அரசு வழுக்குகிறது; நீதிமன்றமோ அப்போதைக்குத் தப்பித்துக் கொள்ள ஒரு சந்து கிடைக்குமா எனத் தேடுகிறது.

(இடித்து) ராமன் சிலை வைத்ததும் மத நடவடிக்கை என்றுதான் ஏற்க வேண்டியிருக்கும்.

இந்து மதவெறியர்களும் அப்படித்தான் சொல்கிறார்கள். ஒரே நேரத்தில் மதத்தை அரசியல் நடவடிக்கையாகவும், அரசியலை மதச்சடங்காகவும் நடத்துவதற்கு இந்து முன்னணிக்கு இப்படித்தான் வாய்ப்பளிக்கப்படுகிறது.

இவ்விரண்டு உரிமைகளையும் தெளிவாக இனம் பிரிக்கவியலாத வாறு வேண்டுமென்றே மொண்ணையாக்கியிருக்கிறார்கள் அரசியல் சட்டத்தை உருவாக்கிய 'சிற்பிகள்'. அவ்வாறு இனம் பிரித்துச் சொல்ல வேண்டிய நெருக்கடிகள் வரும் போது அரசு வழுக்குகிறது; நீதிமன்றமோ அப்போதைக்குத் தப்புவதற்கு ஒரு சந்து கிடைக்குமோ என்று தேடுகிறது.

**மத உரிமையா, மதசார்பற்ற உரிமையா எதற்கு முன்னுரிமை?**

மத உரிமையும், மதச்சார்பற்ற

> கொழுக்கட்டைக்குப் பதிலாகக் கையெறி குண்டு போன்ற நவீன ஆயுதங்களைத் தாங்கி விநாயகர்கள் பவனி வருகின்றனர். ஆனால் சமீபத்தில் கிருஷ்ணசாமி நடத்திய ஊர்வலத்தில் கையில் பை கூடக் கொண்டு வரக் கூடாது என்று நிபந்தனை விதித்தது நீதிமன்றம்.

சிவில் உரிமைகளும் மோதிக் கொள்ளும் சந்தர்ப்பங்களிலே அரசும், நீதிமன்றமும் மதச்சார்பற்ற உரிமைக்குத்தான் உடனே குழி வெட்டுகின்றன.

விநாயகர் ஊர்வலத்திற்காக (சட்டப்பிரிவு - 25, 26 : மதஉரிமை) பெரியார் கைத்தடி ஊர்வலம் (சட்டப்பிரிவு - 19 : கருத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை) தடை செய்யப்படுகிறது.

சமத்துவ உரிமைக்கும் (சட்டப்பிரிவு - 14) மத உரிமைக்கும் (சட்டப்பிரிவு - 25, 26) முரண்பாடு வரும்போது சமத்துவ உரிமை பலியிடப்படுகிறது. ஷரியத்திடம் ஷாபானு சரணடைய வேண்டியிருக்கிறது.

மத உரிமைகள் விசயத்தில் நீக்குப் போக்காகவும், தாராள மனதுடனும் நடந்து கொள்ளும் நீதிமன்றங்கள் சிவில் உரிமைகள் விசயத்தில் வேறு அளவுகோலைப் புயன்படுத்துகின்றன.

கொழுக்கட்டைக்குப் பதிலாக கையெறி குண்டு போன்ற நவீன ஆயுதங்களைத் தாங்கி விநாயகர்கள் பவனி வருகின்றனர். ஆனால் சமீபத்தில் கிருஷ்ணசாமி நடத்திய ஊர்வலத்தில் வருபவர்கள் கையில் பை கூடக் கொண்டு வரக்கூடாது என நிபந்தனை விதித்தது நீதிமன்றம்.

சமீபத்தில் கேரள உயர்நீதி மன்றம் கடையடைப்புகளுக்கு (பந்த்) எதிராக வழங்கியுள்ள தீர்ப்போ, அரசியல் சட்டப்பிரிவு - 19 வழங்கும் அடிப்படை உரிமையைக் கிட்டத்தட்ட ரத்து செய்துவிடுகிறது.

ஓட்டுப் பொறுக்கிகளைச் சாக்கு வைத்து வழங்கப்பட்டுள்ள இத்தீர்ப்பு, காரணம் ஏதும் கூறாமல் எந்த நடவடிக்கையையும் தடை செய்யும் வாய்ப்பைக் காவல் துறைக்கு வழங்குகிறது. எல்லா வகையான போராட்டங்களையும் வெறுக்கும் மேட்டுக்குடி வர்க்கத்தின் அரசியலற்ற மனோபாவத்திற்கு சட்டத் தகுதி வழங்கியிருக்கிறது இந்தத் தீர்ப்பு.

சட்டப்பிரிவு - 25 இன் கீழ் மத உரிமை என்ற பெயரில் இந்து மதவெறியர்களின் உரிமை சட்டப்படி அங்கீகரிக்கப்படுகிறது; சட்டப்பிரிவு - 19 வழங்கும் கருத்துரிமையும், அரசியல் உரிமைகளும் சட்டப்படியே பறிக்கப்படுகின்றன.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பாசிசம் சட்டரீதியாக அங்கீகரிக்கப்படுகிறது; ஜனநாயகம் சட்டப்படியே தடை செய்யப்படுகிறது.

■ சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

# சாதியம்: எதார்த்தம் எழுப்பும் சில கேள்விகள்



கடந்த இரண்டு ஆண்டுகளாக, ''தலித்திய அரசியல்'' பிரமுகர்களிடையேயும், ''தலித்திய சித்தாந்தப் படைப்பாளி''களிடையேயும், அதிலிருந்து மாறுபடுவதாகக் கூறிக்கொண்டு அதே அரசியலை முன்வைக்கும் ''ஒடுக்கப்பட்டோர் விடுதலை''யின் மொத்தக் குத்தகைதாரர்களிடமும் ஒருவித மிதப்பு தெரிகிறது. ''பார்த்தீர்களா! தென் மாவட்டச் சம்பவங்கள் நாங்கள் அனுமானித்தபடியே வர்க்கப் பிரச்சனையையும் இனப்பிரச்சினையையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு சாதியப் பிரச்சினை முன்னுக்கு வந்து உடனடித் தீர்வு காண வேண்டியதாகி விட்டது. இது அம்பேத்கர் நூற்றாண்டு விழாவையொட்டி ஏற்பட்டுள்ள தலித் எழுச்சியைக் குறிக்கிறது. சாதிப் பிரச்சனைக்குத் தீர்வுகாணுவதன் மூலமாகத் தான் சமூக மாற்றம் - புரட்சிக்கு மக்களை அணிதிரட்ட முடியும். நாங்கள் அனுமானித்தபடி தமிழ்நாடு தழுவிய ஒரு வானவில் கூட்டணி உருவாகி வருகிறது'' என்று பெருமையோடு தம்முதுகிலேயே தட்டிக் கொள்கின்றனர்.

ஆனால், உண்மையோ இதற்கு நேர்மாறானதாக உள்ளது. ஆதிக்க வெறியர்களின் திட்டமிட்ட தாக்குதலும், தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னியல்பான பதிலடியும்தான் சாதிப் பிரச்சினையை முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறது. இது இந்துமத வெறியர்களின் திட்டமிட்ட தாக்குதலும், சிறுபான்மை மத்தினரின் பதிலடியும் மதப்பிரச்சினையை முன்னுக்குக் கொண்டு வந்திருப்பதைப் போன்றது தான். மற்றபடி இது தலித் அமைப்புகள் எதுவும் திட்டமிட்டுக் கட்டமைத்த போராட்டங்களினால் உருவான எழுச்சியல்ல அல்லது சில ''அறிவுப்பிழைப்பு வாதி'களால் முன்மொழியப்படுவதைப் போல தாழ்த்தப்பட்ட மக்களின் திட்டமிட்ட எதிர்க் கலாச்சார நடவடிக்கைகளின் வளர்ச்சிப் போக்கில் இந்த ''எழுச்சி'' உருவாகவும் இல்லை.

இடதுசாரி அரசியலை நிராகரித்து அதற்கு மாற்றாக, ''தலித் அரசியலை'' முன்வைப்பவர் எவராயினும் பின்வரும் இறுதி இலக்கு - திட்டத்தையே சாராம்சமாகக் கொண்டுள்ளனர். ''பார்ப்பனியம், முதலாளியம் என்கிற இரட்டை எதிரிகளுக்கு எதிராக ஒடுக்கப்பட்டவர்களை சாதிய ரீதியில் அடையாளம் கண்டு ஒன்றிணைத்து ஆதிக்க சாதிகளின் ஆதிக்கத்தை வேரறுக்கும் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவமளித்து அதனுடன் முதலாளிய எதிர்ப்பை இணைப்பது என்கிற வகையில் மரபு வழிப்பட்ட இடதுசாரி அரசியலில் இருந்து தலித் அரசியல் வேறுபட்டு நிற்கும் என்று'' அறிவித்துள்ளனர். ''தாழ்த்தப்பட்டோர் + பிற்படுத்தப்பட்டோர் + சிறுபான்மையோர் ஒன்றிணைந்த சமூகப் புரட்சியே தமது இறுதி இலக்கு எனப் பிரகடனப் படுத்தியுள்ளனர். (பார்க்க: 'தலித் அரசியல்')

ஆனால் இன்றைய எதார்த்த நிலைமையோ, ஒன்றிணைக்கப் போவதாக அடையாளங் காட்டப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதிகளும் பிற்படுத்தப்பட்ட சாதிகளும் தென் தமிழகம் முதல் வடக்கே பீகார் - உ.பி. வரை எங்கும் எதிரெதிர் முகாமில் நின்று ஒன்றை ஒன்று வெட்டிச் சாய்த்துக் கொண்டிருக்கின்றன. இப்போது முன்னுக்கு வந்திருப்பது பொதுவான சாதிப்பிரச்சினை அல்ல. குறிப்பாக பிற்படுத்தப்பட்ட சாதிகள், தாழ்த்தப்பட்ட சாதிகளை அடக்கி ஒடுக்குவதும், அதற்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் பதிலடி தருவதும்தான். ''தலித்'' அமைப்புகள் என்று சொல்லிக் கொள்பவைமட்டுமல்ல, பிற்படுத்தப்பட்ட சாதிகளின் சமூக நீதிக்காக நிற்பவர்களும் கூட பதில் சொல்ல வேண்டிய கேள்வி இது தான்: தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஐக்கியம் என்கிற நோக்கத்திற்கும் தாழ்த்தப்பட்ட சாதிகளும் பிற்படுத்தப்பட்ட சாதிகளும் பகை முரண்பாடு கொண்டு நிற்கும் இன்றைய எதார்த்தத்துக்கும் இடையிலான இடைவெளியைக் கடப்பது எப்படி?

சமூகநீதி எனப்படும் இட ஒதுக்கீடு போன்ற சலுகைகள் என்று வரும்போது தாங்களும் கல்வி உரிமை, சமூக உரிமை மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட சூத்திர சாதியினர் தாம் என்றும்; சமுதாய - அரசியல் வாழ்வில் தாங்கள் ஆண்டைகள், சத்திரியர்கள் என உரிமை பாராட்டும் ஆதிக்க சாதியினராகவும் நடந்து கொள்ளும் பிற்படுத்தப்பட்ட சாதிகளிடம் எத்தகைய அணுகுமுறை மேற்கொள்வது? தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நீக்கும்படியும், தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் கற்பழிக்கப்படுவதைக் கேவலமான முறையில் ஆதரித்தும் பேசும் முலயம் சிங்யாதவ் போன்ற ''சமூக நீதியாளர்''களிடம் எந்தவகை ஒன்றிணைவு வைத்துக் கொள்வது?

சமூக நீதி, வகுப்புரிமைக்காகப் போராடுபவை என்று பெரியாரியத்தால் வரவேற்கப்பட்ட சாதிச் சங்கங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சாதி - தீண்டாமை ஒடுக்குமுறைச் சக்திகளின் மையமாக இருக்கும்போது என்ன செய்வது? இங்கிருந்து சாதீய ரீதியில் ஒன்றிணைவதைச் சாதிப்பது எப்படி? சாதீய ரீதியில் அடையாளங்கண்டு கொண்டு அணிதிரண்டதன் விளைவுதானே தென்மாவட்ட சாதிப் படுகொலைகள்? சாதி ரீதியிலான அடையாளத்தைக் கைவிடாமல், மறுதலிக்காமல், சாதீய அடையாளங்களை அழித்துக் கொள்ளாமல் இறுதி இலக்கை அடைவது எப்படி?

''தலித் அரசியல்வாதி''களுக்கு இது நன்றாகவே தெரியும். பிற்படுத்தப்பட்ட சாதிகளின் ஆதிக்கத்தை எதிர் கொள்ளாமல் தீண்டாமை - சாதி ஒழிப்பு சாத்தியமே இல்லை என்று அவர்களுக்குத் தெரியும். பின்வருமாறு அவர்களே கூறுகின்றனர். ''தாழ்த்தப்பட்டோரும் பிற்படுத்தப்பட்டோரும் ஒன்றிணைவதற்கு மிகப்பெரிய தடையாக இருப்பது தீண்டாமைக் கொடுமை; தீண்டாமையை ஒழிக்காமல் இந்த இணைவு சாத்தியமில்லை. இந்த இணைவு (தலித்துகள் + பிற்படுத்தப்பட்டோர்) சாத்தியமாகாமல் இங்கே சமூகப்புரட்சி சாத்தியமில்லை'' என்று பிரகடனப்படுத்தியுள்ளார்கள் (பார்க்க: 'தலித் அரசியல்')

''தீண்டாமை - சாதிக் கொடுமைகளுக்கு மூலமுதற் காரணம் பார்ப்பனீயம் தான்; நடைமுறையில் அதை அமலாக்குபவர்களாக முன்பு பார்ப்பன - வேளாள உயர்சாதியினரும் இடைநிலைச் சாதியினரும் விளங்கினர்; காலனிய ஆட்சிக்குப் பிறகு, பார்ப்பனர்கள் நகரங்களை நோக்கி இடம்பெயரத் தொடங்கிய பிறகு தீண்டாமை - சாதிக் கொடுமைகளை நிறைவேற்றுகிற பொறுப்பை முழுமையாக இடைநிலைச் சாதியினர் அதாவது பிற்படுத்தப்பட்ட சாதியினர் ஏற்றுக் கொண்டனர்; நில அடிப்படையிலான கிராமப்புற ஆதிக்கம் என்பது பார்ப்பனரிடமிருந்து பிற்பட்ட சாதியினரிடம் கைமாறியது; பிற்படுத்தப்பட்ட சாதியினர் அவ்வப்பகுதிகளில் ஆதிக்க சக்திகளாக மாறினர். இவர்களை அடித்தளமாகக் கொண்டே எல்லா அரசியல் கட்சிகளும் கட்டமைக்கப்பட்டன; கிராமப்புறங்களில் நடைபெறும் தீண்டாமைக் கொடுமைகளுக்கெல்லாம் பிற்படுத்தப்பட்ட சாதியினரே காரணமாகியுள்ளனர். எந்


படிப்பகம்

www.padippakam.com

தெந்த சாதி எங்கெங்கு பெரும்பான்மையாக இருக்கிறதோ அதைப் பொறுத்து பிற்பட்டசாதியினர் தீண்டாமை ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளுகின்றனர்; அது வன்னியராக, முக்குலத்தோராக, நாயுடுவாக, அல்லது செங்குந்தராக இருக்கலாம்; ஆங்காங்கு சிறுபான்மையாக உள்ள இதர பிற்படுத்தப்பட்ட சாதியினரும் அவர்களுடன் இணைந்து நிற்கின்றனர்; ஆதிக்க சாதியினர் பெரும்பான்மையாக ஆக்கிரமித்துள்ள அரசு, காவல்துறை முதலியன இக்கொடுமைகளுக்குத் துணை போகின்றன'' இவையெல்லாம் தலித்தியர்களாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட யதார்த்த நிலைமைகள்.

*சாதி ரீதியிலான பிரச்சினை - ஒடுக்குமுறை முன்னுக்கு வரும்போது வர்க்க ஒற்றுமை, வர்க்க ரீதியிலான தீர்வுக்கு வாதிடுவதும், வர்க்க ரீதியிலான ஒற்றுமை - வர்க்கப் போராட்டத்தை முதன்மைப்படுத்துவோரைப் பார்த்து சாதிய ரீதியில் அடையாளங்காண மறுத்து, சாதிப் பிரச்சினைக்குத் தீர்வுகளை மறுப்பதாகச் சாடுவதும் ஆகிய இந்த இரட்டை வேடம்தான் எல்லா தலித்திய அமைப்புகளின் நிலைப்பாடு.*

ஆனால் இந்நிலைமை நீடிப்பதற்கும் தலித்தியர்கள் கூறும் காரணங்களும், தீர்வுகளும் சரியானவையா? ''தலித்களுக்கெதிரான இத்தகைய பிற்படுத்தப்பட்டோரின் ஒன்றிணைவு என்பது பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியில் வேரூன்றிக் கிடக்கும் பார்ப்பனீயக் கருத்தியலின் விளைவுகளேயாகும். பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியில் இப்பிரச்சினை குறித்த விரிவான பிரச்சாரம் முன்னெடுக்கப்படாதது அவர்கள் இத்தகைய பார்ப்பனீயக் கருத்தியலிலிருந்து விடுபடாமல் இருப்பதற்கு ஒரு காரணம் எனலாம்'' என்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டவர் களுக்கெதிராக பிற்படுத்தப்ப்ட்ட சாதியினரின் தீண்டாமைக் கொடுமைகள் நீடிப்பதற்குக் காரணம் அவர்களிடையே வேரூன்றிக் கிடக்கும் பார்ப்பனீயக் கருத்தியல் மட்டும் தானா? பொருளியல், சமூகவியல்,.அரசியல் (புதிய பொருளாதார - கிரிமினல்மயமாதல் போன்ற) நலன்கள் கிடையாதா? பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியில் விரிவான பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டிருந்தால் பார்ப்பனீயக் கருத்தியலில் இருந்து அவர்கள் விலகியிருப்பார்களா? நீதிக் கட்சி காலத்தில் இருந்து, குறிப்பாக பெரியார் மேற்கொண்ட பிரச்சாரமே பார்ப்பனீயக் கருத்தியலில் இருந்து பிற்படுத்தப்பட்டவர்கள் விலக வேண்டும் என்பதும் தாழ்த்தப்பட்டவர்களுடன் அவர்கள் பார்ப்பனீய எதிர்ப்பில் ஒன்றிணைய வேண்டும் என்பதும் தானே!

இந்தப் பிரச்சினைக்கு நேரடியான, வெளிப்படையான, சரியான தீர்வை முன்வைப்பதற்குப் பதிலாக, வெறும் சொல்லாடல் பித்தலாட்டங்களையே வைக்கிறார்கள், 'தலித்தியப் பேராசிரியர்கள்'.

''மொத்தத்தில், பார்ப்பனியமும் முதலாளியமுமே நமது எதிரிகள்' என்கிற அம்பேத்கரின் வழிகாட்டலில் தலித் அரசியல் இயங்கும். தீண்டாமை ஒழிப்பை முதன்மைப்படுத்தி தலித்துக்கள் தமக்குள்ளும் இதர ஒடுக்கப்பட்ட பிரிவினருடனும் அய்க்கியமாகி தீண்டாமை ஒதுக்கங்களுக்கு எதிரான அத்துமீறல்களை மேற்கொள்வதில் முன் நிற்கும். தீண்டாமை ஒழிப்பு, பார்ப்பன மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதிகளின் ஆதிக்க ஒழிப்பு என்பன முதலாளிய ஒழிப்புடனும் இவற்றைக் கட்டிக்காக்கும் அகில இந்திய அரசு எதிர்ப்புடனும் இணைந்தவை என்கிற வகையில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையோர், தொழிலாளி வர்க்கம் ஆகியவற்றை ஒன்றிணைத்து பார்ப்பனியம், முதலாளியம் என்ற இரட்டை எதிரிகளை நோக்கி இயங்கும்''. (பார்க்க தலித் அரசியல் பக். 47)

இந்தச் சொல்லாடல் எவ்வளவு மோசடியானது, சுய முரண்டுடையது என்று இதைக் கட்டவிழ்த்துப் பிரித்துப் பார்த்தாலே புரியும். பிற்படுத்தப்பட்ட சாதிகளின் ஆதிக்கம், தீண்டாமை ஒதுக்கங்களுக்கு எதிராக சாதி ஆதிக்க ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பை முதன்மைப்படுத்தி பிற்படுத்தப்பட்ட சாதிகளுடன் தாழ்த்தப்பட்ட சாதிகள் ஐக்கியமாக வேண்டும், ஒன்றிணையவேண்டும் என்பதுதான் ''தலித்திய அறிஞர்களின்'' அரசியல்! ஆனால் இதே அறிஞர்கள் தாம், இதே அறிக்கையில்தான் தாழ்த்தப்பட்டோரும் பிற்படுத்தப்பட்டோரும் ஒன்றிணைவதற்கு மிகப் பெரும் தடையாக இருப்பது தீண்டாமைக் கொடுமையும், பிற்படுத்தப்பட்ட சாதிகளின் சாதி ஆதிக்கமும் தான் என்று சான்றுகளுடன் வாதிடுகிறார்கள். இப்படி முன்னுக்குப் பின் முரணாகத் தீர்வு சொல்வது மோசடி தவிர வேறென்ன? இந்தத் தீர்வைக் கொண்டு போய்த் தென் மாவட்டங்களில் அமல்படுத்தி தாழ்த்தப்பட்டவர் - பிற்படுத்தப்பட்டவரை ஒன்றிணைக்க வேண்டியதுதானே!

---

பரந்துபட்ட மக்களை, தொழிலாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என்று வர்க்க ரீதியாகவும், சமூகத் தட்டுகளாகவும் அணிதிரட்டி அமைப்பாக்கி அவரவர் தொழில், பிரிவு ரீதியான கோரிக்கைகளுக்காகப் போராடி, பலத்தைச் சேர்த்து இறுதியில் பெருமுதலாளிகள் - பெரு நிலப்பிரபுக்களை எதிர்ப்பது போலிக் கம்யூனிஸ்டுகளின் நடைமுறைக் கொள்கை - அணுகுமுறை. இதன் ஒரு பகுதியாக, தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி ஆதிக்கம் - தீண்டாமைக் கொடுமை எதிர்ப்பை இப்போது சேர்த்துக் கொண்டுள்ளார்கள்.

ஆனால் மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் நடைமுறைக் கொள்கை - அணுகுமுறை அதிலிருந்து வேறுபட்டது அதைப் பொருளாதார - தொழிற்சங்கவாதம் என்று - நிராகரிக்கிறார்கள். அதற்கு நேர்மாறாக, பரந்துபட்ட மக்களை வர்க்க ரீதியாகவும் சமூகத் தட்டுக்கள் - பிரிவுகளாகவும் அணிதிரட்டி அமைப்பாக்கி அவரவர் தொழில், பிரிவு ரீதியிலான கோரிக்கைகளுக்காக மட்டுமின்றி, அவரவர் அரசியல், சமூக, பண்பாட்டுக் கோரிக்கைகளுக்காகவும், இதே போன்று பிற பிரிவு, வர்க்கங்களின் கோரிக்கைகளுக்காகவும், புரட்சிகர போர்த் தந்திர, தந்திரோபாய அரசியல் முழக்கங்களின் அடிப்படையிலும் இயக்கங்களைக் கட்டியெழுப்ப வேண்டும் என்கிறார்கள்.

மேற்கண்ட இரண்டு அணுகுமுறைகளையும் பாகுபடுத்திப் பரிசீலித்துப் புரிந்து கொள்ளாமல், இரண்டும் ஒன்றுதான் என்றும் வர்க்க - வகுப்பு ரீதியில் அணிதிரட்டும்

*வர்க்க ரீதியாகவோ, சாதி ரீதியாகவோ வகை பிரித்து விளக்காமல் சமூக பொருளியல், அரசியல் ரீதியில் ஒடுக்கப்படும் அனைவரும் ''ஒடுக்கப்படும் மக்கள்'' என்று பொத்தாம் பொதுவான வரையறுப்பு வைத்து பித்தலாட்டம் செய்வது ஏன்? ''ஒடுக்கப்பட்ட மக்கள்'' என்பதில் தாழ்த்தப்பட்ட மக்கள் தவிர எந்தெந்தப் பிரிவினர் அடங்குவர்? பிற்பட்ட சாதியினரை சாதி ரீதியில் ஐக்கியப்படுத்தவா, வர்க்க ரீதியில் ஐக்கியப்படுத்தவா?*



படிப்பகம்

www.padippakam.com

முயற்சி என்றும் அது சாதியமும் - தீண்டாமையும் இருக்கும் வரை இது சாத்தியமே இல்லை என்றும் ''தலித்திய அறிஞர்கள்'' நிராகரிக்கிறார்கள்.

இதற்கு மாறாக, மாற்றாகவும் இடது சாரி அரசியலில் இருந்து தலித் அரசியல் வேறுபட்டும் நிற்பதாகச் சொல்லுவது, ''ஒடுக்கப்பட்டவர்கள் சாதீய ரீதியில் அடையாளங் கண்டு ஒன்றிணைதல் ஆதிக்க சாதிகளின் ஆதிக்கத்தை வேரறுக்கும் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதனுடன் முதலாளிய எதிர்ப்பை இணைத்தல் தான்'' என்கிறார்கள்.

சரி, இதைச் சாதிப்பது எப்படி? ஏற்கனவே சுட்டிக் காட்டியவாறு, பிற்படுத்தப்பட்ட சாதிகள் கடைப்பிடிக்கும் தீண்டாமை சாதி ஆதிக்க ஒழிப்புக்கு பிற்படுத்தப்பட்ட சாதிகளுடனே ஐக்கியமாவது என்கிற முன்னுக்குப் பின் முரணாகவும் மோசடியாகவும் தீர்வு வைக்கிறார்கள். நடைமுறைக்கான வழிகாட்டுதலாக, ''இட ஒதுக்கீடு, நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம், கல்வி / மருத்துவம் போன்ற அடிப்படை உரிமைகள், வணிகமயமாதலைத் தடுத்தல், காவல்துறைக் கொடுமைகளை எதிர்த்தல் போன்ற அடித்தட்டு மக்களனைவரையும் பாதிக்கும் பிரச்சினைகளில் பார்ப்பனியத்துக்கு எதிராக உள்ள இதர ஒடுக்கப்பட்ட பிரிவினருடன் அய்க்கியமாதல் அவசியம்'' என்று தீர்வு வைக்கிறார்கள்.

''அடிப்படை உரிமைகள்'', ''அடித்தட்டு மக்களனைவரையும் பாதிக்கும் பிரச்சினைகள்'' என்று கவனமாகத் ''தலித் அறிஞர்கள்'' குறிப்பிடுபவை எவையும் ஆதிக்க சாதிகளின் சாதி ஆதிக்கத்தை வேரறுக்கும் நடவடிக்கைகள் அல்ல. வர்க்க ஒற்றுமைக்காக எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று மரபுவழி இடதுசாரிகள் கூறுகிறார்களோ அவற்றைத்தான் பிற்படுத்தப்பட்டோருடன் ஐக்கியமாவதற்கான வழியாகச் சொல்லுகிறார்கள்.

அடுத்து சாதிய ரீதியிலான அடையாளங் கண்டு ஒன்றிணைதல் என்பது மரபு வழி இடதுசாரிகளிடமிருந்து தலித் அரசியலை வேறுபடுத்துவதாகச் சொன்னார்களே அதன்படி பிற்படுத்தப்பட்ட சாதிகளுடன் சாதிய ரீதியில் ஒன்றிணைவதற்கான வழி சொல்லவில்லை. ''ஒடுக்கப்பட்டவர்கள்'', ''அடித்தள மக்களனைவர்'', பார்ப்பனியத்துக்கு எதிராக உள்ள இதர ஒடுக்கப்பட்ட பிரிவினருடன் ஐக்கியமாதலைத் தான் சொல்லுகிறார்கள். சற்று உற்று நோக்கின் இப்படிச் சொல்வது வர்க்கம் - வகுப்பு ரீதியிலான ஐக்கியத்தைத்தான் குறிக்கிறது.

மரபுவழி இடதுசாரிகள் கடைப்பிடிக்கும் வர்க்க ரீதியிலான ஐக்கியம் - அணி திரட்டுதல் தவறான அணுகுமுறை என்று நிராகரித்தவர்கள். அதிலிருந்து மாறுபட்ட அணுகுமுறைத் தீர்வை முன் வைப்பதுதான் அரசியல் நேர்மை, நாணயமாகும். ''தலித்திய அறிஞர்கள்'' முன் வைக்கும் சாதிய ரீதியில் அடையாளங் கண்டு ஐக்கியமாதல் - அணிதிரட்டுதலுக்கான வழிமுறைகளைத் தானே சொல்ல வேண்டும். ஆனால் இது உண்மையில் தவறான சாத்தியமற்ற அணுகுமுறை என்பதைத் தெரிந்தே இதை மூடி மறைத்து, ஒடுக்கப்பட்ட மக்கள், உழைக்கும் மக்கள், அடித்தள மக்கள் என்றும், பிற்படுத்தப்பட்ட சாதி என்று குறிப்பிடுவதற்குப் பதில் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் என்றும் குறிப்பிட்டு, பிற்படுத்தப்பட்டோர்களுடன் ஐக்கியமாகி - அணி திரட்டலை முன் வைக்கிறார்கள். சாதியப் பிரச்சினைதான் உடனடியான, முக்கியத்துவமளிக்க வேண்டியவை என்று வாதிடும் அவர்கள், அந்தப் பிரச்சினைகளைத் தவிர்த்துவிட்டு வர்க்க ரீதியிலான, பொதுவான வேறு பிற பிரச்சினைகளை கையிலெடுத்துப் போராடுவதை முன் வைக்கிறார்கள்.

இதே அறிவு நேர்மையற்ற, நாணயமற்ற முறையில் நடந்து கொள்ளும் தலித்திய அரசியலின் இன்னொரு அவதாரம் தான், ''தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்'' எனப்படும் குழு.

''ஆதிக்க வகுப்பு (வர்க்கங்)களை, ஆதிக்க சாதிகளை எதிர்த்தும் அவை முட்டுத்தாங்கி இருக்கிற அரசை வீழ்த்தியும் ஒடுக்கப்பட்ட மக்கள் அரசை நிலை நிறுத்துவதன் வழியிலேயுமே சாதி ஆதிக்கத்தை ஒழித்திட முடியும்'' என்று த.ஒ.வி.இ. அமைப்பு அறிக்கை கூறுகிறது.

கூலிப் பிரச்சினைக்குக் கூட பிற்படுத்தப்பட்ட கூலி விவசாயிகளுடன் ஐக்கியமாக முடியாது, ''தாங்களும் தாழ்த்தப்பட்டவர் என்கிற அளவில் சாதியக் கொடுமையை உணரும் முற்போக்கு சிந்தனையுள்ள பிற்படுத்தப்பட்ட அல்லது மேல் சாதியினருடன் மட்டும் தான் ஐக்கியமாக முடியும்'' என கறாராக - கடுமையாக வாதாடும் த.ஒ.வி.இ குழு ஆதிக்க வர்க்கங்களை - ஆதிக்கச் சாதிகளை எதிர்த்து அரசை வீழ்த்தும் முதன்மைப் பணிக்கு எப்படி ஒடுக்கப்பட்ட மக்களைத் திரட்ட முடியும்? வர்க்க ரீதியாகவோ, சாதி ரீதியாகவோ வகை பிரித்து விளக்காமல் சமூக, பொருளியல், அரசியல் ரீதியில் ஒடுக்கப்படும் அனைவரும் ''ஒடுக்கப்படும் மக்கள்'' என்று பொத்தாம் பொதுவான வரையறுப்பு வைத்து பித்தலாட்டம் செய்வது ஏன்? ''ஒடுக்கப்பட்ட மக்கள்'' என்பதில் தாழ்த்தப்பட்ட மக்கள் தவிர எந்தெந்தப் பிரிவினர் அடங்குவர்? பிற்பட்ட சாதியினரை சாதி ரீதியில் ஐக்கியப்படுத்தவா, வர்க்க ரீதியில் ஐக்கியப்படுத்தவா?

வர்க்க ரீதியிலான ஐக்கியம் - அணி திரட்டலை வர்க்க அரசியலை நிராகரித்துவிட்டு, சாதி ரீதியிலான பிரச்சினையே இந்த நாட்டின் முதன்மையான, தனிச் சிறப்பான, விதி விலக்கான பிரச்சினை என்று ஒருபுறம் வாதாடும் இந்த எல்லா வண்ண ''தலித்தியவாதிகளும்'' தாம் பிரகடனப்படுத்தியுள்ள சமூக, அரசியல் புரட்சிக்கு எப்படி, யார் யாருடன் ஐக்கியம் என்று வரும் போதுமட்டும் வர்க்கம், வர்க்க அரசியல் என்று பேசுவது எந்த வகையில் யோக்கியமானது?

வாதத்திற்கு இந்த மேதாவிகள் என்ன வேண்டுமானாலும் பேசலாம் எழுதலாம். ஆனால் நேரடிப் பிரச்சினை, அனுபவம் என்று வரும் போது எப்படிப் பட்ட கோழைகளாகிப் போகிறார்கள் என்பதற்குத் தென்மாவட்ட ''சாதிச் சண்டைகளே'' சான்றுகளாக உள்ளன.

''தென் மாவட்டங்கள் இரத்த விடியல்'' என்ற தலைப்பில் த.ஒ.வி.இ. ஏடு தன் நிலைப்பாடுகளை ஜூன் 97 இதழில் எழுதியுள்ளது. 'தென் மாவட்டங்களில் திரும்பும் இடமெல்லாமல் வெட்டும் குத்தும், தீ வைப்பும், கடையடைப்புமாக நடக்கும் இரத்த விடியல் சாதி ஒழிப்புக்கு அணி திரண்டோ தங்களின் சமூக ஏழ்மைத்தனங்களை ஒழிக்க வெகுண்டோ அல்ல. சாதிச் சகதிகள் நிலைத்திருக்க வேண்டும், தங்களின் சாதித் தலைவர் (கிருஷ்ணசாமியைக் குறிப்பிடுகிறார்கள் - ஆ.(குழு) டாடா சுமோ காரில் போக வேண்டும் என்பதற்காகத்தான்' என்று முடிந்த அளவு கொச்சைப்படுத்துகிறது.

''தனக்குக் கீழான சாதியைச் சார்ந்த எவர் பெயரிலும் போக்குவரத்துக் கழகமோ, மாவட்டமோ வைத்து விட்டாலோ அல்லது தன்தலைவனைச் சிறைப்படுத்தி விட்டாலோ தன் வயிற்றுக்குக் கஞ்சி இருக்கிறதோ இல்லையோ அதற்காக ஆடி உயிரிழப்பதே இன்றைக்கு மக்கள் எழுச்சி என்று சொல்லப்படுகிறது'' ஒடுக்கும் தேவர், நாடார், நாயுடு சாதிகள் ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்ட சாதிகள் ஆகிய இரண்டு தரப்பையும் கண்டிக்கும் இதுதான் ஒடுக்கப்பட்டோர் விடுதலையா? இது போலிக் கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாட்டை விட மோசமானதில்லையா?

சாதி ரீதியிலான பிரச்சினை - ஒடுக்குமுறை முன்னுக்கு வரும்போது வர்க்க ஒற்றுமை, வர்க்க ரீதியிலான தீர்வுக்கு வாதிடுவதும், வர்க்க ரீதியிலான ஒற்றுமை - வர்க்கப் போராட்டத்தை முதன்மைப்படுத்துவோரைப் பார்த்து சாதிய ரீதியில் அடையாளங்காண மறுத்து, சாதிப் பிரச்சினைக்குத் தீர்வுகளை மறுப்பதாகச் சாடுவதும் ஆகிய இந்த இரட்டை வேடம்தான் எல்லா தலித்திய அமைப்புகளின் நிலைப்பாடு.


படிப்பகம்

www.padippakam.com

# ம.க.இ.க. - வி.வி.மு. - பு.மா.இ.மு. நடத்தும் சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம் போராட்டச் செய்திகள்

## இது மழைக்காலம்
## சாதித் தீ அணைக்கும் பிரச்சார மழை தமிழகமெங்கும் பொதுக் கூட்டங்கள்

பருவ நிலையால் வானமும், சாதியத்தால் மக்கள் மனமும் இருண்டு கிடக்கும் சூழலில் அவ்விருட்டைக் கிழிக்கும் மின்னலாகத் தமிழகமெங்கும் நடைபெற்று வருகிறது சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம். தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகவும், 'மேல்' சாதித் திமிருக்கு எதிராகவும் குழப்பமற்ற தெளிவான சொற்களில் இடியாய் முழங்கி வருகிறார்கள் எமது பேச்சாளர்கள்.

கடந்த ஒரே மாதத்தில் தமிழகத்தின் 45 இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடந்துள்ளன. மழையால் கூட்டம் ரத்து செய்யப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து கூட்டங்கள் நடைபெறவுள்ளன. கூட்டம் நடைபெறும் இடங்களிலெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் பெருவாரியாகத் திரண்டு வருகின்றனர். சாதிப் பிரச்சினை பற்றி ஓட்டுக் கட்சிகளின் மழுப்பலான பித்தலாட்டப் பேச்சுக்களையும், தலித் தலைவர்கள் எனப்படுவோரின் சவடால்களையும் மட்டுமே இதுவரை கேட்டுச் சலித்திருந்த மக்கள் மத்தியில் இக்கூட்டங்கள் புதியதொரு நம்பிக்கையை உருவாக்கியுள்ளன.

''நாங்கள் ஜெயலலிதா ஊழல், கருணாநிதி ஊழல் பற்றிப் பேசுவதற்காக இந்தக் கூட்டம் நடத்தவில்லை; உங்களிடம் இருக்கும் ஊழலைப் பற்றிப் பேசத்தான் இந்தக் கூட்டம்'' என்று சாதி வெறிக்கும், சாதியச் சிந்தனைக்கும் எதிராக பேச்சாளர்கள் நேருக்கு நேர் தாக்குதல் தொடுக்கும்போது கூட்டத்திலிருக்கும் 'மேல்' சாதியின குற்றவுணர்வில் நெளிகிறார்கள். நியாயத்தை உணர்வதற்கான முதல்படி அது.

## இது குளிர் காலம்
## சாதிவெறியர்களின் நடுக்கம் - கணப்புக்கு காவல்துறை!

தனித் தேநீர்க்குவளை, தனிச்சுடுகாடு போன்ற தீண்டாமைக் கொடுமைக்களுக்கெதிரான போராட்ட அறிவிப்பு வந்தவுடன் சில இடங்களிதல் தலையிட்டு தனிக்குவளையை அகற்றியிருக்கிறது போலீசு. ஆனால் பல இடங்களில் தனிக்குவளையையும் - சட்டம் ஒழுங்கையும் சேர்த்துப் பாதுகாக்கிறது. போராடும் தோழர்கள் மீது மிருவெறித் தாக்குதல் தொடுக்கிறது. கம்பம் - பாளையம் பகுதியில் நடந்து வரும் போராட்டம் இதற்குச் சான்று.

'உலகப்புகழ்' இளையராஜா பிறந்த பண்ணைப்புரத்தில் அவருடைய உறவினர்களுக்கு, அதாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிக்குவளை; அந்த ஊரில் முடி வெட்ட முடியாது; துணி சலவைக்குப் போட முடியாது. தனிக்குவளை வைத்திருக்கும் டீக்கடை உரிமையாளர்களில் ஒருவர் தி.மு.க; இன்னொருவர் பாரதீய ஜனதா. பக்கத்திலுள்ள பல்லவராயன் பட்டியில் தாழ்த்தப்பட்டவர் எப்பேர்ப்பட்ட ஆபீசரானாலும், போலீசே ஆனாலும் தெருவில் செருப்பு போட்டு நடக்க முடியாது; சைக்கிளில் ஏறிப் போக முடியாது; மேற்கூறிய ஊர்களிலும், சுற்று வட்டாரத்திலுள்ள அத்தகைய ஊர்களிலும் ''தனிக்குவளையை உடைப்போம்! செருப்பு போட்டு நடப்போம்'' என்று போராட்டத்தை அறிவித்தது வி.வி.மு. போராட்ட நாள் அக்டோபர் 31.

போராட்டத்திற்குப் பல நாட்கள் முன்னரே அப்பகுதி அமைப்பாளர் தோழர் மோகனையும், இன்னும் பத்து தோழர்களையும் வீடு புகுந்து கைது செய்து கொலை முயற்சி எனப் பொய் வழக்குப் போட்டு சிறையில் அடைத்தது போலீசு. அப்படியும் போராட்டம் நிற்காது எனத் தெரிந்தவுடன் மேலும் 10 முன்னணியாளர்கள் கைது - பொய்வழக்கு - சிறை! ஆனால் அதற்கப்புறமும் போராட்டம் நிற்கவில்லை. அக்டோபர் 31-ம் தேதியன்று தனிக்குவளையை உடைப்பதற்காகத் தேநீர்க் கடைமுன் திரண்ட தோழர்களை வெறித்தனமாகத் தாக்கியது சாதிவெறி கொண்ட போலீசு. அம்பலகாரர் சாதி வெறியர்களும், பா. ஜனதா காலிகளும் போலீசு பாதுகாப்புடன் தோழர்கள் மீது கல்லெறிந்தனர். காயமடைந்த தோழர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தனிக்குவளைகள் நிச்சயம் நொறுங்கும்; எமது தோழர்களின் உறுதியை நொறுக்க முடியாது.

## இது கோடைக்காலம் வேத சாத்திரங்களுக்குத் தீ - பார்ப்பனியத்தைச் சுடும் அனல்!

சாதி - தீண்டாமைக் கொடுமையை உருவாக்கி அவற்றை நியாயப்படுத்தும் பார்ப்பன - இந்து மதத்தின் வேத, புராண, சாத்திரக் குப்பைகளை எரிக்கும் போராட்டம் அக்டோர் 28-ம் தேதி தமிழகமெங்கும் நடைபெற்றது. போராட்டம் குறித்து முன் கூட்டியே பரவலாக விளம்பரம் செய்திருந்ததாலும், முந்தைய நாட்களில் போராட்ட விளக்கத் தெருமுனைப் பிரச்சாரம் விரிவாகச் செய்யப்பட்டிருந்ததாலும் 'தருமத்தைக்' காப்பாற்றுவதற்காக எல்லா ஊர்களிலும் போலீசார் உரிய நேரத்தில் 'அவதரித்து' விட்டார்கள்.

சில இடங்களில் சாத்திரங்களுக்குத் தீ மூட்டும் முன்னே லத்திக் கம்புகள் சகிதமாக தோழர்களைத் தடுத்தாட்கொண்டார்கள். மற்ற இடங்களில் சாதித்தீயை அணைக்க முடியாத காவல்துறை மனுதர்மத்திற்கு வைத்த தீயைப் பாய்ந்து வந்து அணைத்தது; எரித்த தோழர்களைக் கைது செய்தது. மத உணர்வைப் புண்படுத்தியாக கிரிமினல் வழக்கு பதிவு செய்து தோழர்களை ரிமாண்டு செய்தது மதுரைப் போலீசு. தென்மாவட்டம் என்பதால் மனுதர்மப் பாசம் துடித்தது போலும்!

## இது நிகழ்காலம்
## இறந்த காலத்தின் கல்லறைமீது எதிர்காலத்தின் தூதுவர்கள் நடத்தும் தாக்குதல்!

இந்து மதத்தின் இழிவைச் சகிக்க முடியாமல் கிறித்தவ மதத்திற்கு ஓடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அங்கேயும் 'இளைப்பாறுதல்' தனிக் கல்லறையில்தான் கிடைத்தது. திருச்சியில் உள்ள கத்தோலிக்கக் கிறித்தவக் கல்லறைக்குக் குறுக்கே 600 அடி நீளச்சுவர், 'உயர்' சாதி கிறித்தவப் பிணங்களை தீட்டுப்படாமல் பாதுகாக்கிறது. 1969-இல் பெரியாரால் இது கண்டனம் செய்யப்பட்டது. 1974-இல் தாழ்த்தப்பட்ட கிறித்தவ மக்களே திரண்டு சென்று இடித்த சுவரை மீண்டும் எழுப்பிவிட்டனர் சாதி வெறியர்கள் - இதற்குப் பின்பலம் த.மா.கா. எம்.பி. அடைக்கலராஜ்.

இந்தக் கல்லறைச் சுவர் உடனே இடிக்கப்பட வேண்டும் - இல்லையேல் இடித்துத் தள்ளுவோம்! என்று திருச்சி பகுதி ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள் அறிவித்துள்ளனர். கல்லறைத் திருநாளன்று அங்கேயே பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. நகரெங்கும் விரிவான பிரச்சாரமும் மேற்கொள்ளப்படுகிறது.

கல்லறைச் சுவர் இடிக்கப்படும்; தேவனின் சாம்ராச்சியமா, கல்லறைச் சுவரா எதை இடிபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பாதிரிகள் முடிவு செய்து கொள்ளட்டும்.

திருவரங்கத்தின் கருவறைக்கும் நாங்கள்தான்; திருச்சி கல்லறைக்கும் நாங்கள்தான்!



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

மேல் பொன் நிறத்தில் 'அடுக்குமாடி போல' போண்டா. பக்கத்தில் வெளிர் பச்சை நிறத்தில் புதினா சட்னி, கசாப் புக் கடைக்கு முன்பு கண்டுண்ட நாயைப் போல வெகுநேரம் அதையே வெறித்துப் பார்த்தவர், பின்பு சுற்றிலும் சாப்பிடுவர்களைப் பார்வையிட்டார்.

சர்வர் நெருங்க, பக்கத்து மேசையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவரின் தட்டைக் காண்பித்து ''அதுல ஒன்னு கொண்டு வாங்க'' என்று கண்ணை மூடிக்கொண்டு கிணற்றில் குதிப்பது போலத் துணிந்து அடித்தார். மேசைக்கு வந்த புதியவகை பூரியை வாராது வந்த மாமணிபோல வாஞ்சையாய் நோக்கினார். ஒரு சிக்கல், அதிலுள்ள எலுமிச்சம் பழத் துண்டைக் கடிப்பதா, பிழிவதா என்ன செய்வது என்று குழம்பிப் போனார். சுற்றிலும் செய்து காண்பிக்கும் நபர்களைத் தேடி ஏமாந்தார்.

மீள வழியில்லை. எடுத்து வாயிலேயே பிழிந்து கொண்டார். சர்வர் தூரத்திலிருந்து பார்த்த பார்வை இருக்கிறதே, ''உனக்கெல்லாம் ஏண்டா இந்த ஹோட்டல்?'' என்று அதற்குப் பொழிப்புரை போடலாம். அப்படியொரு பார்வை அது.

மீண்டும் சோதனை. கைகழுவும் நவீன வகைக் குழாயை திருகி, இழுத்து, திருப்பி.... பிறகு அழுத்தித் தண்ணீர் வரவழைப்பதற்குள் கண்களில் தண்ணீர் வராத குறைதான். அடுத்து கை துடைக்கும் சவ்வுக் காகிதத்தை கண்டவருக்கு மீண்டும் குழப்பம். எடுக்கலாமா, விடலாமா என யோசித்தவர் அவ்வளவு வெளுப்பானதைத் தொடத் தயங்கி தன்வழியே ஒதுங்கினார். ஒரு வழியாக கல்லாப் பெட்டியை தாண்டி வரும் வரைக்கும் அவர்பட்ட பாடு ஒரு 'ருசிகரமான' அனுபவம். கடைசியாக படியறங்கிய பிறகு கடையை ஒருமுறை அவர் நிமிர்ந்து பார்க்கும் பார்வை இருக்கிறதே போதுமடா சாமி என்பது போல!

இன்னுமொருவரின் புலம்பலோ வேறுவிதம் ''மினி மீல்ஸாம், மினி மீல்ஸ், பேசாம ஒரு சாப்பாடே சாப்பிட்டிருக்கலாம் வயிறும் ரொம்பல, வாயும் ரொம்பல போயி ரெண்டு வாழைப்பழம் சாப்பிட்டாத்தான் பசி அடங்கும்,'' என்று குடுத்த காசு செரிக்காமல் 'விபத்துக்குள்ளானதை' நொந்து கொண்டார்.

இப்படி ருசி எனும் மாயமானுக்கு பின்னே ஓடிக் களைத்துப் போய் திரும்புபவர்கள் ஒரு புறம். இன்னொருபுறம் புதிய, புதிய உணவு வகைகளிடம் குடியுரிமை கேட்பவர்கள். வாழ்க்கையின் அசல் சுவையை அனுபவிக்கச் சொல்லும் 'காட்பரீஸுடன்' கை குலுக்கி 'புதிய உலகத்தில்' திரும்பிப் பார்க்காமல் போய்க் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்.

உணவு விடுதிக்குள் புகுந்து சர்வரிடம் 'என்னப்பா இதத்தவிர வேறு எதுவும் புதுசா இல்லையா?' என்ற சலிப்போடு ''தந்தூரில புதுசா ஏதாவது கொண்டு வா'' என்று ஆர்டர் தந்துவிட்டு மேசைக்கு வரப்போகிற உணவு என்னவாய் இருக்கும் என்ற த்ரில் கலந்த சுவைஞர்களின் நாக்கை கட்டிப் போட உணவுச் சங்கிலியும் நீண்டு கொண்டே போகிறது.

பாக்கர், எஸ்ட்ரா பாவு, மஷ்ரூம் பீசா, புல்கா, அல்லூ பாலக், மட்டர் பான்னர், ஸ்டஃப்டு கேப்ஸிகம், - என்ன இது? வானவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கும் புதிய கிரகங்களா? வாடிக்கையாளர்களுக்காக உணவுத்துறை விற்பன்னர்கள்

**இப்படி நேரம், காலம் இன்றி விதம்விதமாகச் சாப்பிடுவதையே லட்சியமாக, பொழுது போக்காக, பண்பாடாக ஆக்கிக் கொண்டவர்களின் தேடுதல் வேட்டையின் திசைகளில் தான் புட்டி உணவுகள், பாஸ்ட் புஃட் உணவு விடுதிகள் எந் நேரமும் அனுபவிக்கச் சொல்லி அழைக்கின்றன.**

வாணலியில் கண்டு பிடித்திருக்கும் புதுப்புது ருசியான ரகங்கள்தான் இவை. இன்னும் பஞ்சவர்ண தோசை, நவரத்ன குருமா என்று பாரம்பரியத்தை இழைத்துக் கொடுக்கும் பலகார வகைகளும் உண்டு.

சாப்பாட்டு 'ராமர்கள்' ஒன்றை ருசி பார்த்த பிறகு இன்னொன்றுக்கு ''இரு உன்னை இன்னொரு நாள் வச்சிக்கிறேன்'' என்று பொருளாதார நிலைமைக்கேற்றவாறு பொருமிக் கொள்கிறார்கள். இந்த ''ருசிகண்டேன், ருசியே கண்டேன்'' என்று போகின்ற பேர்வழிகள் கடைசியில் ''தின்னுகெட்ட பரம்பரை சார்'' என்று பெருமை பேசவும் ஆரம்பித்து விடுகிறார்கள்.

ருசிகண்ட பூனைகளுக்கு நேரமேது, காலமேது? வெளியூர் செல்லும் பேருந்துகள் இரவு ஒரு மணி இரண்டு மணிக்கு நிறுத்தும் இடங்களில் பெப்சியும், கொக்கோகோலாவையும் விட்டு கட்டுபவர்களைப் பார்த்தால், வெகு தூரத்திலிருந்து வைக்கோல் வண்டியை இழுத்து வந்து இளைப்பாறும் மாட்டுக்குக்கூட மயக்கம் வரும். ஒருவருக்கொருவர் போட்டி போட்டுச் செய்யும் சந்தை கலாச்சாரத்தின் நள்ளிரவுத் தாக்குதலை அங்கே பார்க்கலாம்.

இப்படி நேரம், காலம் இன்றி விதம்விதமாகச் சாப்பிடுவதையே லட்சியமாக, பொழுதுபோக்காக, பண்பாடாக ஆக்கிக் கொண்டவர்களின் தேடுதல் வேட்டையின் திசைகளில்தான் புட்டி உணவுகள், பாஸ்ட் புஃட் உணவு விடுதிகள் எந்நேரமும் அனுபவிக்கச் சொல்லி அழைக்கின்றன.

இந்த ருசிகர உலகத்தில் நுழைபவர்களின் 'மன அமைதியை'க் கெடுக்கும் வண்ணம் பசி எடுத்தவர்களின் கூட்டம் பார்வையிலும் பட்டுவிடாதபடி. கண்ணாடிச் சுவர்களுக்குள் கலகலப்பாக நடக்கிறது வியாபாரம். பின்னே பழைய சோறாய் இருந்தால் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பலாம், சில்லி சிக்கனாய் இருந்தால், காசில்லாதவனுக்குக் கதவைச் சாத்தடி கதைதான். திருப்தி இல்லாமல் ருசி தேடி அலைபவர்களை உலகத்தரத்திற்கு உயர்த்த கென்டகி போன்ற பன்னாட்டு உணவுத் தயாரிப்பாளர்கள் கோழிக்கறியின் நளபாகத்தைக் காட்டி உலகின் பெரும் பாகத்தை வளைத்துப் போடுகிறார்கள்.

போதை தலைக்கேற தலைக்கேற எவ்வளவுதான் சுவையான உணவு இருந்தாலும் ''என்னடி சாப்பாடு?'' என்று எட்டி உதைக்கும் குடிகாரனைப் போல ''இன்னும் ருசி, இன்னும் ருசி'' என்று எதிலும் அடங்காமல், காயசண்டிகையின் பசிநோய் போல ருசி நோய் கொள்பவர்களுக்கு மத்தியில்தான், உழைக்கக் கூடிய மக்களோ,

''தங்க உளுந்தலசி, தாம்பளம் போல் தோஜ சுட்டு'' என்று தன்வீட்டில் தோசை சுட்டுச் சாப்பிடுவதையே இலக்கியமாக்கி வியக்கின்றனர். விதைத்து, நட்டு, அறுத்து உழைத்து வந்த அந்த நெல்மணியிலிருந்து ஒரு பலகாரம் செய்து சாப்பிட முடியாத அவர்களின் நிலைமையைக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தால் இந்த சோத்துக் கட்சிக்காரர்களின் நாக்கில் முளைத்திருக்கும் சுவைமொட்டுகள் தானாக மரத்துப் போய்விடும்.

• சுடர் விழி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com

# தொலைக்காட்சி செய்திகள்

### சன் அலைவரிசை!

தி.மு.க. என்று காட்டிக் கொள்ளாமல், நடுநிலையாளர் போல இருந்து கொண்டு, அதே நேரத்தில் தி.மு.க. அலைவரிசையிலேயே பேட்டி எடுப்பது எப்படி என்பதை ஒரு நுண்கலையாகவே வளர்த்து வருகிறார் "சன் டி.வி." வீரபாண்டியன்.

அவருடைய, கேள்விகளின் காரம் ஆளைப் பொருத்து கூடும், குறையும்.

சமீபத்தில் எழுத்தாளர் பிரபஞ்சனைப் பேட்டி கண்ட வீரபாண்டியன் "தியாகராஜ சுவாமிகளைப் பற்றி சமீபத்தில் ஒரு பத்திரிகையில் ரொம்பவும் கீழ்த்தரமாகத் தாக்கி எழுதியிருந்தீர்கள். இது சரியா" என்றார். "இப்போது நீங்கள் இப்படிச் சொன்ன பிறகு தாக்கியது போதாதோ என்று நினைக்கிறேன்" என்று சொல்லி தமிழ் நாட்டில் தமிழிசை புறக்கணிக்கப்படுவதை சுட்டிக் காட்டினார் பிரபஞ்சன்.

உடனே, "இசைக்கு ஏது மொழி" என்ற வழக்கமான பார்ப்பனக் கும்பலின் வாதத்திற்குத் தாவினார் வீரபாண்டியன். "மொழி கிடையாது என்றால் தமிழில் பாடவேண்டியது தானே" என்றார் பிரபஞ்சன்.

சற்றுக் கடுமையானவை என்று கருதத்தக்க கேள்விகளைக் கேட்க நேரும்போது "இதை நான் கேட்கவில்லை - மக்கள் பேசிக்கிறாங்க" என்று சமாளிப்பவரான வீரபாண்டியன் இவையெல்லாம் தன்னுடைய கேள்விகள்தான் என்று தெளிவுபடுத்தியது குறிப்பிடத் தக்கது.

பண்ருட்டி ராமச்சந்திரனைப் பேட்டி எடுக்கும்போது உங்களிடம் ஏது மக்கள், நீங்கள் லெட்டர் பேடு கட்சி என்று நக்கல் செய்த வீரபாண்டியன் 'மக்கள் சக்தி இயக்க'த் தலைவரிடம் அப்படிப் பேசவில்லை. வாயைத் திறந்தாலே வாஷிங்டன், லாஸ் ஏஞ்சல்ஸ் என்று அமெரிக்க புராணம் பாடும் இந்த பி.ஜே.பி - பினாமியிடம் அதீதப் பணிவு காட்டியது மட்டுமல்ல, செத்துப் போன சங்கராச்சாரியைப் பற்றிக் குறிப்பிடும்போது, "நடமாடும் தெய்வம்" என்றார் வீரபாண்டியன்.


சுதந்திரதினமன்று ஒரு கலந்துரையாடலில், "ஆண்டு முழுவதும் பொழுது போக்கு என்ற பெயரில் சீரழிவைப் பரப்பிவிட்டு, ஆண்டுக்கு ஒரு நாள் இப்படியொரு நிகழ்ச்சியை நடத்தி என்ன பயன்?" என்று சூடு வைத்தார் காவல்துறை அதிகாரி திலகவதி

வீரபாண்டியனுக்கு உடனே வீரம் வந்தது. "விழிப்புணர்ச்சியைப் பரப்பத்தான் இப்படி நிகழ்ச்சிகளை நடத்தி உங்களையெல்லாம் கூப்பிடுகிறோம். நீங்க சொல்றத பார்த்தா உங்கள கூப்பிட்டதே தப்புங்கிற மாதிரியில்ல இருக்கு" என்று வெடித்தார்.

இதைவிட அநாகரிகமாக ஒரு பேட்டியாளர் நடந்து கொள்ள முடியுமா?

### ஏவி.எம்.மின் தமிழ்த் தொண்டு!

தமிழ்த் திரையுலகின் திசையும், தரமும் யாரால், எப்படி உருவாக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புபவர்கள் ராஜ் டி.வி.யில் ஏவி.எம் சரவணனும், எஸ்.பி. முத்துராமனும் அளித்த நிகழ்ச்சியைப் பார்த்திருக்க வேண்டும்.



வெளிப்புறப் படப்பிடிப்பு என்பது ஒரு போக்காக வளர்ந்து செட்டிங் போட்டுப் படமெடுக்க நாதியில்லாததால் ஏ.வி.எம். ஸ்டூடியோ காற்று வாங்கத் தொடங்கிவிட்டதாம். இந்த நிலைமையை மாற்ற வேண்டுமானால் தமிழ் சினிமாவின் போக்கையே திசை மாற்றும்படி ஒரு கதை தயார் செய்ய வேண்டும் என முடிவு செய்தார்களாம். 'முரட்டுக் காளை'யை உருவாக்கினார்களாம்.

அது மட்டுமல்ல, ரஜினியை சூப்பர் ஸ்டாராக்குவது போல திட்டமிட்டே திரைக்கதை, பாடல்களையும் அமைத்தார்களாம். "பொதுவாக எம் மனசு தங்கம் - ஒரு போட்டியின்னு வந்துவிட்டா சிங்கம்" என்ற பாடல் மூலம் வெறும் ஸ்டார் ரஜினியை சூப்பர் ஸ்டாராக மாற்றியது நாங்கள்தான் எனப் பெருமை பொங்க அறிவித்தார்கள் எஸ்.பி. முத்துராமனும், ஏவி.எம். சரவணனும்.

இந்தத் 'தமிழ்த் தொண்டுக்கு' இவர்களுக்கு என்ன பரிசளிக்கலாம்?

### அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும்...

விஜய் தொலைக்காட்சியில் சட்டப் பேரவைத் தலைவர் பழனிவேல்ராசனின் பேட்டியிலிருந்து :

"இன்றைக்குப் பிரபலமாக இருக்கிறதே வடபழனி முருகன் கோயில் இதை இந்த நிலைக்கு உருவாக்கியவர் என் தந்தையார் பி.டி. ராசன்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அவர் அமைச்சராக சொந்த மாவட்டத்திற்குப் போகக்கூடாது என்பது பிரிட்டிஷ் காலச் சட்டம். என் தந்தையாருக்கோ பழனி முருகனை அடிக்கடி வழிபட வேண்டும் என்ன செய்வது?

வடபழனியில் முருகன் சிலையை வைத்துக் கொண்டு ஒரு சாமியார்தான் உட்கார்ந்திருந்தார். அதை ஒரு பிரபல கோயிலாக்கி, தென்பழனி போல வடபழனியை உருவாக்கி பிரபலமாக்கியவர் என் தந்தையார்தான்.

அதேபோல இன்று கோடிக்கணக்கான தமிழர்கள் சபரி மலைக்குப் போகிறார்கள் என்றால் அதற்கும் என் தந்தையார்தான் காரணம்.

சபரி மலைக் கோயில் ஒரு தீ விபத்தில் எரிந்து போனவுடனே அதை மறு நிர்மாணம் செய்யும் திருப்பணியை நீங்கள்தான் முன்நின்று செய்ய வேண்டும் என்று மலையாளத்துக்காரர்கள் என் தந்தையை வேண்டினார்கள்.

சபரிமலை கோயிலுக்காக தமிழகத்தில் நிதி திரட்டி திருப்பணி செய்து கொடுத்தது மட்டுமல்ல, அய்யப்பன் விக்கிரகத்தை தமிழ்நாடு முழுவதும் எல்லா ஊர்களுக்கும் கொண்டு சென்று அய்யப்பன் வழிபாட்டை தமிழகமெங்கும் பரப்பிய பெருமை என் தந்தைக்கு உரியது."

ஆண்டுதோறும் அய்யப்பன் ஆபாச விளக்கக் கூட்டத்தைச் சுவைபட நடத்தும் திராவிடர் கழகத்தினர், தங்களது பிரச்சாரத்தின்போது மேற்படி 'கசப்பான' உண்மையையும் கணக்கில் கொள்வார்களா என்பதே கேள்வி.

படிப்பகம்